


# கலைக்கதிர் - புத்தர் மலர்






# உணவு
# உற்பத்தியின்
# முன்னணியில் நிற்பவை
# DPF பம்புகள்


'DPF' பம்புகளின்
விசேஷ அம்சங்கள்

குறைந்த செலவில்
அதிக தண்ணீர்
★ நீடித்த உழைப்பு
★ நிசப்தமான ஓட்டம்
★ குறைந்தகவனிப்பு



மோட்டாருடன் இணைக்கப்பட்ட
'DPF பம்பு

பால் 'பேரிங்குகள்
பொருத்தப்பட்ட 'DPF'
பம்புகள் 2" முதல் 8"
வரை எல்லா சைஸ்
களிலும் கிடைக்கும்.



DPF பெல்ட் டிரைவ் பம்பு

## தண்டாயுதபாணி பவுண்டரி பிரைவேட் லிட்.,

பாப்பநாயக்கன்பாளையம்,

போன்: 219 கோயமுத்தூர். தந்தி: மோட்டார் பம்பு

# குமரன் மில்ஸ் லிமிடெட்,

புதுப்பாளையம், கோயமுத்தூர்.

(மேட்டுப்பாளையம் ரோட்)

1935-ல் ஸ்தாபிக்கப்பெற்றது.

●

மூலதனம், மானேஜ்மெண்டு, தொழிலாளர்
ஆக எல்லாம் நம் இந்திய மயம்

முதல்தரமான இந்த மில்லில் தயாராகும்
சுதேசி நூலையே வாங்குங்கள்

20, 40, 60 நெ. நூல் தயாரிக்கப்படுகிறது

குணம் நிறைந்த சரக்கை உற்பத்தி செய்வதே
நிர்வாகஸ்தர்களது நோக்கம்.

●

கோவையில் சிறப்பாக விளங்கும் மில்களின் வரிசையில்
இந்த மில்லும் சேர்ந்திருக்கிறது.

கல்வி, தொழில் அனுபவம் நிறைந்தவர்களால்
நிர்வகிக்கப் பெற்று வருகின்றது.

வருடா வருடம் பங்குதாரர்கள் நல்ல
டிவிடெண்டு பெற்று வருகிறார்கள்

●

*Managing Agents :—*

N. APPUSWAMY NAIDU & CO.

# இன்ஷ்யூரன்ஸ்

## ஆயுள், நெருப்பு, கப்பல், மோட்டார் விபத்து

முதலிய இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள், மற்றும் லாபகரமான ஏஜன்சி நிபந்தனைகள் பற்றிய விபரங்களுக்கு எழுதவும்.

# பயனீர்

## பயர் & ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

தலைமை ஆபீஸ் : ஜெயில் ரோடு, கோயமுத்தூர்.

தந்தி : "PROTECTION" போன் : "121"



# "கலைக்கதிர்"

## கலையின் களஞ்சியம்

## சிந்தனைச் செல்வம்

* கண்ணுக்கும், கருத்துக்கும் விருந்து

** கலை நலம் மிக்கது; எழில் மிகப்பெற்றது

*** பார்த்தால் படிக்கத் தூண்டும்

**** படித்தபின் பாதுகாக்க எண்ணம் வரும்

ஆண்டுச் சந்தா ஐந்து ரூபாய்

கலைக்கதிர்

பீளமேடு போஸ்டு, கோயமுத்தூர்.

## அச்சுக் கலையிலே முன்னேற்றம் !!

**உலகிலேயே மிகவும் சிறந்த அச்சு இயந்திரங்கள்**


எனப் பெருமை பெற்ற

# "ஹைடில்பர்க்"

இயந்திரங்கள் எங்கள் அச்சகத்தில் மூன்று வேலைசெய்கின்றன
என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

குறித்த காலத்தில் வேலையை முடிக்கவும்
நேர்த்தியான பல வண்ணச் சித்திர வேலைகளுக்கும்
கவர்ச்சிகரமான அச்சு வேலைகளுக்கும்
சிறந்தது இந்த 'ஹைடில்பர்க்' இயந்திரம்.

'ஹைடில்பர்க்'
இயந்திரம்
அச்சகத்தாருக்குச்
செய்யும் சேவை
மகத்தானது.




உயர்ந்த அச்சு வேலைகளுக்கு:

**கலைக்கதிர் அச்சகம், கோயமுத்தூர்.**

---

'ஹைடில்பர்க்' இயந்திரங்களின் விற்பனையாளர்கள்:

## ஈஸ்ட் ஏஷியாடிக் கம்பெனி (இந்தியா) லிட்.,

மதராஸ்.

தந்தி: "Baltex" செங்கோட்டை / "Baltex" கோயமுத்தூர்

போன்: 36, செங்கோட்டை / 1116, கோயமுத்தூர்

# தி பலராமவர்மா டெக்ஸ்டைல்ஸ் லிட்.,

செங்கோட்டை.

(திருவாங்கூர்-கொச்சி ராஜ்யம்)

---

**தற்சமயம் உள்ள கதிர்கள்: 11,904**

**மேற்கொண்டு நிர்மாணிக்கும் கதிர்கள்: 6,000**

---

கைத்தறித் தொழிலின் மகோன்னத வளர்ச்சி
உயர்ந்த ரக நூலையும், மிக நேர்த்தியான துணியையும்
பொறுத்திருக்கிறது.

❊

எங்கள் ஆலை மிக நேர்த்தியான உயர் ரக
நூல்களை உற்பத்தி செய்கிறது.

❊

20-ம் நெம்பர் முதல் 80-ம் நெம்பர் வரை
கார்டெட் நூல்
மற்றும்
20-ம் நெம்பர் கோன் நூலையும்
உற்பத்தி செய்கிறோம்.

---

மானேஜிங் ஏஜண்டுகள் :

**மெஸர்ஸ். கரையாளர்**

**&**

**ரங்கசாமி நாயுடு ஸன்ஸ் கம்பெனி.**



# கலைக்கதிர் புத்தர் மலர்

மலர்—8 ★ ஜுன் – 1956 ★ இதழ்—6

ஆசிரியர் :
**ஜி. ஆர். தாமோதரன்,**
B. Sc. Elec., B. Sc. Mech. (Durham), M. I. E. E. (London),
A. M. I. E. (India) M. P.

## இந்த இதழில்:

| | | |
|---|---|---|
| பௌத்த மதத்தின்... | ... சுவாமி பரமாத்மானந்தர் | 2 |
| கொப்பரைத் தேங்காய் | ... திரு. அ. ச. ஞானசம்பந்தம் | 9 |
| கூவத்துப் பௌத்தச் சிலைகள் | ... ,, சீனி. வேங்கடசாமி | 14 |
| புத்தரின் பெருமை | ... சுவாமி சித்பவானந்தர் | 18 |
| கற்பகச் சோலை | ... திரு. தா. ஏ. ஞானமூர்த்தி | 25 |
| புத்தரும் பௌத்தமும் | ... காந்தியடிகள் | 32 |
| ஆசியாவில் பௌத்த மதம் | ... திரு. க. இராமதாஸ் | 37 |
| எண்ணின் பிரிவுகள் | ... ,, எஸ். நாராயணசாமி | 46 |
| புத்த ஞாயிறு | ... ,, இரா. இருசு | 49 |
| குளிரொளி | ... ,, எஸ். உதயமூர்த்தி | 54 |
| புத்தர் பிறந்தார் | ... 'சிந்தனை' | 59 |
| பறவை இனத்தில் பரதவர்கள் | ... திரு. கே. எஸ். மகாதேவன் | 62 |
| இடை வழி | ... ,, சிரசிவாலிதெரோ | 65 |
| புத்தர் நெறி தமிழ் நெறி | ... ,, தெ. பொ. மீ. | 67 |
| புத்தர் கதைகள் | ... ம. ரா. போ. குருசாமி | 69 |
| இது செய்தி | ... | 76 |

படங்கள் : பக்கங்கள்: 4, 24, 33, 34, 35, 36, 69.

அட்டைப் படம் : மதுராவில் கிடைத்த திருவுருவம்
உதவியவர்கள் : இந்திய அரசாங்கம்

'கலைக்கதிர்' இதழில் வெளியிடும் கட்டுரை, கதை முதலியவற்றின் கருத்துகட்கு அவற்றை எழுதிய நேயர்களே பொறுப்புடையவர்கள்.

# பௌத்த மதத்தின் மறுமலர்ச்சியும் வருங்காலமும்

சுவாமி பரமாத்மானந்தர்

*

அண்மையில் நிகழவிருக்கும் வைகாசி விசாகம் மூவகையிற் புனிதமாய மங்கல நாளாகும். உலக நோன்பிற் பலகதியுழந்து தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராய்த் திகழ்ந்த புத்தர்பெருமான் பிறந்ததும், பொதுவறி விகழ்ந்து போதமுற்றதும், காயச் சட்டையைக் கழற்றி யெறிந்ததும் அந்நன்னாளிலே யாம். அத் திருநாளைத் தவப்பெரு நாளாகக் கருதி விழாக் கொண்டாடி வீடெய்தத் திட்டமிட்டுள்ள அரசியலாரது செயலும் போற்றத் தக்கதே. அரசியலார் தமது சின்னத்தில் பௌத்த முத்திரையையும், கொள்கைகளிற் பௌத்த மதச் சார்புள்ள மொழிகளையும் பயன்படுத்தி வருதலும், பௌத்தமத முனிவரொடு கலந்து இந்துக்கள் அம்மதக் குரவர்களைப் பணிதலும் நமது நாட்டின் சமய சமரச மனப்பான்மைக்கு அறிகுறிகளாக விளங்குகின்றன; அன்றியும் பௌத்த மதத்தி லுள்ள சிறப்பான சிரத்தைக்கும் சான்றாகின்றன. பகவான் புத்தரிடம் கொண்டுள்ள நம் ஈடுபாடு நாடோறும் பெருகியும் வேரூன்றியும் வருவது எவராலும் மறுக்க வொண்ணாததே. கற்றோரும், சிந்தனையில் மிக்கோரும், உலகமெங்கணும் புத்த மதத்தின் கவர்ச்சிக்கு ஆளாகி வருகின்றனர். அவரது 2500-வது ஆண்டு விழாவை நம் நாட்டிலும் ஏனைய நாடுகளிலும் மக்கள் ஊக்கத்தோடு கொண்டாடி வருகின்றனர். இத்தகைய மனக்கவிதல் மக்களுடைய அறிவைப் பற்றியே எழுவ தென்னலும் பொருத்தமாகாது. ஆதலின் இவ்வமயம் நம் உள்ளங்களிலே இப்பிறந்த நாளை யொட்டிப் பின்வரும் சில கேள்விகள் தோன்றுதல் இயல்பே யாகும். உலகமெங்கும் பௌத்த மதக் கிளர்ச்சி காணப்படுதலில் என்ன உட்கருத்து வெளியாகின்றது? இவ் வீடுபாடு எந்த அளவிற்குப் புத்தரின் ஏதமிலாக் குணநலத்தினை ஆதாரமாக உடையது? எந்த அளவிற்கு அவரது கொள்கைகளையும் சித்தாந்தங்களையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது? வருங்காலத்திற் பௌத்த மதத்திற்கும் பிற மதங்கட்கும் உள்ள தொடர்பு யாதாகும்? இவ் வினாக்கட்குரிய விடைகளை ஆராய்ந்து உண்மையைக் காணல் நம்மனோர்க்குரிய கடமைகளில் ஒன்றாகும்.

பௌத்தமத மறுமலர்ச்சிக்குக் காரணமாயினவர் பெரும்பாலும் மேற்றிசைப் பண்டிதர்களே யாவர். கீழைத் தேயக் கல்வியிலும் பண்பாட்டிலும் முதன்முதலில் தொடர்புகொண்ட காலமுதல் அன்னார், வேதங்களையும் வேதாந்தத்தையும் கற்றது போன்றே, தமக்குரிய சிறப்பான முறைப்படி மிக்க ஊக்கத்தோடும், துறைபோகக் கற்கும் பேரவா வோடும் பௌத்த மதக் கல்வியையும் பயின்று வரலானார். இவர்களது மாண்புமிக்க முயற்சியே பௌத்த மத மறுமலர்ச்சிக்கு அடிப்படையாக

அமைந்த அறிவுச் செல்வத்திற் பெரும் பகுதியை உலகிற்கு ஈந்தது என்ற உண்மையை, நமக்கு இன்னுத தாயினும், நாம் அனைவரும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். புத்தபிரானது மதத்திற்குப் பணி செய்வதில் எவ்வளவு உண்மையான ஆர்வமும் இடைவிடா உழைப்பும் அவர்கள்பால் அமைந்திருந்தன என்பதற்கு வெளிச் சான்றுகளாவன: பாலி மொழிநூற் சங்கம், கீழைநாட்டுப் புனித நூற்ருெகுதிகளின் தொடர், பௌத்தரின் புனித நூற்ருெடர், ஜெர்மானியப் பாலி மொழிச் சங்கம் முதலிய பல. பிரம்மஞான சபையார் (தியாசபிக்காரர்) ஆதியிற் செய்த பிரசங்கங்களும், சர். எட்வின் ஆர்நால்டு எழுதிய அழகிய புகழ்வாய்ந்த 'ஆசியஜோதி' எனும் பாடலும் ஓரளவிற்கு மறுமலர்ச்சியைத் தூண்டின என்னலும் தவருகாது.

பௌத்த மதத்தின் பிறப்பிடமான இந்தியாவிலேயே அதன் வளர்ச்சிக்குப் பிரம்மஞான சபையினரது பிரச்சாரம் மட்டும் அன்று; சுவாமி விவேகாநந்தர் அதனிடம் கொண்ட இணையற்ற மன நிலையும், இந்து மதத்திற்கும் பௌத்த மதத்திற்கும் உள்ள உண்மையான தொடர்பைத் தமது சொந்த மேதையால் அவர் சரியாக எடுத்துக் காட்டியமையுமே காரணமாயின. சுவாமி விவேகாநந்தரது வாழ்க்கையிலும் போதனைகளிலும் கற்ருர்க்கு இறும்பூதை விளைக்கக் கூடியது யாதெனில், அக் கருணை மூர்த்தியின் மீது அவர்க்கு இயல்பாக எழுந்த வியத்தகும் அன்பே, மெய்யான பக்தியே என்னலாம். சுவாமி மாணவராக வாழ்ந்து வந்த காலத்துக் கண்ட புத்தபிரானின் தரிசனம் அவரது வாழ்க்கை முழுவதிலுமே புகுந்து பதிந்து, அதனை உருவாக்கிய பெருஞ்சக்திகளில் ஒன்ருயிற்று. ஒரு நாள் ஒரு சம்பாஷணையில் அவர் கிளந்த ஒரு மொழியி னின்றும் அவர் பிராம்மணரை எதிர்க்கும் மனப்பான்மை யுடையவரென மயங்கிய ஒருவர் அவரைப் பார்த்து "தாங்கள் ஒரு பௌத்தர் என்பதை இதுகாறும் அறிந்திலேன்!" என்று பகர்ந்தனர்; அவ்வமயம் 'அறவாழி அந்தண'ரான அப்பெருமானின் நினைவிஞற் கிளர்ந்த ஞானப் பேருக்கம் அகத்தே விம்ம, முகத்தே ஒளி செறிய, சுவாமிகள் "அம்மையாரே, புத்த பெருமானின் தாசரது தாசரது தாசன் அடியேன், அவரை அனையார் இதுவரை எவரே இருந்தனர்! தமக்கென ஒரு செயலும் செய்தறியாத் தீரர்! உலக முழுவதையும் தழுவிய பெரு நெஞ்சினர்! இளவரசராயும் துறவியராயு மிருந்த அவர் ஒரு சிறு ஆட்டினுக்காகத் தம் உயிரை மகிழ்ந்து ஈய முன்வந்த பேரருளாளர்! ஒரு பெண்புலியின் பசிக்காகத் தம் உடலை வழங்கியவர்! ஒரு பறையனது உபசரணைக்கு இணங்கி அவன்மீது அருளைச் சொரிந்தவர்! நான் சிறுவனு யிருந்தகாலை அவர் என் அறைக்குட் புகுந்தனர், அவரை யான் வீழ்ந்து பணிந்தேன்!" எனச் சொன்மாரி மொழிந்தனர். இன்னெருமுறை அவர் தமது சிஷ்யை ஒருத்திக்குத் தீட்சை அருளும் புனித வேளையில், அவரது ஞானவாழ்வின் முதற்படியாகச் சிவபெருமானது வழிபாடாற்றும் முறையினைக் கற்பித்த பின், நிகழ்ச்சி முழுவதும் புத்தருடைய திருவடிகளிலே மலரிட்டு வணங்குவதிலே முடிவடையுமாறு செய்து, அவளிடம் (தமது வழித்துணையை நாடவரும் ஒவ்வோர் அடியார்க்குமே கூறினர் போன்று) "நிர்வாண நிலையினை எய்துமுன் ஐந்நூறுமுறை பிறந்து தம் உயிரைப் பிறர்க்கு வழங்கிய பேரருட் பெம்மானைப் பின்பற்றுக" என்று புத்தி கூறினர். புத்தர் மன்னுயிர்க்குச் செய்யத் தொடங்கிய பணியினைச் சீர்கேடடைந்த பௌத்த மதம் விட்டுச் சென்ற இடத்தி லிருந்து தொடர்ந்து செய்தற் கெனவே அவதரித்தார் போலத் தோன்றுகிருர் என்பதே எங்களிற் பல்லோரது கருத்தாகும். புத்தர் எந்தக் 'கருத்தை நிறைவேற்றுதற் கெனத் தம் வாழ்வை ஒப்படைத்தாரோ அதனை ஒழுங்காகச் செயல் முறைக்குக் கொணர்தற்கும்

நிறைவு செய்தற்கும் ஏற்ற காலம் தற்காலமே என்றும், அக் குருநாதரது கருத்தினை முற்றும் அறிய இயலாமையாலே சீடர்கள் ஏமாற்றமும் தோல்வியும் அடைந்தனர் என்றும், சுவாமி விவேகாநந்தரே பன்முறை கூறியுள்ளனர். அது எவ்வாறு யினும், ஒன்று நிச்சயம், அதாவது: இந்தியரது ஞானத் துறையிலே பௌதத மதம் தனக்கெனச் சிறப்பான ஓர் இடத்தைப் பெறும் காலம் மீளும் எனில், பெருங் குரவரான சுவாமி விவேகாநந்தரின் நுண்ணறிவும் சமயசமரச போதமும் அந் நிகழ்ச்சிக்குப் பேரளவான ஏதுக்களாகும்.

பௌத்த மதம் இந்து மதத்தின் கண்டனமே யென்றும், இவ் விரண்டும் பொதுவான அடிப்படை ஒற்றுமையற்ற எதிரி மதங்களே என்றும் பல்லோர் கருதிவருவது வெள்ளிடை விளங்கலே யாம். எனினும், பல்வேறு சமயங்களை ஒன்றுக்கொன்று பகை மதங்களெனப் பாவிக்கும் தன்மை பலவகை மதங்களும் தழைத்து வந்த நம் பாரத நாட்டின் இயல்பிற்கு முற்றும் புறம்பானதே யாம். பலவகையான மத சித்தாந்தங்களும், அவ்வவற்றுக் கியைந்த பல்வேறு சாதனங்களும் நம்மிடையே நிலவி வந்ததை எவரும் மறுக்க வொண்ணாது; எனினும், அவை அனைத்தும் மனித வாழ்வின் மாபெரும் பேற்றை அடைதற்குச் சம அளவிற்குப் பயன்தர வல்லனவாம் என்ற கருத்தும் அறிஞர்க் குள்ளே ஊன்றி யிருந்தது. சமயக் கொள்கைகள் சம்பந்தமாக வாதப் போர் நிகழ்ந்துவரினும், அவை அழிவற்ற ஒரே முழுச் சமயத்தின் பற்பல மாண்புற்ற பகுதிகளேயாவன (ஒன்றேயான சமையானுபூதியை அடையப் பல்வேறு துணைகளே யாவன) என்னும் கருத்தும் மேன்மையான இடம் பெற்றிருந்தது. ''ஒன்றது பேரூர், வழி ஆறு அதற்குள'' என்ற திருமந்திர வாக்கும்,

*''வேறுபடும் சமயமெலாம்*
*புகுந்து பார்க்கில்*
*விளங்குபரம் பொருளே*
*நின்விளையாட் டல்லால்*
*மாறுபடுங் கருத்தில்லை,*
*முடிவில் மோன*
*வாரிதியில் நதித்திரள்போல்*
*வயங்கிற் றம்மா''*

என்ற தாயுமானுரது வாக்கும் இக் கூற்றுக்குத் தமிழ்நாட்டில் சான்று பகர்கின்றன. இந்து மதத்திற்கும் பௌத்த மதத்திற்கும் உள்ள தொடர்பு இக் கண்கொண்டு நோக்குவார்க்கே உள்ளவாறே இனிது புலனுகும். இரு மதங்களும் ஒன்றுக்கொன்று புறம்பானவை எனுங் கருத்துப புதுமைக் கருத்தே; அன்னிய நாட்டுச் சரக்கே. கூரிய ஞான நோக்கினுற் கண்டநம் பழைய உண்மை அறிவுக் குழப்பத்தாலும் அறியாமையாலும் மறைக்கப்பட்டு விட்டது. மேலைநாட்டாரது மேற்பரப்புக் காட்சிக்கு அடிமையான யாம் அவர்களது வாக்கை வேதவாக்கென மதிதது்ப் பருகியதன் பயனுக, புதல்வியர் தாயாகிய மதத்தினை எதிர்த்துப் போராடுங் காட்சியைக் காணலானும். தாயகத்தே புதல்வியர் இருந்து வாழவும், முழு வளர்ச்சியை எய்தவும் இடமிலாது போயிற்று என்பதுபோலக் கற்றறிந்தாரிற் பல்லோர் நமது நாட்டிலும் கருதியும் ஒழுகியும் வருவது சகிக்கவொண்ணுததே. மறுமலர்ச்சி எய்தியுள்ள இந்துமதம் அனைத்தையும் உள்ளடக்கித் தொகுத்துக் காணும் காட்சி பெற்று, இழந்த நாடுகளை மீண்டும் கைப்பற்றுவதையும், புதிய நாடுகளைத் தன்னேடு இணைத்து மருவச செய்வதை",ம், அந்தோ! அவர்கள் காண இயலாரயினர்.

புத்துயிர் பெற்றுப் பொலியும் பௌத்த மதத்தின் வடிவம் உணமையாகவே எவ்வாறிருத்தல் வேண்டும்? பிற மதங்களை அடக்கியாள வல்ல ஒரு தனி மதமாக அது வளருமா? வெளிப் பார்வைக்கு

★

எவ்வுடம்பில் எவ்வுயிர்க்கும்
யாதொன்ருல் இடர்எய்தில்
அவ்வுடம்பின் உயிர்க்குயிராய்
அருள்பொழியும் திருவுள்ளம்

○

மதுவொன்றும் மலரடிக்கீழ்
வந்தடைந்தோர் யாவர்க்கும்
பொதுவன்றி நினக்குரித்தோ
புண்ணியநின் திருமேனி

★



இந்திய அரசாங்கம்

(நாளாந்தாவில் கிடைத்த பழைய சிலை)

நாத்திக வாதமெனத் தோன்றும் அதன் கொள்கை மீண்டும் மனிதவர்க்கத்தின் மனத்தே ஆட்சிபுரியும் நம்பிக்கை உள்ளதா? இத்தகையது யாதொன்றும் இனி நிகழாதென்றே யாம் வருத்தத்தோடு அறிவிக்க வேண்டியவராகின்றோம். பௌத்த மதத் தத்துவக் கொள்கைகள் எத்துணை நுண்மையும் தருக்க இயைபும் பெற்றிருப்பினும், காலத்தின் போக்குக்கும் ஞாலத்தின் இயல்பிற்கும் அவை முரணுகும் என்றே நம்புகின்றோம். இதற்கு இரு காரணங்கள் பொதுப்படக் கூறலாகும். முதலாவதாக, விஞ்ஞான ஆராய்ச்சிக்கு எழுச்சி உண்டாயுள்ள இக் காலத்தில், உள்ளது இன்னது என்பதை வற்புறுத்தும் அதன் உடன்பாட்டுப் போக்குக்கு மாருகப் பௌத்த மதம் இதுவன்று எனும் எதிர்மறைக் கொள்கையை அழுத்தமாக உரைக்கின்றது. மனித இயல்பை ஆராயினும், எதிர்மறைக் கொள்கையில் அருவருப்பும், உடன்பாட்டுக் கொள்கையில் பெருவிருப்பும் அதில் இருப்பது தெளிவே. ஆதலின் புத்தரது பெயரால் விளங்கும் தத்துவக் கொள்கைகளைத் துணைக்கொண்டு புத்தர் மீண்டும் மக்களின் அறிவாற்றல்கள்மீது அரசாட்சி செய்தல் இனி நடைபெருது; தத்துவ உலகிலே வேந்தராக வீற்றிருக்கும் சங்கரர்க்கே அது கைகூடுவ தாகும். ஆயினும் அருளாழியான புத்தரின் வியத்தகு வாழ்வும், மனிதரது உள்ளங்களை அள்ளும் அவ்வாழ்வின் கனிவும், துறவும் ஞான விடுதலையும் எனும் அதன் ஞானப் போர் முழக்கமும், 'காணு உயிர்க்கும் கையற்றேங்கும்' தனிப் பெரும் இரக்கமும் — இவையே புத்தமதம் தான் இழந்த நாடுகளைப் பெறுதற்குத் துணைசெய்யப் போவனவாம். புத்த மதத்தின் பெருகும் சிரத்தையால் ஆன்ற பயனை அடைய வேண்டின், புத்தர்பிரானுக்கும் அவரது தத்துவக் கொள்கைகட்கும் உள்ள வேறுபாட்டை நன்கறிவது இன்றியமையாதது.

அறிஞர்களிற் சிலரேனும் இற்றை ஞான்றில் இக் கருத்தினை நோக்கி மனங் கவிதலைக் கண்டு எமக்கு மகிழ்ச்சி கூர்கின்றது. கல்வி யறிவின் வளஞ்செறிந்த இந்நாளிலே கருத்துகட்கோ, சித்தாந்தங்கட்கோ, கொள்கைகட்கோ பஞ்சமில்லை. இன்றும் வழங்கிவரும் கொள்கைகளிலே தருக்க இயைபின்மைகண்டோ தற்கால மனிதன் சமய வாழ்விற்கு மாருக் ஒழுகுகிருன்? தூய லட்சிய வாழ்வின் தரிசனமில்லாக் குறையே அவனது வாழ்வை ஊறுபடுத்தி வருகின்றது. இன்றைய உலகிற்கு வேண்டுவது யாதெனில், நினைவுக் கெட்டாத காலமுதலாகச் சமயம் போதித்துவரும் உண்மைகட்கும் இலட்சியங்கட்கும் ஒள்ளிய தீபங்கள்போன்று ஒளிரும் ஒரு சில வாழ்வுகளே. புத்தரின் வாழ்வு அத்தகையவற்றுள் ஒன்ருகும். ஆதலின் அவரது கொள்கைகளை வற்புறுத்தாது, அவரது தூய வாழ்வையும் ஒழுக்க விழுப்பத்தையும் மக்களின் மனக்கண் முன்னே சிறந்த ஓவியங்களாகத்திகழ வைத்தலே உலகமக்கள் அனைவருடைய உள்ளங்களையும் கவரும் பான்மையதாகும்.

வேறுமதங்களை விரட்டி வெளியேற்றுதல் வாயிலாகவோ, வென்று ஒழித்தல் வாயிலாகவோதான் பௌத்த மதத்தைப் புத்துயிர் பெற்றுப் பொலியச் செய்யலாகும் என நம்புவார் சிலர் உளர். அது ஆசையால் நிகழும் மயக்கமேயன்றி வேறில்லை என்று கூறுதல் மிகையாம். பழைய சரித்திர நிகழ்ச்சியைப் பண்டுபோற் பின்னும் அவ்வண்ணமே எதிர்பார்த்தல் வீணேயாம்; அதுபோற் பழங்கொள்கைகள் பேரளவிற்குப் பொதுவாகப் புதுப்பிக்கப்படுவ தில்லை. ஆதலின் போராடும் இயல்பு பயன்தரத் தக்கதன்று; அறிஞர் அதனை ஒப்பவு மாட்டார். ஜப்பானிலிருந்து வெளியான ஒரு பத்திரிக்கையில் ஓர் அமெரிக்க மங்கையார் செய்த எச்சரிக்கை ஈண்டுக் குறிக்கத் தக்கது:

''பௌத்த மதம் ஒன்றே உலகத்தை உய்விக்க வல்லது என்ற கருத்தை எவ் வடிவத்தி லாவது கூறிவருவது ஒரு தவறு; அதனால் ஜப்பான் உலகிற்கு வழங்கக்கூடிய ஞானப் பணி சிதைவுபடும்.'' பௌத்த மத சித்தாந்தம் பெரிதும் வேண்டப்படா தெனினும், பகவான் புத்தரது ஒழுக்கமாண்பு இந்தியாவிலும் ஏனைய நாடுகளிலும் நாளாக நாளாகக் கணக்கற்ற உயிர்களின் அன்பையும் பணிவையும் வசீகரிக்கும் என்பதை எவரும் மறுக்கவொண்ணாது.

அவரது ஞானவாழ்வின் இலட்சியம் உலக முழுதிற்கும் பொதுவான ஒன்று; அவர் அந்த இலட்சியத்தின் வடிவமாய் ஒளிர்கிறார். அவர் தற்கால மனிதர்க்குக் குறிக்கோள்; ஆண்மையும் தருக்க அறிவும் கரையற்ற கருணையும் குடிகொண்ட அவர் ''ஆரியர்கட்குள்ளே மிக உயர்ந்தவர்,'' ''சற்றும் அறிவுப் பிறழ்ச்சியற்ற ஒரு புருடர்'' — இத்தகைய மாபுருடரே மக்களின் உள்ளமாம் சிங்காதனத்து அமர்ந்து ஆட்சி புரிவார்; ஞானவாழ்க்கையைப் பற்றிய காட்சிகள் அனைத்திலும் அவர்க்கும் இடம் உண்டு. புத்தரது வாழ்வில் அமைந்துள்ள நித்தியமான அம்சம் காலமுள்ளளவும் மக்களைத் தன்பால் ஈடுபடுத்தும். அனைத்துயிர்மீதும் செல்லும் அவரது தூய பேரன்பும் அருளும், மெய்ப்பொருளைக் காண அவர் துடித்த துடிப்பும், துயரத்தால் வெந்துள்ள உலகினரின் மனப்புண்களை ஆற்றும் மாமருந்தான அவரது பேருண்மைத் தரிசனமும், ஞானவாழ்விற்குரிய இன்றியமையாத இயல்புகளை வற்புறுத்தி, அவற்றின்மீது ஒட்டிக்கொண்டு வளரும் கொள்கைகளைப் புறக்கணிக்கும் அவரது அனுபவச் சார்பான மன நிலையும், எல்லாவற்றிற்கும் மேலாக, உயர்ந்த ஞான வாழ்க்கையொடு மன்னுயிர்க்குச் செய்யும் அன்புத் தொண்டினை இணைத்த புதிய மேன்மையும் — இவையனைத்தும் தற்கால மனிதர்களின் மனங்களைத் தடுக்கமுடியாதபடி ஈர்த்து ஈடுபடுத்தும் திறமை பெற்றனவாம். புத்தரைப் பின்பற்றிய சீடர்களின் தத்துவ ஆராய்ச்சிவன்மையாலும், வழக்காடும் வன்மையாலும் பௌத்தம் உலகெலாம் பரவி, ஆறுதலையும், உரைத்தற்குரிய சாந்தியையும் இல்லங்கள்தோறும் நிறைத்த தென்னல் சிறிதும் பொருந்தாது; அவரது வாழ்வே நெஞ்சங்களைக் கொள்ளை கொள்கின்றது. அவரது மன்னுயிரின் நலங்கருதும் மாட்சியே தற்கால மக்களின் உள்ளங்களிலே சிரத்தையை ஊட்டிவிட்டது. புத்தர் தாமே கூறியவண்ணம், ஒரு புருட ரல்லர், யாரும் அடையக்கூடிய ஒரு அனுபூதியே என்பதும் சிந்திக்கத் தக்கது. இந்த அனுபூதியைப் பெற விழைவார் எந்த சமயத்தின் மூலமும் எவ்விதத் தத்துவ ஆராய்ச்சியின் மூலமும் அதனைப் பெறலாகும்; வைதிக புத்த மத சாதனங்களோ சித்தாந்தங்களோ மட்டும் அதற்குத் துணையாக வேண்டும் என்ப தில்லை. இந்நோக்கு நிலையிலிருந்துதான் நாம் பௌத்தமத மறுமலர்ச்சியை வரவேற்கிறோம். இந்து மத மறுமலர்ச்சிக்கும் பௌத்தமதம் இயற்றும் உதவி அவசியமாகு மென்றும் கூறுவோம். ''புத்தரது நெஞ்சமும், சங்கராச்சாரியாரின் அறிவும்'' — இவ்விரண்டின் இணைவே இந்து மதத்தின் வருங்கால நிலையின் வருணனை யென்றும், மனித வர்க்கத்திற்கு மிக உயர்ந்த பேறுவது என்றும் சுவாமி விவேகானந்தர் சுட்டிக் காட்டுவ துண்டு.

ஆதலின், ஒரு தனியான சித்தாந்தம் என்ற முறையில் பௌத்த மதம் எழுச்சியடையாது; வாழ்வைப் பற்றிய ஞானக் காட்சிகள் அனைத்திலும் அடங்கியுள்ள பொதுவான ஒரு பகுதி என்ற முறையில் தான் அது நிகழும். ''எத்தனை பிறவிகளில் நான் உடற் சிறையில் அடைபட்டுக் கிடந்தேன்! ஐம்புலச் சிறையினை—இத் துன்பக் கட்டை — அமைத்த அவனையே நாடி எப்போதும் திரிந்தேன்; எனது ஓயாப் போரால் விளைந்த மனப் புண்ணை என்ன

என்பது! ஆனால் இப்போதே, இவ் வில்லத்தைக் கட்டுவோனே, உன்னை யான் அறிந்துகொண்டேன்! இத் துன்பச் சுவர்களை மீண்டும் எழுப்ப இனி எந்நாளும் உன்னை விடேன்; வஞ்சக மயம் என்று கூரையை மேயவும் இடம் கொடேன்; மட்சுவரின் மீது புது விட்டங்களை அமைக்கவும் விடேன்; உன் வீடு நொறுங்கி விட்டது. உத்திரம் பிளந்துவிட்டது. மயக்கமே அதனை அமைத்தது. அதனின்றும் பத்திரமாகச் செல்வேன் — உய்வு பெறும் பொருட்டே'' என்றார் புத்தர். இம் மொழிகளில் அடங்கியுள்ள முத்தியிச்சைத் தீயே மீண்டும் மனிதவர்க்கத்தை ஈர்த்துவருகின்றது. ''உயிர்கள் அனைத்தும் ஆனந்தம் நிறைந்தனவாய், இடரொழிந்தனவாய் ஆகுக! உயிருடன் வாழும் பிராணிகள் யாவும், அவை அசைபவை யாயினும், இடம்விட்டுப் பெயர முடியாது கட்டுண்டவை யாயினும், பலவீனமுடையவை யாயினும் பலமுடையவை யாயினும், பெரியவை யாயினும் சிறியவை யாயினும், நீண்டவையோ குறுகியவையோ யாயினும், உடல் சிறுத்தோ பருத்தோ நடுத்தரமாகவோ இருப்பவை யாயினும், கண்ணுக்குத் தெரிபவையோ தெரியாதவையோ யாயினும், அண்மையி லிருப்பினும் சேய்மையி லிருப்பினும், இப்போது உயிர்பெற்றவையோ இனி உயிர்பெறப் போகின்றவையோ ஆயினும், எல்லாம் சுகமாக வாழட்டும்! ஒரு தாய் தான்பெற்ற ஒரே சேயைத் தன் உயிரை ஈந்தும் காப்பதுபோன்று, எல்லா உயிர்கள்மீதும் வரம்பற்ற அன்பை வளர்த்து வாருங்கள்'' என்பர் அவ் வருள் வள்ளலார். தாவர உயிர்களிடத்தும் அனுதாபமும் தயையும் கொண்டு, அவற்றோடும் ஒன்றித்து நின்ற வரம்பற்ற அன்பு பொங்கும் அவரது நெஞ்சங்கண்டு, அதிலே மயங்கிக் கிடக்கின்றார் மனிதவர்க்கத்தார்.

புத்தரது இத்தகைய குணநலன் ஊரும் நாடும் உலகமும் புகுந்து பரவி, மக்களின் இதயங்களில் வீற்றிருக்கும்; அவரது அருளாட்சி புலனாகாத தாயினும், இரவில் வீழும் பனியைப்போல் கொள்ளை கொள்ளையான (நெஞ்ச) மலர்களை எங்ஙனும் விரியச் செய்வ தாகும். அவரது அருட்பணியிலே ஒரு காலத்தும் கொள்கைப்போர் என்பது ஒரு சிறிதும் இருந்ததாகத் தெரியவில்லை. அவரும், ஏனைய மெய்க் குரவரைப்போல, ஆக்கவும் நிறைவேற்றவும் வந்தவரே யன்றி அழிக்கவந்தவ ரல்லர். அவர் உதித்த காலத்து எந்த ஞானம் ஒரு சிலர்க்குள்ளே மட்டும் வழங்கி வந்ததோ, பொருளற்ற பழக்க வழக்கங்கட் குள்ளும் கொள்கைகளாகிய செடிகட் குள்ளும் மறைபட்டுக் கிடந்ததோ, அதைக் கண்டெடுத்துப் பொதுமக்கட் கிடையே பரப்பினார். வாழ்க்கைக் குரிய அடிப்படைக் கருத்துக்களில் அவர் மக்களுடைய கருத்தைச் செலுத்த லானார். தத்துவ ஆராய்ச்சிக் கொள்கைகளைக் கண்டித்தலில் அவர் இறங்கா திருந்ததோடு, பலர்க்கும் மனக் குழப்பத்தையும் கசடுற்ற அறிவையும் விளக்கக் காரணமாகும் கொள்கைகளைப் பற்றி வாய்திறவாது மௌனம் சாதித்தார். ஞானவாழ்க்கையில் அடங்கிய அனுபவப் பகுதிகளை வற்புறுத்தி, அவற்றின் பயனைச் சமூக வாழ்க்கை எவ்வாறு மேம்பாடடையக்கூடும் என்பதையும் எடுத்துக் காட்டினார். ஞான வாழ்க்கையைக் கிரியைக ளென்னும் புதர்க்குள் புதைபடாது காத்து, மன்னுயிர்க்குப் பல்வகையாலும் நலம் பயக்கும் பணிவகைகள் என்னும் வாய்க்கால் வழியே செல்லுமாறு திருப்பினார்.

புத்தபகவானது பெருமை இத்தகைய தாயினும், அவர் போதித்த இலட்சியமும வேதாந்தத்தின் இலக்கியமும் ஒன்றேயாம் என்பதையும், அதை அவர் நிலைநாட்டப் பயன்படுத்திய தத்துவ ஆராய்ச்சி முறைமட்டும் வேறுபட் டிருந்தது என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. அவரது சாதன வாழ்க்கைப்

போதனைகட்கு அடிப்படையா யிருந்த் உள்ளநூற் பகுப்புமுறை ஆராய்ச்சி வேதாந்தக் குரவர்களின் முறைக்கு வேரு யிருந்தது. இவ் வேறுபாட்டுக்குங் கார ணம் உள்ளது. இந்திரியாதீத மனுதீத விஷயங்களைப் பற்றிய வாதத்தை முற்றும் ஒழிக்க விரும்பியமையால், புத்தர் வாழ் வையும் மெய்ப்பொருளையும் விவகார நிலையினின்றே கருதலானுர்; வேதாந்தமோ பாரமார்த்திக நிலையி னின்றும் அவற்றை நோக்கி முடிபுகூற லாயிற்று. மேலெழுந்த பார்வைக்குத் தோன்றுவதை யொட்டி வாழ்வை ஆற்றுநீர் ஓட்டம்போன்ற தென் றும், துன்பமயமான தென்றும் கூறலா ஞர். இந் நோக்குநிலை அதிகமாக மக் களின் உள்ளத்தைக் கவர இயலாத தாயிற்று. ஆனுல் மூன்று வேறு விஷயங் கள் அதற்குப் பலமான ஆதரவை அளிக்க லாயின. முதலாவது: அதனுல் அனுபவ வாழ்க்கைக்கு ஏற்படும் வசதியாவது, துயரம் ஒழிதல் எனும் கருத்து அனைவர்க் கும் எளிதே புலனுகக்கூடிய விரும்பத்தக்க ஓர் இலட்சியம் ஆவதே. இரண்டாவது: நிர்வாணமும் மெய்யான போதமும் ஜாதி நிற வேறுபாடுகளின்றி எல்லார்க்கும் சம அளவிற்கு உரியன என்று புத்தர் துணிந்து நாடறியக் கூறிய கூற்று மக்கட்கு ஒரு புதிய விடுதலையைச் சமூகத் துறையிலும் மதத் துறையிலும் உதிக்கச் செய்தது. மூன்ருவதாக: புத்தரது வாழ்வும், அதனுற் போதிக்கப்படும் பணியும், தயையும், அன் பும். இக் கடைசியான அம்சமே பௌத்த மதத்தின் இருதயமும் சாரமும் ஆகும். தத்துவ ஆராய்ச்சித் துறையின் இலட்சி யத்தில் எவ்வளவு குறையும் பொய்மையும் இருப்பினும் அதற்கு ஈடு செய்வதற்குரிய அளவுற்கும் மேலாகப் புத்த பகவானது விழுமிய ஒழுக்கத்தால் விளையும் மன வெழுச்சியும் மனக் கவர்ச்சியும் பயனை ஈய வல்லனவாயின. அவ்வாழ்வு அற்பமான தன்று. ஓர் உயர்ந்த வாழ்வையும் மெய்ம் மையையும் பெற்றதற்கு அது சான்று பகர்கின்றது. அவ்வாழ்வின் கவர்ச்சியால் ஊட்டப்படும் தொண்டிலுள்ள ஆர்வமும், மன்னுயிர் மீதெழும் அன்பும் பொங்கும் போது தத்துவ ஆராய்ச்சிக்கு க்ஷணிகமா யும் மித்யையாகவும் புலப்படும் உலகம் உண்மைப் பொருள்கள் யாவற்றிலும் மிக உண்மையான தாயிற்று. இவ்வாறு வாழ்வு உண்மையாயிற்று. உலகம் உண்மையா யிற்று. மக்கட்குப் பணிசெய்தல் உண்மை யாயிற்று. மிகப் பரந்த பொதுத்தன்மையும் நிலைநாட்டப்படுவ தாயிற்று. இதுவே வேதாந்தத்தின் முடிவும்; ஆனுல் அம் முடிவைப் பற்றிப் பௌத்தம் எடுத்துரைக் கும் வகை வேறுபட்ட தாயிற்று. பௌத்த மதம் 'ஒன்றின்' உண்மையை மறுத்துப் 'பலவின்' உண்மையொடு தொடங்கிற்று. ஆனுல் வேதாந்தமோ 'ஒன்றின்'. உண் மையை அடிப்படையாகக் கொண்டு 'பல' வின் உண்மையை மித்தையாகக் கொள் கிறது. ஆயினும் அறுதிமெய்ப் பொருளின் முன் மண்டபத்திற்கு அணிகளாக ஒளிரும் பணியையும் மன்னுயிர் அன்பையும் இரு திறத்தாரும் பெறலாயினர். ஆக, துறவும் (தியாகமும்) தொண்டும் ஆகிய இரு அழி யாத இலட்சியங்களும் புத்தரின் வாழ்வா லும் போதனைகளாலும் புதிய ஞான ஊக் கத்தைப் பெறலாயின. புத்தர் எங்கும் பரப்பிய போதனை ஒரு புதிய கொள்கை யன்று. அவர் இந்து மதத்தின் சாரத் தையே நிறைவேற்றியவராவர்; ஆதலின் எமது வணக்கத்தை 'இன்பச் செவ்வி மன் பதை யெய்த அருளறம் பூண்ட' அவரு டைய புனித பாத கமலங்களிற் செலுத்து கிறோம். ** ** ** **

**தீமை தீங்கு செய்யாதவரை முட்டாள் அதைத் தேனுக நினைக் கிருன்; தீமை தீங்கு விளைக்கும்போது அவன் துன்பத்தில் உழல்கிருன்.**

— *புத்தர்.*



# கொப்பரைத் தேங்காய்



திரு. அ. ச. ஞானசம்பந்தம், M.A.

*

*'தனக்கென வாழாப்*
*பிறர்க் குரியாளன்'*

என்று 'மணிமேகலையில்' போற்றப் பெறும் புத்ததேவன் கபிலவாஸ்துவில் அரசன் மகனாய்த் தோன்றியவன். அற்றை நாளில் அரசச் செல்வத்தில் பிறப்பதைக் காட்டிலும் சிறந்த பேறு வேறு இல்லை. மேலும் மனத்துக் கிசைந்த மங்கை நல்லாள் ஒருத்தியை மணந்து அருமை மைந்தன் ஒருவனையும் பெற்று வாழத் தொடங்குகையில் பெறவேண்டிய இன்பம் அனைத்தையும் பெற்றுவிட்டதாகவே கருதலாம்.

மகனுடைய பிற்கால வாழ்வு ஏனையோர் போல அமையாது என்பதை அறிந்த அரசன் சுத்தோதனன், துன்பம் அல்லது துயரம் என்று கூறத்தக்கவை எவையும் அவன் கண்ணெதிர் வரவொட்டாமற் செய்துவிட்டான். அவ்வாறு இன்பத்தில் பிறந்து, இன்பத்தில் வளர்ந்து, இன்பத்தையே கண்டு பழகிய ஒரு பெருமகன் வாழ்வில் முயன்று கண்ட உண்மைகள் யாவை?

துக்கம்; துக்க உற்பத்தி; துக்க நிவாரணம்; துக்க நிவாரண மார்க்கம் என்பவை அல்லவோ இன்பத்தில் மிதந்த பெருமகன் கண்ட உண்மைகள்? இது எவ்வாறு இயன்றது? துன்பத்தை அறியாமலும், காணாமலும் இருந்துவிட்டால் துன்பத்தால் மகன் மனம் வேறுபட இயலாது என்று கருதிய மன்னன் மனக்கோட்டைகள் மங்கிவிட, வாழ்நாள் முழுவதையும் துன்ப ஆராய்ச்சியில் கழித்த மகன் வாழ்வு, எவ்வாறு எங்கே பரிணமித்தது? சாதாரண மனிதர்க்கும், பெரியோர்க்கும் வேறுபாடு இங்கேதான் தோன்றுகிறது. இவ்வுடம்புடன் வாழும் வாழ்வே அனைத்தும் என்று வாழ்பவர் சாதாரண மனிதர். உடம்புடன் இவ்வுலகில் வாழுங் காலத்திலேயே மனத்தால் பிறிதோர் வாழ்வு வாழ்பவர் பெரியோர் எனப்படுவர். உடல் கொண்டு வாழும் வாழ்வில் இன்பந் தவிர வேறு இல்லை என்பது உண்மைதான். ஆனால் இன்பம் என்று இங்குக் குறிக்கப்படுவது யாது? உடல் அனுபவிக்கும் நிகழ்ச்சிகளில் மனம் பங்கு பற்றும் பொழுதுதானே இன்பம் என்பது தோன்றக் கூடும். மலர் மாலை அணிதல் இன்பம் என்று கூறுகிறோம். ஆனால் உறங்குபவன் மேலும், இறந்தவன் மேலும் மலர் மாலையைப் போட்டாலும், போடத் தகாத ஒரு பொருளைப் போட்டாலும் இரண்டும் ஒன்றுதானே? ஏன்? அவன் மனம் அதில் ஈடுபடவில்லை யாயின் அதனால் தோன்றும் இன்ப துன்ப உணர்ச்சிகளும் தோன்றுவதில்லை.

உடல் வாழ்வு வேருகவும், மன வாழ்வு வேருகவும் வாழ்ந்துவரும் பெரியோர்களே நாம் அன்ருடம் அனுபவிக்கும் இன்ப,துன் பங்கள் ஒன்றுஞ் செய்வ தில்லே. 'ஏசுநாத ரைச் சிலுவையில் அறைந்தபொழுதும் அவர் துயரமடைய வில்லே. ஆனல் சிறு முள் என் காலிற் குத்தினுலும் ஏன் துன்ப முண்டாகிறது?' என ஒரு பெரியவரை ஒருவன் விஞவியபொழுது அவர் அழகாக விடை கூறினர். 'ஏசுநாதர் கொப்பரைத் தேங்காய்; நீ இளந் தேங்காய்! அதுதான் வேறுபாடு' என்ருர் பெரியவர்!

இளந் தேங்காயில் பருப்புடன் ஓடும் ஒட்டிக்கொண் டிருக்கிறது. ஓட்டில் ஆணி அடித்தால் பருப்பிலும் சென்று தைக் கிறது. ஆனல் கொப்பரைக் காயில் ஓட்டி னுள் பருப்பு இருப்பினும் இரண்டிற்கும் சம்பந்த மில்லே. ஓட்டில் ஆணி அடித் தாலும் பருப்பில் படுவதில்லே. அதே போன்று பெரியவர்களும் இவ்வுடலுடன் வாழ்ந்தாலும் உடலேப் பற்றிய சுக துக்கங் கள் அவர்கள் மனத்தையோ ஆன்மா வையோ பற்றுவ தில்லே. உடலுடன் வாழ்ந்தாலும் ஒட்டாமல் வாழும் வாழ்வே இவர்களுடைய வாழ்வு. நம்போன்ற மனி தர்கள் உடலுடன் சேர்ந்தே (ஒட்டியே) வாழ்கிருே மாகலின் உடலேப் பற்றியன அனேத்தும் நம் உள்ளத்தையும் உயிரையும் பற்றுகின்றன. பெரியோர்கள் கொப் பரைத் தேங்காய் போன்றவர்கள்!

புத்த தேவன் நன்கு முற்றிவிளேந்த கொப்பரைத் தேங்காயாக இளமையி லேயே ஆகிவிட்டான். எனவே சுத்தோ தனன் அவனே மகிழ்ச்சியிலும், இன்பத் திலும் வாழச் செய்த முயற்சிகள் அனேத் திலும் தோல்வியே அடைந்தான். இன்பத் தின் இடையே வாழ்ந்த புத்ததேவன் துன் பத்தையே கண்டான். பகவத் கீதை கூறு வதும் இதைத்தானே. 'கூட்டத்தி னிடையே தனிமையையும், சுகத்தின் இடையே துன்பத்தையும் காண்பவனே 'ஸ்திதப் பிரஞ்ஞன்' என்று கீதை கூறு கிறது.

பல நாட்கள் ஊண், உறக்கம் அற்றுப் போதி மரத்தடியில் இருந்தமையால்மட் டும் புத்த தேவனுக்கு உள்ளொளி பிறந்து விடவில்லே. ஊண், உறக்கம் இன்றி அரசமரத் தடியில் நாள் கணக்கில் இல்லா மல் ஆண்டுக் கணக்கில் கிடக்கிறவர் களும் உண்டு. எனினும் அனேவரும் புத்த தேவர்களாக ஆகிவிட வில்லே. ஆதலால் அவன் இதனே அம் மரத்தடியில் பெற்ருன் என்பது பொருந்தாக் கூற்றே. இளமை தொட்டே இன்பத்திலும் துன்பத்தைக் கண்ட அவனுடைய மனநிலே பெரிய உண் மையைக் காண்பதற்குத் தயாராகி விட்டது.

இதன் முதற்படி யாது? வாழ்வின் பய ஞக அப் பெருமகன் கண்டவை முன்னர்க் கூறிய நான்கு உண்மைகளாக இருப்பினும் அதன் அடிப்படையான மன நிலேயும் வாழ்வு முறையும் யாவை என்று காண லாம். அக் காட்சி பயனுடையதே யன்ருே? இந்த அடிப்படை மன நிலேயை வாழ்த்து முறையில் மணிமேகலே நன்கு விளக்கு கிறது. பாத்திரம் பெற்ற மணிமேகலே 'மாத்திரை இன்றி மன மகிழ்வு எய்தி' இதோ கூறத் தொடங்குகிருள்:

*"மாரனே வெல்லும்*
*வீர நின்னடி*
*தீநெறிக் கடும்பகை*
*கடிந்தோய் நின்னடி*
*பிறர்க்குஅறம் முயலும்*
*பெரியோய் நின்னடி*
*துறக்கம் வேண்டாத்*
*தொல்லோய் நின்னடி*
*எண்பிறக்கு ஒழிய*
*இறந்தோய் நின்னடி*
*கண்பிறர்க்கு அளிக்கும்*
*கண்ணுேய் நின்னடி*

*தீமொழிக்கு அடைத்த*
*செவியோய் நின்னடி*
*வாய்மொழி சிறந்த*
*நாவோய் நின்னடி*
*நரகர் துயர்கெட*
*நடப்போய் நின்னடி*
*உரகர் துயரம்*
*ஒழிப்போய் நின்னடி*
*வணங்குதல் அல்லது*
*வாழ்த்தல்என் நாவிற்கு*
*அடங்காது.....................*

**(மணி. 11: 61-71)**

புத்த தேவனுடைய வாழ்விலும் முற்பட்ட பல பிறப்புக்களிலும் அப் பெருமகன் செய்த அறச் செயல்கள் பற்றிய குறிப்புக்களாகும் இவை எனினும் இவற்றிடையே அமைந்துள்ள பொதுத் தன்மையை யாரும் அறியாமல் இருக்க முடியாது. இச்செயல்கள் அனைத்திலும் பிறர் பொருட்டாக அவன் மேற்கொண்ட செயல்களே அதிகம் பேசப்படுகின்றன. எப்பொழுது ஒருவன் இவ்வாறு பிறர் துயர் ஒழிக்கவும் கண் என்று கூறப்படும் ஞானத்தை வழங்கவும் முற்படுவான்?

மனிதன் என்று 'நான்' என்னும் அகங்காரத்தையும் 'எனது' என்னும் மமகாரத்தையும் அறவே விட்டு ஒழிக்கின்ருனே அன்றுதான் இச்செயல்களைச் செய்ய முடியும். இவை இரண்டையும் வேரொடும் கல்லி எறிந்தவர்களே வீடு பேற்றுக்கு உரியவர்கள் என்று குறள் முதல் அனைத்து நூல்களும் கூறுகின்றன. 'யான் எனது என்னும் செருக்கு அறுப்பான் வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்' என்ற குறளும், 'அற்றது பற்று எனில் உற்றது வீடு' என்ற ஆழ்வார் பாடலும் இதனை நிறுவ உதவுகின்றன.

அகங்கார மமகாரங்களை நீக்கியவன் கூட வீடுபேற்றை விரும்பி நிற்பதைக் காண்கிருேம். இவற்றைக் கருவியாகக் கொண்டு தன்னுடைய ஆன்மாவை ஈடேற்றிக்கொண்டு செல்ல மனிதன் விரும்புகிருனே தவிரப் பிறர் பொருட்டாக வாழ விரும்புவதில்லை. தவமாகிய தங்கருமம் செய்து தான் விடுதலை பெற முயல்வது சிறந்த ஒன்றுதான். ஆனல் அந்த முயற்சியைக் காட்டிலும் பெரிய தொன்று புத்த தேவன் செய்த செயலாகும்.

அகங்கார மமகாரத்தை வென்றவன் அவன் என்பதை 'மாரனை வெல்லும் வீரன்' என்ற அடி குறிப்பிடுகிறது. அகங்கார மமகாரத்தை இருந்த இடந் தெரியாமல் சுட்டுப் பொசுக்கினவர்களே மாரனை வெல்ல முடியும். மாரனோடு போரிட்டு வெற்றி கண்டு அவ்வெற்றிக்கு விலையாகத் தம் உயிரையே பணயம் வைத்துப் பலியாகின்றவர்களும் உண்டு. அத்தகையவர்களுள் ஒருவனைப் புத்ததேவன் ஆகிவிடாமல் மாரனை வெற்றிகண்ட பிறகும் வாழ்ந்த வீரனுவானுகலின் 'வீர' என்று விளிக்கப்படுகிருன். புறப்பகை அனைத்தையும் வெல்வதை வீரம் என்று கூறுவதைக் காட்டினும் அகப்பகையை வெல்பவர்களையே வீரர் என்று இத்தமிழ் நாட்டவர் போற்றினர்.

மாரனை வென்ற பிறகும் 'தீ நெறிக்கடும் பகை கடிந்தோய்' என்று மணிமேகலை கூறுவதில் ஓர் ஆழ்ந்த கருத்துள்ளது. துறவு என்ற அதிகாரத்தின் பின்னர் அன்றே 'அவா அறுத்தல்' என்ற அதிகாரத்தை வள்ளுவர் வைத்துள்ளார். என்? அவாவை அறுத்துத்தானே துறவை மேற்கொள்ள முடியும்? அவ்வாறு இருக்கவும் அவா அறுத்தலை ஏன் பின் அதிகாரமாக வைக்கின்ருர்? இதற்கு அமைதி கூற வந்த பரிமேலழகர் 'பழைய பயிற்சி வயத்தால் ஒரோவழிப் புலங்கள்மேல் பற்றுச் செல்லுமன்றே! அதனை ஓயாது நோககிப் பரிகரிககவே அவா அறுத்தலைத் துறவின் பின்னர் வைத்தார் எனறு எழுதியது இங்கு நோக்கத் தக்கது. ஒரு முறை மாரனை வென்று துறவு பூண்ட புத்ததேவன்

தீ நெறியாம் கடும்பகையை ஓயாது கவ்னித்துப் பரிகரித்தான் என்பதையே இரண்டாம் அடியால் குறிக்கிருள் மணிமேகலே.

தீ நெறியாகிய கடும் பகையை எவ்வாறு போக்கினுன் புத்த தேவன்? ஒன்றுஞ் செய்யாமல் நாம் மாரனே வென்று விட்டோமே; இனி நமக்கென்ன என்று கருதி வாளா இருந்துவிட்டாளு? இல்லே. அக் கடும் பகையைப் போக்க ஒரு வழியை மேற்கொண்டான். அவ் வழி யாது? அதுவே மூன்றும் அடியில் குறிக்கப்படும் 'பிறர்க்கு அறம் முயலுதலாம்:'

சுத்தோதனன் மகனுகப் பிறந்த சித்தார்த்தன் 'மாரனே வென்ற பொழுது' புத்தனுக ஆகவில்லே. மாரனே வெல்லுதல் பெரிய காரியமே யாயினும் அதனுல் அவன் மகாத்மாவாக ஆகிவிடவில்லே. பின்னர் எப்பொழுது புத்தனுக, மகாத்மாவாக ஆயினுன்? எப்பொழுது பிறர்க்காக அறத்தை முயன்று செய்தானே அப்பொழுதுதான் அவன் மகாத்மா ஆயினுன். இதனே மனத்துட் கொண்டே ஆசிரியர் 'பிறர்க்கு அறம் முயலும் பெரியோய்' என்று குறிப்பிடுகிருர்.

பிறர்க்கு அறம் முயலுதலாவது யாது? பிறர்க்கு அறத்தினே அறிவுறுத்துவதும், அவர் பொருட்டாக அறத்தினே முயன்று செய்தலுமாம். கிறிஸ்துவர்கள் 'மானிடர் பொருட்டாக ஏசு சிலுவையில் மாண்டு அவர்கள் பாபங்களேப் போக்கினுர்' என்று கூறுவதன் கருத்து யாது? 'பிறர் பழியும் தம் பழிபோல் நாணுவர்' என்று வள்ளுவர் கூறுவது எதனே? இவை அனேத்தும் ஒன்றே. பிறர்க்கு அறத்தை முயன்று செய்தலும் பிறர் பாவத்தைப் போக்க, ''தன்னரிய திருமேனி சதைப் புண்ண''ச் செய்தலும், பிறர் பழியைத் தம் பழிபோல் நாணுதலும் ஒன்றே. பெயரால் இவை வேறுபடினும் கருத்தால் ஒன்றே.

சித்தார்த்தன் என்ற மனிதன் கௌதம புத்தன் என்ற தேவனுக மாறிய 'ரசவாதத்தை'ச் செய்தது யாது? பிறர்க்கு அறம் முயன்ற பெற்றியே அந்த 'ரசவாதம்.' அதன் விரிவைத்தான் அடுத்துவரும் அடிகள் விளக்கிக் கூறுகின்றன. 'துறக்கம் வேண்டாத் தொன்மை' மீட்டும் அவன் அகங்கார மமகாரங்களே வென்ற அளவையே குறிக்கின்றன. மாரனே வென்று தீ நெறிக் கடும்பகை கடிந்தவனுக்கு உரிமையால் கிடைப்பது துறக்கம் என்னும் நிலே. இவை இரண்டையும் இந்த உலகில் செய்தவர்கள் பெறும் பேருகிய துறக்கம் அல்லது மோக்ஷத்தைப் பெற்றுக் கொண்டு அமைந்துவிடும் மனிதர் பலரைப் போல் அல்லாமல் சித்தார்த்தன் புத்தனுக மாறிப் பிறர்க்கு அறம் முயன்ற வரலாற்றை 'கண்பிறர்க்கு அளிக்கும் கண்ணேய்; நரகர் துயர்கெட நடப்போய்; உரகர் துயரம் ஒழிப்போய்' என்பன போன்ற அடிகள் விளக்குகின்றன.

மாரனே வென்ற வீரனுகமட்டும் இருக்கும் ஒருவனே, தீநெறிக் கடும்பகை கடிந்தவனேக்கூட வாழ்த்தலாம்; பெருமைப்படப் பாராட்டிப் பேசலாம். ஆனுல் இவற்றினும் மேம்பட்டுப் பிறர்க்கு அறம் முயலும் பெரியவனே வணங்குவது தவிர வேறு வழி இல்லே. மனிதன் கொப்பரைத் தேங்காய் நிலேயை அடையவேண்டு மாயின் அதற்குரிய வழி யாது? அகங்கார மமகாரங்களே அறவே நீக்குதலாம். ஆனுல் அதனின்றும் மேம்பட்ட நிலேயை அடைய வேண்டுமானுல் பிறர்க்கு அறம் முயல வேண்டும்.

புத்த தேவன் கூறிய துக்கத்தை அதற்கு முன்னரும் பின்னரும் கூறியவர்கள், கண்டவர்கள், அறிந்தவர்கள், தங்கள் அளவில் போக்கிக் கொண்டவர்கள் பலருண்டு. அடுத்த துக்க உற்பத்தி பற்றியும் பலரும் அறிந்திருந்தனர். துக்கத்தின் உற்பத்தி ஆசையே என்பதை 'ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள், ஈசனே டாயினும் ஆசை அறுமின்கள், ஆசைப் படப்பட

ஆய்வரும் துன்பங்கள்'' என்பன போன்ற திருமூலர் திருமந்திர வாக்கும், 'அவா என்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும் தவாப் பிறப்பு ஈனும் வித்து' (361) என்றும் 'அவா இல்லார்க்கு இல்லாகுந் துன்பம்' (368) என்றும் தோன்றிய குறள்களும் இக்கருத்தை வலியுறுத்துகின்றன. துக்க நிவாரணம் என்ற தலைப்பில் ஆசையை அறவே ஒழித்தலே துக்கம் தொலைய வழி என்று கூறிய புத்ததேவன் கருத்தே 'இன்பம் இடையறாது ஈண்டும் அவா (ஆசை) என்னும் துன்பத்துள் துன்பங் கெடின்' (369) என்ற குறளிலும் பேசப்படுவது கண்கூடு.

அவ்வாறு புத்தன் கூறியவற்றையே பிறரும் கூறி இருப்பவும் அவர்கட்கு இல்லாத சிறப்புப் புத்தனுக்குமட்டும் யாண்டு வந்தது? இதற்கு விடையே முன்னர்க் கண்டோம். அப் பிறர் எல்லாம் இக்கருத்தை கண்டனர்; பிறர்க்கு எடுத்துக் கூறினர். ஆனால் தாம் தமக்கென ஒன்றையும் வேண்டாது நின்று கூறவில்லை; பிறர் துயரம் ஒழியும்வரை எனக்கும் வீடு வேண்டாம் என்று கூறி அதன்படி வாழ முற்படவில்லை. அரச குடும்பத்தில் அரசன் முதன் மகனாகப் பிறந்த ஒருவன் அற்ப ஆட்டுக் குட்டி ஒன்றைப் பெரிதென மதித்து அதனை வெட்டக் கூடாதென்றும் வெட்டுவதாயின் அதற்குப் பதிலாகத் தன்னுடைய தலையை வெட்டலாம் என்றுங் கூறியவன் உண்டா? பிறர்க்கு அறம் முயலுதல் என்றால் வாயால் உபதேசஞ் செய்வது மட்டும் போதாது. ஆட்டுக்குட்டிக்குப் பதிலாகத் தன் உயிரை வழங்க முன்வருவதும் நரகர் உலகினும், உரகர் (நாக லோகம்) உலகினும் சென்று அவர்கள் வாழ்வைப் பகிர்ந்துகொண்டு அவர்கள் துயரம் போக்க முனைவதுமே பிறர்க்கு அறம் முயலுவ தாகும்.

கொப்பரைத் தேங்காயாக மனிதன் ஆவதுதான் யான் எனது என்னும் செருக்கை அறுத்த நிலை. ஆனால் கொப்பரைத் தேங்காய் செக்கில் அகப்பட்டுத் தான் வெந்து, சுருங்கி, நைந்து, எண்ணெயாக மாறிப் பிறர்க்குப் பயன்படுவதுதான் புத்தனாகும் நிலை. ஆதலால்தான் புத்தன் கூறிய உண்மைகளைப் பிறருங் கூறி இருப்பவும், அப் பிறர் பற்றி இவ்வுலகம் கவலைகொள்ளாமல் புத்தனைப் பின்பற்ற முனைகிறது

அரண்மனைப் போக வாழ்வில் உடம்பால் ஈடுபட்டிருப்பினும் புத்த தேவன் மனம் மாரனையும் தீ நெறிக் கடும் பகையையும் வெல்ல வழிதேடி அலைந்தது. என்று அருமை மனைவி 'யசோதரை' யையும் அருமந்த பிள்ளை 'இராகுல'னையும் விட்டுப் பிரிந்ததோ, அன்றே அவன் மனம் இவை இரண்டிடத்தும் வெற்றிபெற்று விட்டது. ஆனால் போதி மரத்தடியில் 'சுஜாதை' என்ற ஆயர்குல மடந்தை தந்த பாற்சோற்றை உண்டு கண்ட உண்மை யாது? **'பிறர்க்கு அறம் முயலும்'** பெற்றியே யாகும். பிறர்க்கு அறம் முயலும் பெற்றி உலகில் பரவி, உலகம் வாழ வழி வகுப்பதாக.

**உயிர்கட்குத் துன்பம் செய்யும் எவனும்**
**உயர்ந்தவன் ஆவதில்லை;**
**உயிர்கட்குத் துன்பம் செய்யாதவனே உயர்ந்தவன்.**

**— புத்தர் —**



# கூவத்துப் பௌத்தச் சிலைகள்

மயிலை-திரு. சீனி. வேங்கடசாமி.

★

கூவம் என்பது சென்னைப் பட்டினத்து மேற்கே ஏறக்குறைய 40 மைலில் உள்ள கிராமம். இந்தக் கிராமத்துக்கு அருகில் கூவம் என்னும் பெயருள்ள ஆறு தோன்றி, கிழக்குப் பக்கமாக ஓடிச் சென்னை நகரத்தின் மத்தியில் பாய்ந்து இரும்பு வாராவதிக்கு அருகில் கடலில் கலக்கிறது.

கூவம் கிராமத்துக்கு திருவிற்கோலம் என்ற பெயரும் உண்டு இவ்வூர் சிவனைத் திருஞானசம்பந்தர் பாடியுள்ளார். இங்குள்ள சிவன் கோயில் யானைக் கோயில் (கஜபிருஷ்டவிமான) அமைப்புள்ளது.

கூவத்தில் சிவபெருமான் முப்புரங்களை அழித்தார் என்று இவ்வூர் புராணம் கூறுகிறது. இக்கிராமத்துக்கு அருகிலே ஒரு கல் தூரத்தில் நரசிங்கமங்கலம் என்னும் கிராமமும் அதற்கு அருகில் ஒரு கல் தூரத்தில் சிவபுரம் என்னும் கிராமமும் இருக்கின்றன. சிவபுரம், நரசிங்கமங்கலம், கூவம், கூவத்தில் சிவபெருமான் முப்புரங்களை எரித்தது ஆகிய இவைகளையெல்லாம் ஒருங்கு சேர்த்துச் சிந்தித்துப் பார்த்தபோது, இந்தக் கிராமம் பண்டைக் காலத்தில் பௌத்த கிராமமாக இருந்து இங்குப் பௌத்தக் கோயில் இருந்திருக்க வேண்டும் என்ற ஐயம் எனக்கு ஏற்பட்டது.

சிவபெருமான் முப்புரங்களை அழித்தார் என்பதற்கு, பௌத்தர்களுடைய புத்த தர்ம சங்கம் என்னும் மும்மணிகளை அழித்தார் என்பது நான் ஆராய்ந்து கண்ட தத்துவார்த்தம். புத்த தர்ம சங்கம் என்னும் மும்மணிகள் பௌத்த மதத்தின் மூன்று கோட்டைகளாகும். இவை அழிந்தால் பௌத்த மதம் அழிந்துவிடும். பண்டைக் காலத்தில் சைவ வைணவர்கள் பௌத்த மதத்தை அழித்து பௌத்தக் கோயில்களைக் கைப் பற்றுவதாக இருந்தால், பௌத்தக் கிராமத்துக்கு அருகில் உக்கிர மூர்த்தியாகிய நரசிங்கமூர்த்தியை அமைப்பார்கள். பிறகு பையப்பைய பௌத்தக் கோயிலைச் சைவக் கோயிலாகவோ வைணவக் கோயிலாகவோ மாற்றிவிடுவார்கள். இதற்குச் சிவபெருமான் முப்புரத்தை, நரசிங்க அம்பு எய்து அழித்தார் என்று புராணக் கதை கூறுவார்கள். இது என்னுடைய ஆராய்ச்சியில் கண்ட முடிவு.

இந்த முடிபைக் கொண்டுள்ள யான் கூவத்துக் கிராமத்துக்குப் போய் இதன் உண்மையை ஆராய்ந்து காணவேண்டும் என்று எண்ணினேன். ஆகவே சென்ற ஆண்டு தைத் திங்களில் என் நண்பர்களுடன் அக்கிராமத்துக்குச் சென்றேன்.

பஸ் வண்டியை விட்டு இறங்கிக் கிராமத்தை நோக்கி நடந்தபோது தூரத்தில்

கிராமத்தின் கோயில் விமானம் யானைக் கோயில் அமைப்புடன் காட்சி யளித்தது. சற்றுத் தூரத்தில் நெல்வயல்களின் இடையிலிருந்த களத்துமேட்டில் புத்தர் பெருமானின் திருவுருவம் நின்றவண்ணம் காட்சி யளித்ததைக் கண்டு வியப்படைந்தேன். பண்டைக்காலத்தில் பௌத்தக் கிராமமாக இருந்திருக்கவேண்டும் என்று நான் தீர்மானித்தது முழுவதும் சரி என்று கூறுவது போல புத்தருடைய ஐந்தடி உருவச் சிலை இங்கு நின்றுகொண்டிருந்தது. எனக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவே கிடையாது. அருகில் சென்று பார்த்த போது புத்தர் பிரானுடைய உருவச்சிலை சீவர ஆடை அணிந்த கோலத்துடன் அழகாக அமைந்திருந்தது. ஆனால், அந்தோ! அதன் இடது கை உடைந்து விட்டது. அஞ்சாதே என்று கூறுவது போல வலது கை அபய அஸ்தமாகக் காணப்பட்டது. உடனே போட்டோ பிடித்தோம்.

இக்கிராமத்தில் பாமர மக்கள் இதனைப் புத்தர் என்று கூறவில்லை. ஒரு பார்ப்பனத்தி கூடா ஒழுக்கமாக ஒழுக்கந் தவறி வாழ்ந்தபடியால் சாபம் அடைந்து கல்லாக சமைந்துவிட்டாள் என்று கதை கூறினார்கள்.

புன்முறுவலுடன் அக்கதையைக் கேட்டுக்கொண்டே, வேறு பௌத்தச் சிலைகள் இங்கு இருக்கின்றனவா என்று கேட்டேன். ஊருக்குள் தருமராசா கோவிலண்டை ஒரு விக்கிரகமும் இன்னொன்று ஏரியின் கரையிலும் இருப்பதாக ஒரு பெரியவர் கூறினார். உடனே தருமராசா கோவிலுக்குப் போனோம்.

புத்தருக்குத் தர்மராசன் என்னும் பெயரும் உண்டு. பிற்காலத்தில் தருமராசன் (புத்தர்)கோயிலை அழித்தவர்கள், அதனைப் பஞ்சபாண்டவ தருமராஜன் கோயிலாக மாற்றிவிட்டார்கள் என்பது எனது முடிவு. ஆகவே தருமராசா கோவிலில் பௌத்த



தர்மராசனைக் காணக்கூடும் என்று அக் கோயிலுக்குச் சென்றேன்.

இக்கோயிலைச் சுற்றிலும் வைக்கோல் காயப்போட்டிருந்தார்கள். வைக்கோலுக்கு இடையே பிண்டிக் கல்லினால் செய்யப்பட்ட மிகப்பழமை வாய்ந்த புத்த விக்கிரகத்தைக் கண்டு வியப்பினால் திடுக்கிட்டுப்போனேன். புத்தர் பதுமாசனம்

அமர்ந்து தியானத்தில் இருக்கிருர். அவருக்குப் பின்னுல் ஐந்தலே நாகம் ஒன்று அவர் தலைக்குமேல் படம் விரித்துக்கொண்டிருக்கிறது. இந்தச் சிற்ப உருவத்தைக் கண்டுதான் திடுக்கிட்டேன். ஏனென்ருல், பாம்பின் கீழ் அமர்ந்த புத்த உருவச் சிற்பங்கள் நமது நாட்டில் மிகச் சிலதான் உள்ளன. அத்தகைய அருமையான சிற்பத்தைக் கண்டு வியப்படையாமல் இருக்க முடியுமா ?

ஆனல், எந்த நிலையில் இந்தச் சிற்பம் காணப்பட்டது ! முகம் முழுவதும் தேய்ந்து கண் மூக்கு வாய்கள் மறைந்து மங்கி மழுங்கிய நிலையில் இவ்வுருவம் குப்பையில் எறியப்பட்டது போல ஒரு புறம் உருட்டித் தள்ளப்பட்டிருந்தது. அதைப் புரட்டி எடுத்து நிமிர்த்திவைத்துப் படம் பிடித்தோம். (படம் 2 காண்க)



பிறகு ஏரிக்கரையில் இருப்பதாகக் கூறப்பட்ட புத்தர் உருவச்சிலையைக் காணப் புறப்பட்டோம். போகும் வழியில் பெருமாள் கோயில் ஒன்று இருந்தது. அந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தேன். ஆகா ! என்ன வியப்பு. எதிர்பாராத காட்சியை, காணுத காட்சியைக் கண்டு ஆச்சரியத்தினுல் அசைவற்று நின்றுவிட்டேன். பிறகு தெளிவடைந்து பூரிப்பினுல் ஓடோடி பார்த்தேன். நான் கண்டதென்ன ? தரும சக்கரம் ! பௌத்தர்களின் தரும சக்கரச் சிற்பம் ! இந்த அமைப்பில் தரும சக்கரத்தின் உருவத்தை இதற்கு முன்பு நான் கண்டதே யில்லை.

புத்தருக்கு அறவாழி அந்தணன் என்ற பெயரும் உண்டு. (அருகக் கடவுளுக்கும் அறவாழி அந்தணன் என்னும் பெயர் உண்டு). புத்தருடைய அறவுரை உபதேசத்திற்குத் தருமசக்கரப் பிரவர்த்தன சூத்திரம் என்பது பெயர். எனவே, புத்தரின் அறவுரையைக் குறிப்பதற்காக, தருமசக்கரத்தை அமைத்து வணங்கினுர்கள். இந்தத் தருமசக்கர உருவத்தைக் கண்டபோது என் மனம் துள்ளிக் குதித்தது. ஆனல், என்ன ஆச்சரியம் ! அந்தக் கிராமத்தாருக்கு இது பௌத்த தருமசக்கரம் என்பது தெரியவில்லை. உடனே இதையும் படம் பிடித்துக்கொண்டோம். (படம் 3 காண்க)

பிறகு ஏரிக் கரைக்குச் சென்ருேம். ஏரியில் நீர் நிறைந்திருந்தபடியால் அங்கு இருப்பதாகச் சொல்லப்பட்ட புத்தர் உருவத்தைக் காண முடியவில்லை.

இந்தக் கிராமத்தில் இருந்த மற்ருெரு பெரிய புத்தர் உருவத்தை எடுத்துக் கொண்டு போய் சென்னை நகரத்துப் பொருட்காட்சி சாலையில் வைத்திருப்பதாகக் கூறினுர்கள்.

சென்னைக்குத் திரும்பி வந்து பொருட்காட்சி சாலைக்கு(மியூசியம்)ச் சென்றேன். அங்குச் சுமார் ஐந்தடி உயரமுள்ள பெரிய

புத்தர் உருவச் சிலை பதுமாசனம் அமர்ந்து தியானத்தில் மூழ்கியிருப்பது போன்ற

படம்: 3.



கம்பீரமான உருவத்தைக் கண்டேன். அதன் கீழே, "இது கூவம் கிராமத்தில் இருந்து கொண்டுவரப்பட்டது" என்று எழுதப்பட்டிருக்கிறது.

கூவம் கிராமம் முற்காலத்திலே ஒரு சிறந்த பௌத்தக் கிராமமாக இருந்தது என்பதற்கு இன்னும் வேறு சான்றுகள் வேண்டுமோ?

கூவம் கிராமத்தில் தருமராசா கோயிலுக்கு அருகில் உருட்டித் தள்ளப்பட்டுள்ள புத்தர் உருவச் சிலை, அது ஒடிந்து அழிந்து கெட்டுப்போவதற்கு முன்பு, சென்னை பொருட்காட்சிச் சாலையில் பாதுகாக்கப்பட வேண்டும். அல்லது, அக்கிராமத்தார் அதனை வெயில் மழையில்லாத இடத்தில் வைத்துப் போற்றிப் பாதுகாக்கவேண்டும். இவ்வேண்டுகோள் நிறைவேறுமா?

---

○

"வினையின் வந்தது வினைக்குவிளை வாயது
புனைவன நீங்கின் புலால்புறத்(து) இடுவது
மூப்புவிளி வுடையது தீப்பிணி இருக்கை
பற்றின் பற்றிடம் குற்றக் கொள்கலம்
புற்றடங்(கு) அரவின் செற்றச் சேக்கை
அவலக் கவலை கையா(று) அழுங்கல்
தவலா வுள்ளம் தன்பால் உடையது
மக்கள் யாக்கை"

— மணிமேகலை. 4–113:121.

# புத்தரின் பெருமை



**தவத்திரு சித்பவானந்த சுவாமிகள்**

★

இந்தியத்தாய் ஈன்றெடுத்துள்ள பெருமக்களுள் புத்தர் பெம்மான் ஒருவர். அவர் இம்மண்ணுலகில் தோன்றி இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகள் கடந்துபோய் விட்டன. எனினும் அவருடைய வாழ்க்கையின்மூலம் அவர் உலகுக்கு விடுத்துள்ள சிறந்த செய்திகள் என்றைக்கும் மறைந்துபட்டுப் போகாதவைகள். வாழ்க்கையைப்பற்றிய பேருண்மைகளையே அவர் விளக்கிக் காட்டியுள்ளார். இவ்வுண்மைகள் காலத்தால் அடிபட்டுப் போகக்கூடியவை அல்ல; சூழ்நிலையை முன்னிட்டு இவைகள் மாறிவிடமுடியாது. வாழ்க்கைமுறை ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வொரு விதமாக அமைவதும் இல்லை. அடிப்படை உண்மைகள் எல்லா நாட்டவர்க்கும் எல்லாச் சூழ்நிலையிலும் எல்லாக் காலங்களிலும் பயன்படுபவைகளாம். புத்தர் புகட்டியுள்ள சில உண்மைகள் நம்முடைய வாழ்க்கைக்கும் முற்றிலும் பொருந்தியவைகள். அவைகளுள் சிலவற்றை ஈண்டு ஆராய்ந்து பார்ப்போம்.

சின்னஞ்சிறு வயதில் புத்தருக்கு சித்தார்த்தன் என்பது பெயர். சிறுவயதிலேயே சித்தார்த்தன் கண்டறிந்து கொண்ட உண்மை ஒன்று எக்காலத்திலும் எல்லாராலும் பாராட்டத்தக்கது ஆகும். இன்ப மாளிகை ஒன்றில் துன்பத்தை அறியாதவனாக அவன் வாழ்ந்திருந்தான். அப்பொழுது வானத்திலே பறவைகள் சில பறந்து சென்றன. சித்தார்த்தனுடைய மாளிகைக்குப் பக்கத்தில் அவனுடைய சுற்றத்தான் ஆகிய தேவதத்தன் என்பவனுடைய மாளிகை ஒன்று இருந்தது. அம்மாளிகையினின்று தேவதத்தன் பறந்து சென்ற புள்ளினங்களுக்கிடையில் அம்பு ஒன்றை எய்தான். ஒரு பறவையின் விலாவில் அது தைக்கவே பரிதவித்துக்கொண்டு அது சித்தார்த்தனுடைய தோட்டத்துக்குள் விழுந்தது. சிததார்த்தனும் அந்நிகழ்ச்சியைத் தற்செயலாய்ப் பார்த்துக்கொண் டிருந்தான். கீழே விழுந்த பறவையின் வெண் சிறகெங்கும் இரத்தம் பரவியிருந்தது. முன்பு அவன் இரத்தத்தைக் கண்டதில்லை. குருதியைக் குறித்தும் பறவையைக் குறித்தும் பக்கத்திலிருந்தவர்களிடம் அவன் வினவினான். அது துன்பப்படுவதன் செய்தியை அப்பொழுதுதான் அவன் முதன் முதலில் அறியலானான். அதன் உடலிலிருந்த அம்பை உருவி எடுத்துத் தன் உடலில் குத்திப் பார்த்தான். தன் உடலிலிருந்து இரத்தம் வருவதையும் வலி உண்டாவதையும் அவன் உணரலானான். உடனே அப் பறவைக்கு வேண்டிய சிகிச்சை செய்து அதன் உயிரைக் காப்பாற்றினான். தேவதத்தனோ அப்பறவை தனக்கு உரியதென்று வழக்குத் தொடுத்தான். வானத்தில் பறக்கும்பொழுது பறவை யாருக்கும் சொந்தமல்ல. ஆனால் பூமியில் வந்து விழுந்ததும் அதை அம்பால் எய்தவ

னுக்கே சொந்தம் என்று அவன் வழக்காடினான். அமைதியுடன் சித்தார்த்தன் அதற்குப் பதில் விடுத்தான்: 'நீ இப் பறவையின் உயிரை வாங்க முயன்றாய். நானோ இப் பறவைக்கு உயிர் கொடுத்திருக்கிறேன். உயிர் ஒன்று அதை மாய்க்க முயலுகின்றவனுக்கு உரியதா, அல்லது அதைக் காக்க முயலுகின்றவனுக்கு உரியதா? விடை சொல்.'

தேவதத்தனும் அவனைச் சார்ந்திருந்தவர்களும் விடை சொல்ல இயலாதவர்களாய்த் திகைத்து நின்றார்கள். இவ் வழக்கைக் கேட்ட பெரியோர்கள் சித்தார்த்தன் சார்பாகவே முடிவு கூறினார்கள். உயிர்களை உய்விப்பதற்கென்றே அவன் உடல் எடுத்தவன். உயிர்களைக் காத்தல் என்னும் அவன் புரிந்த பெரும் செயல்களுள் இதுவே முதல் செயலாகும். அவன் கேட்ட கேள்வியை நாம் ஒவ்வொருவரும் எண்ணிப் பார்க்க வேண்டும். உயிரைக் காத்தல் பெரியதா, உயிரைக் கறத்தல் பெரியதா? பெருமகன் ஒருவன் உயிரைக் காக்கின்றான் மற்றவனோ உயிரைக் கறக்க முயன்று இறுதியில் தானே அழிந்துபட்டுப் போகிறான்.



சித்தார்த்தனை அவன் தந்தை இன்ப மாளிகையில் அடைத்து வைத்திருந்ததில் கருத்து ஒன்று இருந்தது. உலகம் துன்பம் நிறைந்தது என்பதை அவன் அறிந்து கொள்வானாகில் பிறகு உலக வாழ்க்கையில் அவனுக்குப் பற்றுதல் நீங்கிவிடும். நாடாளும் பெரும் செயலுக்கு அவன் உதவாது போய்விடுவான். எப்படியாவது இன்ப வலையில் கட்டுண்டவனாக அவனை வைத்திருந்து அவனை வையகம் ஆளும் ஒரு வேந்தனாக அமைக்க வேண்டும் என்னும் அவா தந்தைக்கு இருந்தது. ஆனால் அத்தகைய மயக்கத்தில் தந்தை தன் தனயனை நெடுநாள் வைத்திருக்க முடியவில்லை. வாழ்க்கையில் இன்பம் இருப்பது போன்று துன்பமும் இருக்கிறது என்பதை அவன் அறிந்துகொண்டான். வாழ்க்கையின் மர்மத்தை உள்ளபடி அறிந்துகொள்ள வேண்டும் என்னும் எண்ணம் கொண்டவனாய் இளம் இராஜ குமாரன் சித்தார்த்தன் இன்பம் நிறைந்ததாகத் தென்பட்ட உலகைத் துறந்துவிட்டு வெளியேகி விட்டான். வெளியேகியதும் வாழ்க்கையைப் பற்றிய உண்மை அவனுக்குப் புலப்படுவதாயிற்று. முட்டைக்குள் அடைபட்டுக் கிடக்கும் குஞ்சு ஒன்று முட்டை ஓட்டை உடைத்துக் கொண்டு வெளியே வருகிறது. முட்டைக்குள் இருந்தபொழுது உலகைப்பற்றி அது கொண்டிருந்த அனுபவம் ஒரு விதமானது. முட்டையிலிருந்து வெளியே வந்ததும் உலகைப்பற்றி அது அறிந்துகொண்டது மற்றொரு விதமானது. சித்தார்த்தன் துறவியான பிறகு பெற்ற அனுபவமும் அத்தகையதேயாம். இன்பம் நிறைந்ததாகத் தென்படும் உலகில் துன்பமும் நிறைந்திருக்கிறது. பிறப்பெடுப்பது துன்பம், உயிரைக் காத்துவருதலில் ஒவ்வொரு படித்தரத்திலும் துன்பம் இருக்கிறது. இடையிடையே வரும் நோய்கள் துன்பத்தை உண்டுபண்ணுகின்றன, வயோதிகம் துன்பத்தை வளர்க்கிறது. இறுதியில் மரணம் மனிதனைத் துன்பத்தின் உச்ச

நிலையில் கொண்டுசேர்க்கிறது. வாழ்வு என்பது இதுவே. இன்பத்தை நாடுகின்றவனுக்குத் துன்பமும் தானே வந்தமைகிறது. இவ்விரண்டையும் கடந்த நிலை வாழ்க்கையில் ஏதேனும் உண்டா என்னும் கேள்வியைப் புத்தர் பெம்மான் கிளப்பினுர். இக்கேள்வி நம் அனைவருக்கும் பொதுவானது. இதற்கு விடையை நாம் ஒவ்வொருவரும் அவரவர் வாழ்க்கையினின்றே கண்டுபிடித்தாகவேண்டும்.

துறவியாக வெளியே கிளம்பிய இராஜகுமாரன் தவசிகள் பலரைச் சந்தித்தான். அவர்கள் விதவிதமான கடுந்தவம் புரிந்து வந்தார்கள். உடலைச் சிறிது சிறிதாக வாட்டி ஒடுக்குதல் அவர்களின் தவத்தின் முக்கிய நோக்கமாய் இருந்தது. கேடுகள் அனைத்துக்கும் உடல் பற்றுதலே முதல் காரணம் என்பது அவர்கள் கொள்கை. வெயிலில் காய்வது, குளிரில் உடலை மூடாது போட்டுவிடுவது, உணவைச் சிறிது சிறிதாகக் குறைத்துவிடுவது இவை போன்ற அசுரத் தபசை அவர்கள் செய்துவந்தார்கள். அவர்களைப் பின்பற்றிச் சித்தார்த்தத் துறவியும் தமது உடலை வாட்ட முற்பட்டார். நாளடைவில் அவருடைய உடல் வலிவு அனைத்தையும் இழந்துவிட்டது. எலும்பும் தோலுமாக அவர் ஆய்விட்டார். நிமிர்ந்து உட்காருவதற்கும் சக்தி இல்லாது போய்விட்டது. ஒரு மரத்தடியில் படுத்துக்கிடந்தார். அப்போது கல்யாண ஊர்வலம் ஒன்று அவ்வழியே சென்றது. அக்கூட்டத்தில் பாடகன் ஒருவன் பாடிக்கொண்டு போனுன். தான் மீட்டிய வீணையோடு பேசுவது போன்று அப்பாடல் அமைந்திருந்தது. அவன் பாடிய பாடலின் கருத்தாவது: 'வீணையே நீ அற்புதமான இன்னிசையை உண்டு பண்ணுகின்ருய். அதன் பொருட்டு உன்னை நடுநிலையில் வைத்திருப்பது அவசியமாகிறது. உன்னிடத்து அமைந்துள்ள நரம்புகளைத் தளர்த்திவிட்டால் ஓசை ஒன்றும் உண்டாகாது. அதே நரம்புகளை மிகைபட முறுக்கி பிகுத்தம் செய்தால் நரம்பு தெறித்துப் போய்விடும். நரம்பை நடுநிலையில் வைத்திருப்பதி லிருந்தே உன்னிடத்திருந்து இனிய ஓசை உண்டாகிறது' இப்பாடலுக்குச் சித்தார்த்தர் செவிகொடுத்தார். உடனே அவர் உள்ளத்தில் மற்றெருரு உயர்ந்த கருத்து உதயமாயிற்று. அந்த வீணைக்கு ஒப்பானது மானுட சரீரம். ஒரு விதத்தில் அந்த வீணைக்கும் மிக்கது மானுட சரீரம். அதை முறையாகக் கையாளத் தெரிந்துகொண்டால் அது அரும்பெரும் காரியத்துக்கு உதவும். ஆனுல் பலர்க்கு உடலை முறையாகக் கையாளத் தெரியாது. தமது வாழ்க்கையிலேயே தமது உடலை இரண்டுவிதக்கேடுகளுக்கும் உட்படுத்திவிட்டார். ராஜபோகத்தில் அதைச் சொகுசான வாழ்க்கையில் வைத்திருந்தது ஒருவிதக் கேடு. இப்பொழுது இதைப் பட்டினி போட்டு வதைப்பது மற்றெருருவிதக் கேடு. நல்வாழ்வு வாழ விரும்புபவர்கள் மிகைபட்ட சுகபோகத்தில் மூழ்கிவிடலாகாது; உடலை வீணே ஒறுத்தலும் உதவாது. வீணையை நடுநிலையில் வைத்திருப்பது போன்று உடலை நடுநிலையில் வைத்திருப்பது முற்றிலும் அவசியம் என்னும் பெரியபாடத்தை அவர் கற்றுக்கொண்டார். அதன் பிறகே அவருக்கு உண்மையான ஆத்ம சாதனம் உரு எடுக்கலாயிற்று. நல்வாழ்வு வாழ விரும்பும் மனிதன் உடலை என்ன பாங்கில் வைத்திருக்க வேண்டும் என்னும் பாடத்தை கற்றுக்கொள்ளுதல் முற்றிலும் அவசியமாகிறது. அன்று அப்பெம்மான் அறிந்துகொண்ட இப் பேருண்மை என்றென்றும் எல்லார்க்கும் பயன்படக் கூடியது.

பற்றுதல் மனிதனுடைய மனத்தைப் பாழ்படுத்துகிறது. பற்றற்ற வாழ்வு பண்புகள் அனைத்தையும் வளர்க்கவல்லது. தேனீ பல பூக்களை நாடிச்செல்கிறது. ஆனுல் ஒரு பூவிலும் அது பற்றுதல் வைப்பதில்லை. மலர்களை நாடி வருகிற மற்ற

ஈக்களோடு அது சண்டையிடுவது மில்லை. பற்றற்ற நிலையில் தனக்கு வேண்டிய தேனை எடுத்துக்கொணடு அது தன் போக்கில் போய்விடுகிறது. மனிதன் உலகில் அங்ஙனம் வாழ்ந்திருக்க வேண்டும்- தனக்குத் தேவையானவைகளை மனிதன் உலகிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். ஆனால் உலகில் எவ்விதத்திலும் அவன் கட்டுண்டு போய்விட லாகாது. வாழ்க்கையில் வைத்துள்ள பற்றுதலே ஏனைய பந்தங்களுக்கெல்லாம் அடிப்படைக் காரணமாகிறது. தன் வாழ்வை மனிதன் பெருமிதப்படுத்து கின்றான். தன் வாழ்வின் பொருட்டு மற்ற உயிர்களை ஒழிக்கவும் அவன் முற்படுகின்றான். அத்தகைய மனப்பான்மையே இறுதியில் அவனைத் துக்கத்தில் ஆழ்த்திவிடுகிறது. பற்று நீங்கியவன் பிற உயிர்களை ஒறுப்பதற்குப் பதிலாகத் தன் உயிரையே பிற உயிர் நலத்தின்பொருட்டு வழங்க முன்வருகிறான். மன்னுயிரைவிடத் தன்னுயிரைப் பெரிதாகப் பாவிப்பவன் துக்கத்துக்கு ஆளாகிறான். மன்னுயிர்கள் இன்புற்றிருக்கும் பொருட்டுத் தன்னுயிரை ஒப்படைக்குமளவு உலகில் மனிதன் நலத்தை வழங்குகின்றான். சித்தார்த்த முனிவர் பல தடவைகளில் பிற உயிர்களின் பொருட்டுத் தம்உயிரையே தியாகம்பண்ண முன்வந்தார். ஒரு நிகழ்ச்சியை ஈங்குச் சான்றாக எடுத்துக்கொள்வது பொருந்தும்.

இடையன் ஒருவன் ஒரு ஆட்டுமந்தையை ஓட்டிக்கொண்டு போனான். அம்மந்தையில் நொண்டி ஆடு ஒன்று நடக்க முடியாது பின்தங்கியது. இடையன் அதை அடித்து ஓட்டினான். அதன் குட்டிகள் இரண்டு இங்குமங்கும் ஓடித் துள்ளிக் குதித்துக் குதித்துக்கொண் டிருந்தன. நொண்டி ஆட்டுக்குத் தன் குட்டிகளைப் பற்றிய கவலை ஒருபுறம்; நடக்க முடியாத நிலையில் இடையனால் தூண்டப்பட்ட துயரம் ஒரு புறம். இக்காட்சியைச் சித்தார்த்த முனிவர் பார்த்தார். ஆட்டு மந்தையை எங்கே இடையன் ஓட்டிக்கொண்டு போகிறான் என்று அவர் கேட்டார். பலியிடு தற்குப் பிம்பிசார மன்னனது யாகசாலைக்கு அவைகள் போய்க்கொண் டிருக்கின்றன வென்று அவன் பதில் சொன்னான். அதைக் கேட்டதும் முனிவர் உள்ளத்தில் கருணை மேலிட்டது. நடக்க முடியாத நொண்டி ஆட்டை அவர் தம் தோளில் போட்டுக்கொண்டு இடையனோடு சென்றார். மரணத்தை நோக்கிச் சென்று கொண் டிருந்த ஆட்டின் துயரத்தைச் சிறிது நேரமாவது துடைத்துவைப்பது தம் கடமை என்று அவர் உணர்ந்தார். கடைசியாக யாகசாலைக்குள்ளும் அவர் நுழைந்தார். அங்குக் கூடியிருந்தவர்களோடு அவர் சிறிது உரையாட ஆரம்பித்தார். எதற்காக அவ்வுயிர்களை அவர்கள் வதைக்க வேண்டும் என்று அவர் கேட்டார். அத்தகைய யாகத்தால் தாங்கள் சொர்க்க பதவியைப் பெறமுடியுமென்று அவர்கள் விடை விடுத்தார்கள். பிற உயிரைத் துன்புறுத்திச் சொர்க்க பதவியை நாடுவது சான்றோர் செயலாகா தென்று முனிவர் தடை செய்தார். யாகத்தில் பலியிடப்பட்ட உயிர்கள் மேல் நிலைக்குப் போகின்றன வென்று அவர்கள் சமாதானம் கூறினர். ஆட்டுக்குப் பதிலாகத் தம்மையே பலியாகக் கொடுத்துவிடும்படி தமது உடல் வாழ்க்கையை அவர் அந்த வேள்வி வேட்டவர்களிடம் ஒப்படைத்தார். சாக்கிய முனிவருடைய தியாகம் வேள்வி வேட்டவர்களுடைய மனத்தை அறவே மாற்றிவிட்டது. சிற்றுயிர்களைப் பலியிடும் கீழான செயலை அப்பொழுதே அவர்கள் நிறுத்திவிட்டார்கள். பிற உயிர்களுக்குத் துன்பத்தை விளைவித்து எம்மனிதனும் தனக்கு இன்பத்தை நாடலாகாது என்பது புத்தரது போதனை. அவருடைய போதனைக்கு எடுத்துக்காட்டாக அவருடைய வாழ்வே அமைந்திருந்தது.

சீலம் நிறைந்த நல்வாழ்வே வடிவெடுத்தவராகச் சாககியமுனிவர் இருந்தார். இப்பிரபஞ்ச வாழ்க்கையின் அடிப்படைத் தத்

துவம் யாது என்பதை அறிந்துகொள்ள அவர் பேரார்வம் கொண்டிருந்தார். அதைக் குறித்து அவர் ஆழ்ந்த தியானங்கள் செய்வதுண்டு. அந்தத் தியானத்தின் விளைவாக அவர் நிர்வாணம் என்னும் பேரனுபவத்தைப் பெற்ருர். ஓர் அரச மரத்தடியில் வைகாசிப் பௌர்ணமியன்று ஆழ்ந்த நிஷ்டையில் உட்கார்ந்தார் உடலே உலர்ந்து போய்விட்டாலும் சரி, உயிர் ஒடுங்கிவிட்டாலும் சரி வாழ்க்கையைப் பற்றிய முடிவான உண்மையைத் தெரிந்துகொள்ளுவதற்கு முன்பு தான் அமர்ந்திருந்த ஆசனத்தை விட்டு எழுந்திருப்பதில்லை என்ற உறுதியுடன் அவர் தியானத்தில் அமர்ந்தார். அதன் விளைவாகவே அவருக்கு அந்த நிர்வாண நிலை எட்டியது; புத்தர் என்னும் பட்டம் அதன் பிறகே அவருக்கு அமைந்தது. நிறைஞானி என்பது அப்பட்டத்தின் கருத்து ஆகும். வாழ்க்கையைப் பற்றிய முடிவான உணமைகளை யெல்லாம் தாம் அடைந்திருந்த நிர்வாண நிலையில் அவர் அறிந்துகொண்டார். அதன் பிறகு நன்னெறியை மக்களுக்கு எடுத்துப் புகட்ட அவர் முன்வந்தார். அவர் புகட்டியுள்ள சீலங்கள் யாவும் எக்காலத்துக்கும் எல்லார்க்கும் பயன்படும் மேலான கோட்பாடுக ளாகும். மனிதனை நல்ல மனிதனுக மாற்றியமைப்பதே அக்கோட்பாடுகளின் நோக்கமாகும்.

துன்பம் என்னும் மயக்கத்தி னின்று உயிர்களை உய்விப்பவராகப் புத்தர் பல இடங்களுக்குப் போய்க்கொண் டிருந்தார். புதிய ஊர் ஒன்றுக்கு ஒரு நாள் அவர் போய்ச் சேர்ந்தார். அவருடைய மகிமைகளை யெல்லாம் கேள்விப்பட்ட மாது ஒருத்தி, கண்ணீரும் கம்பலையுமாக அவர் முன்னிலைக்கு ஓடிவந்தாள். தனது பரிதாபகரமான நிலையை அவரிடம் தெரிவித்துக் கதறிப் பதறி அழ ஆரம்பித்தாள். அவளுக்கு உற்ற துன்பம் யாது என்பதைப் பரிவோடு புத்தர் வினுவினர். தனக்கு வாய்த்திருந்த ஒரே மகனை இழந்துவிட்ட விதவை என்று தனது துர்பாக்கியத்தை அவள் வெளியிட்டாள். புத்தர் கிருபை வைத்தால் செத்தவனுக்கு உயிர் கொடுக்க முடியுமென்று அவள் ஏங்கி அழுது வேண்டிஞள். செத்தவனுக்கு உயிர் கொடுக்க உபாயம் ஒன்று உண்டு என்று பொறுமையாகப் புதத்ர் மொழியலானுர். 'கொஞ்சம் கடுகு கொண்டுவர முடியுமா' என்று அக் கைம்பெண்ணை அவர் கேட்டார். 'கடுகு கொண்டுவருவதில் கஷ்டம் ஒன்றுமில்லை' என்று அவள் விடை விடுத்தாள். 'இல்லை, கஷ்டம் ஒன்று இருக்கிற'தென்று புத்தர் தெரிவித்தார். 'முன்பு மரணம் நிகழாத வீட்டி லிருந்துதான்தான் வேண்டும் கடுகைக் கொணடுவர வேண்டு' மென்று அவர் நிபந்தனையிட்டார். அங்ஙனமே செய்ய இசைந்த மாது வீடுவீடாகச் சென்று விசாரித்தாள். எந்த வீட்டில் போய்க் கேட்டாலும் அங்கு முன்பு மரணங்கள் பல நிகழ்ந்திருந்ததாகவே ஊரார் விடை விடுத்தனர். ஏமாற்றம் அடைந்த மாது புத்தரிடம் திரும்பிவந்து மரணத்தை அறியாத குடும்பம் அவ்வூரில் ஒன்றுமில்லை என்று தெரிவித்தாள். "எல்லாக் குடும்பங்களிலும் மரணம் நிகழ்ந்துகொண்டிருக்கும் பொழுது உன் வீட்டில்மட்டும் அது நிகழாதிருக்கும்படி நீ எதிர்பார்ப்பது நியாயமா?" என்று புத்தர் கேட்டார். உலகில் உயிர்கள் அனைத்துக்கும் ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் வரும் முடிவே அவளுடைய மைந்தனுக்கும் வந்திருந்ததென்று அவர் ஆறுதல் சொல்லி அனுப்பினுர். அம்மாதின் நிலையில் தான் உலக மக்களில் பெரும்பாலார் இருக்கின்றனர். உயிர்கள் ஓயாது மறைந்துகொண்டிருக்கின்றன. ஆனுல் ஒவ்வொருவரும் தான் மடியலாகாது, தன்னுடைய உற்ருர் மடியலாகாது என்று வீணே மனக் கோட்டை கட்டுகின்றனர். மாய்வதற்கு ஆயத்தமாக இருப்பவனே நல்வாழ்வு வாழ்வதற்கும் தகுதியுடையவன் என்பது புத்தரது கோட்பாடு.

புத்தர் புகட்டிய கோட்பாடுகள் எல்லாம் யுக்திக்கும் அனுபவத்துக்கும் முற்றிலும் பொருத்தமானவைகள். மனிதன் நல் வாழ்வு வாழவேண்டும் என்பது அவருடைய போதனைகளின் அடிப்படைக் கருத்து ஆகும். வாழ்வு என்பது மனிதன் எண்ணுகிற எண்ணத்தின் புறத் தோற்றமாம். எண்ணுகின்ற எண்ணத்துக்கு ஏற்றவாறு மனிதனுக்கு வாழ்க்கை வந்தமைகிறது. நல்லெண்ணம் எண்ணுகிறவனுக்கு இயல்பாகவே நல் வாழ்வு வந்தமைகிறது. நல்லெண்ணம் எது என்கின்ற கேள்வி அடுத்தபடியாக எழக்கூடும். மனிதனுக்கு நலம் தருவது எது, கேடுகளை விளைவிக்கக் கூடியது யாது ஆகியவைகளை முறையாகப் பாகுபடுத்த வல்லவன் நல்லெண்ணம் எண்ணுகிறான். வாழ்க்கையில் நிலைத்துள்ளது யாது, நிலையற்றது யாது என்பதை முறையாக அறிந்துகொள்ளுதலும் நல்லெண்ணத்தின் விளைவாம். ஒருவன் தன்னை மற்ற உயிர்களுக்குப் புறம்பானவன் என்று எண்ணுவது நல்லெண்ணமல்ல. தனக்கு உண்டாகும் துன்பம் மற்ற உயிர்களுக்கு உண்டாகும் துன்பத்தைவிட மிக அதிகமானது என்று தன்னைத் தானே சிலாகித்துக்கொள்வது நல்லெண்ணத்தின் விளைவு அல்ல. ஒரு மனிதனுடைய தனி நலன் சமூகத்தினுடைய பொது நலனில் அடங்கியிருக்கிறது என்று உணர்வது நல்லெண்ணம். ஏனென்றால் உயிர்கள் அனைத்துக்கும் வாழ்க்கையைப் பற்றிய விதி ஒரே பாங்குடையதாய் இருக்கிறது.

எண்ணத்தின் புறத் தோற்றமாகவே சொல் வந்துஅமைகிறது. நல்லெண்ணம் எண்ணுகின்றவனே நல்ல சொற்களை மொழிகின்றான். மக்கள்மீது அன்பு கொண்டிருக்கின்றவன் உண்மையானவைகளும், தூயவைகளுமான சொற்களையே பேசுதல் வேண்டும். பிறரைச் சிறுமைப்படுத்துகிற சொற்களும், பிறரை ஏமாற்றி அவர்களிடத்து இருப்பவைகளை அபகரிப்பதற்காக வென்று பேசுகிற பேச்சுக்களும் தூய பேச்சுக்கள் ஆகமாட்டா. பிறர்க்கிடையில் பிளவை உண்டுபண்ணுவதற் கென்று பேசுகிற பேச்சும் நன்மொழி ஆகாது. பொருந்தாத பேச்சுக்களை எல்லாம் மனிதன் புறக்கணித்துவிட வேண்டும்.

உலகிலுள்ள உயிர்கள் அனைத்தின் நலத்துக் கென்றே அமைந்துள்ள செயல்களையே மனிதன் புரியவேண்டும். தனக்கு ஊதியம் கிடைக்கவேண்டும் என்கிற எண்ணத்துடன், அல்லது தனக்கு சன்மானம் கிடைக்கவேண்டும் என்கிற எண்ணத்துடன் செய்கின்ற செயல் நல்ல செயல் ஆகாது. சுயநலத்தால் தூண்டப் பெற்று ஆற்றுகின்ற வினையும், பொறாமை வெகுளி ஆகிய கீழான மனப்பான்மையினால் தூண்டப்பட்டுச் செய்கின்ற வினைகளும் நன்மை விளைவிக்கமாட்டா. அத்தகைய வினையினின்று கேடே அதிகரிக்கும். கீழான எண்ணத்தி னின்று மேலான வினை ஒரு பொழுதும் உரு எடுப்பதில்லை.

தான் உயிர் வாழ்ந்திருத்தற் பொருட்டு ஒவ்வொரு மனிதனும் ஏதேனும் ஒரு வினையை ஆற்றியே ஆகவேண்டும். அப்படி மனிதன் ஆற்றுகின்ற தொழில் மேலானதாகவும், நேர்மையானதாகவும் இருக்க வேண்டும். பிறரை வஞ்சித்து அல்லது பிறர் பொருளை முறைதவறி அபகரித்து வாழும் வாழ்வு மனிதனைத் துன்பத்தில் கொண்டு சேர்க்கும். ஒரே உயிர்த் தத்துவம் உயிர்கள் அனைத்திடத்தும் பொலிந்திருப்பதால் தன்னுயிர் போன்று மன்னுயிர்களையும் நேசிக்க மனிதன் கற்றுக் கொள்ள வேண்டும். பிறர் நலத்துக்காக வென்று ஓயாது உழைப்பதன்மூலம் தன் நலத்தை எவன் ஒருவன் மறந்து 'விடுகின்றானோ அவன் ஒரு நாளும் துன்பமடைவதில்லை: புத்தர் புகட்டிய நல்வாழ்வின் சாரம் இவைகளேயாம்.


புத்தர் பெம்மான் நிறைஞானி ஆன பிறகும் வெவ்வேறு இடங்களுக்கு அவர் போய்க்கொண்டே இருந்தார். சென்ற இடங்களில் எல்லாம் தமது சீரிய நெறிகளை மக்களுக் கெடுத்து வழங்குவது அவருடைய செயலாய் இருந்து வந்தது. அப்படி அவர் தேச சஞ்சாரம் செய்து வந்த பொழுது நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்று நமக்குச் சீரிய பாடத்தைப் புகட்ட வல்லதாகிறது. ஒருநாள் மாலை அவர் நடந்து போய்க் கொண்டிருந்தார். திடீரென்று மேகம் கூடிப் பெருமிதமாக மழை பொழிந்தது. அதைப் பொருள் படுத்தாது நனைந்த வண்ணம் அவர் அமைதியாக ஒரு கூரைக் கொட்டகைக்குள் போய்ச் சேர்ந்தார். அக் கோலத்தை ஆட்டு இடையன் ஒருவன் பார்த்தான். அவர் மழையால் நனைந்து அவதிப்பட்டுக் கிடக்கிறார் என்று அவன் பொருள் படுத்தினன். அத்தகைய கேடு ஒன்றை மனிதன் எளிதில் தவிர்த்து விடலாமே என்று இடையன் கருதினன். தனக்குத் தோன்றிய மேலாம் கருத்து ஒன்றை வெளியிட்டான். அவன் பகர்ந்ததாவது: "பூமியின் விளைவை அறுவடை செய்து தானியத்தைச் சேகரித்துக் களஞ்சியத்தில் போட்டாய்விட்டது. வைக்கோலை எல்லாம் போராக வேய்ந்தாய்விட்டது. ஆடுமாடுகளை யெல்லாம் கொட்டகைக் குள்ளே பத்திரமாக ஓட்டி அடைத்து வைத்தாய்விட்டது. செய்யவேண்டிய செயலையெல்லாம் முறையாகச் செய்தாய்விட்டது. இனிக் கவலைக்கு இடமொன்று மில்லை. ஆகையால் வேண்டியவாறு கொட்டு மழையே கொட்டு". என்று அவன் இயம்பினன். புத்தர்பெம்மான் அத்தகைய முன் எச்சரிக்கை ஒன்றும் எடுத்துக்கொள்ள வில்லை என்பது அவன் கருத்து.

புன்னகை பூத்தவராகப் புத்தர் பெம்மான் பகரலானர்: "மனம் என்னும் உயிருணவை வைக்கவேண்டிய இடத்தில் வைத்தாய்விட்டது. பஞ்சேந்திரியங்கள் என்னும் வாயில்களை எல்லாம் நன்கு அடைத்தாய்விட்டது. சஞ்சலப் படுதல் என்னும் கேடுகளை யெல்லாம் ஒதுக்கியாய்விட்டது. வீட்டின் கூரை வெய்யிலில் காய்வதாலும் மழையில் நனைவதாலும் வீட்டிற்குள் இருப்பவனுக்குக் கேடு ஒன்றும் வந்த தில்லை. மனத்தை வைக்கவேண்டிய இடத்தில் வைத்தவனுக்கு உடல் நனைவதாலும் காய்வதாலும் கேடு ஒன்றும் வருவ தில்லை. ஆகையால் கொட்டு மழையே கொட்டு" என்று அவரும் அனுபல்லவி பாடினர். நாம் எண்ணிப் பார்க்கவேண்டிய மேலாம் கோட்பாடு இதில் அடங்கி இருக்கிறது. புற உலகை ஒழுங்குபடுத்த உலகப் பற்றுடையார் முயலுகின்றனர். தம்மையே ஒழுங்குபடுத்தச் சான்றோர் முயலுகின்றனர். புத்தர்பெம்மான் இதற்கு நல்ல எடுத்துக்காட்டு ஆவார்.

*

**சில மலர்கள் கண்ணைக் கவரும் வண்ணங்கள் கொண்டவை; ஆனல் அவற்றில் மணம் இருக்காது. சொல்வதுபோல் நடக்காதவனுடைய சொற்களும் இம் மலர்களைப் போன்றவையே. கேட்பதற்கு இனிமையாக இருக்கும்; ஆனல் பயன் இருக்காது. —புத்தர்.**


# புத்தர் ஆகுமுன்



*

பிறர்துயரம் தாங்குகின்ற பெருந்தன்மை அலைக்கழிப்ப
அரண்மனையின் பேரின்பம் அத்தனையும் துறந்தவராய்
உலகுதுயர் துடைப்பதுவே உயரின்பம் எனக்கொண்டு
நிலவுமுகத் தாமரையாள் நித்திரையில் ஆழ்ந்திருப்ப
நள்ளிரவில்—உலகொடுங்கும் நள்ளிரவில்—நாயகனார்
உள்ளமொன்றே துணையாக உலகுதுறந் தேகுகின்றார்

# புத்தர் ஆனபின்



*

மயிலனையாள் மஞ்சத்தில் மைந்தனொடும் நள்ளிரவில்
துயில்கின்ற காலத்தில் துறவுநெறி மேற்கொண்டு
யானெனதென் முனைப்படங்க யாவருக்கும் விழிப்பூட்டப்
போனபிரான் போதியின்கீழ்ப் புத்தபிரான் ஆனபின்னர்
உயிர்த்துயிலாம் மருள்நீக்கி உய்வுநெறி காட்டுதற்காய்ச்
செயிர்நீத்த அசோதரைபால் சேர்ந்துநிற்கும் திருக்காட்சி

# "கற்பகச் சோலை"

திரு. தா. ஏ. ஞானமூர்த்தி, M. A.

★

தேவர் கண்ட ஏமாங்கத நாட்டின் மாட்சியினை நாம் *முன் கட்டுரையில் ஆராய்ந்தோம். அந்நாட்டின் தலைநகரம் இராசமாபுரம் என்பது. திருத்தக்க தேவர் இராசமாபுரத்தின் பல பகுதிகளின் சிறப்புக்களைத் தம் காவியத்தில் திறம்பட ஓதுகிறார். அந் நகரத்தின் ஒவ்வோர் இடமும் நம் உள்ளத்தைக் கவர்கிறது.

அந்நகரம் கண்ணைக் கவரும் பூங்காவால் சூழப்பட்டு ஒளிர்ந்தது. அக்காவினுள் சண்பக மரங்கள் வானளாவ வளர்ந்திருந்தன. அவற்றின் கிளைகள் யாவும் நிரம்பப் பூத்து மிளிர்ந்தன. மலர்களின் சுமையைத் தாங்க இயலாமல் அக்கிளைகள் மெலிந்து தோன்றின. அக்காவினைக் காண்போர் எவரும் தம் உள்ளத்தை அதன் கண் பறி கொடுப்பர். அவர் தம் கண்களைக் அக்காவின் வனப்பு கவர்ந்து கொள்ளும். அதனைக் **"கண்சிறைப் படுநிழற்கா"** என்று தேவர் சிறப்பிப்பர்.

இராசமா புரத்தில் பொய்கைகள் பல உண்டு. பொய்கையாவது மானிடர் ஆக்காத நீர்நிலை. இந்நீர் நிலைகளில் மாந்தர்கள் நீராடுவர். நீராடுங்கால் அவர்கள் மீது பூசியிருந்த சந்தனம், நறுமணப்பொடி குங்குமம், புனுகு முதலியனவும் அவர்கள் அணிந்திருந்த மாலைகளும் நீரிலே மிதக்கும். இவைகளே அந்நீர்நிலை முழுதும் தோன்றும். இந்தக் காட்சி நம் தேவர் திருவுள்ளத்தில் ஓர் அரிய கற்பனையைத் தோற்றுவிக்கிறது. பொய்கையாகிய பாவை தன்கண் பிறருடைய மாசுபட்டு விட்டதே என்னும் நாணத்தால் ஓர் அழகான போர்வையினால் தன்னைப் போர்த்திக் கொண்டிருந்தது என்கிறார் ஆசிரியர்.

அந்நகரத்தைச் சுற்றி வன்மையான கன்மதில் இருந்தது. அம்மதிலுசகுப் பக்கத்தில் யானைக் கூட்டங்கள் நிறைந்து பொலிந்தன. இன்னும் அவ்விடத்தில் யானைகள் போர் செய்தற்குரிய களங்கள் அழகுடன் விளங்கின.

அந்நகரத்தின் எல்லை சார்ந்த இடம் கடை நகர் எனப்படும். அக்கடை நகரில் யானையின் மருப்பிற்குப் பூணிடுதலாகிய தொழில் புரிவோர் வாழும் வீதிகள் இருந்தன. அவர்கள் யானையின் தந்தத்தை அறுத்துக் கூர்மை செய்து அதற்கு வைரத்தால் பல வேலைப்பாடுகள் அமைந்த பூணினை இடுவர். இன்னும் அக் கடை நகரில் தேரேறும் இடமும், கேடகத்தோடு வாள் தொழிலும், வில் தொழிலும் பயிலிடங்களும் அமைந்திருந்தன.

இனி, இராசமா புரத்தின் இடை நகரில் இளம் பெண்கள் நறுமணம் மிக்க செந்நிறமான பொடிகளையும், பொன் நிறமான பொடிகளையும், சந்தனத்தையும் பனி நீரோடு கலந்து நீர்வீசு கருவிகளில் ஊற்றிச் சிதறுவர் இங்ஙனம் சிதறப்பட்ட பொடிகள் வீதிகள் எங்கும் படிந்து பல

* கலைக்கதிர் ஏப்ரல் 1956 இதழ்.

வண்ண அழகுடன் பொலிவுறும். அப் பன்னிறக் காட்சி இந்திரவில் தரையிலே கிடப்பதுபோல இருந்தது என்பர் ஆசிரியர்.

இடை நகரின்கண் இருந்த மாடங்கள் பசும் பொன்னுல் ஆனவை. அம் மாடங் களின் உச்சியில் நீல மணியால் செய்யப் பட்ட குடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அந்நீலமணிக் குடங்கள் மலர்கள் நிறைந்த வேங்கை மரத்தின் மீது மேகத்தை நினைந்து அமர்ந்திருக்கும் மயில்கூட்டம் போல அழகுறத் தோன்றின.

இன்னும் அந்நகரத்தின் செல்வச் சிறப் பினை ஆசிரியர் எடுத்துரைக்கும் திறம் பெரிதும் இன்பம் பயப்பதாம். நெல்லைக் காவல் புரியும் நங்கைமார்கள், அந்நெல்லை உண்ண வரும் கோழி மீது விலையுயர்ந்த தம் குழை(காதணி)யைக் கழற்றி எறிவர். இங்ஙனம் எறியப்பட்ட அணிகலன்கள் வீதியில் அங்குமிங்கும் சிதறிக் கிடக்கும். வீதியில் பொன்னுலாகிய சிறு தேரினைச் சிறுவர்கள் உருட்டிக் கொண்டு செல்வர். வீதியில் சிதறிக் கிடக்கும் குழைகள் அத் தேரைப் போகவிடமால் தடை செய்யும்.

இதே கருத்து பட்டினப்பாலை யிலும் கூறப் பெறுகிறது.

*''நேரிழை மகளிர்*
*உணங்குணுக் கவரும்*
*கோழி யெறிந்த*
*கொடுங்காற் கனங்குழை*
*பொற்காற் புதல்வர்*
*புரவியின் றுருட்டும்*
*முக்காற் சிறுதேர்*
*முன்வழி விலக்கும்''*

(பட்டினப். 22–26)

இக் கருத்தையே திருத்தக்க தேவர் தம் காவியத்தில் அமைத்துக் கொண்டார் என்பது வெள்ளிடை மலை. இது போன்று பல சங்க இலக்கியக் கருத்துக்களையும் திருக்குறள் கருத்துக்களையும் இவ் வாசிரியர் தம் காவியத்தில் பல இடங் களில் எடுத்து ஆண்டிருக்கிருர். ஓர் ஆசிரியரின் சொற்ருெடர், கருத்து, கற் பனை ஆகிய இன்னேரன்னவைகளைப் பிற ஆசிரியர்கள் தம் நூலில் அமைத்துக் கொள்வது முறையா? அவற்றைப் பிற ஆசிரியர்கள் தம் நூலில் பயன்படுத்திக் கொள்வதிலிருந்து, அவை மிகவும் சிறந்த வை என்பது புலனும். சிறந்த கருத்துக் களையும் சொற்ருெடர்களையும் பல முறை உரைப்பதால் இழுக்கொன்றும் இல்லை. இதனுல் ஒரு நூலின் சிறப்புப் பெருகுமே அன்றி குறைவுருது.

இராசமாபுரம் செல்வத்தால் சீர்மை எய்தி இலங்கியது. செல்வம் மலிந்த ஊரில் சொல்லொணு இன்பம் பெருகும் என்று கூற வேண்டுவதில்லை. அந் நகரத்து மாந்தர்கள் காதல் இன்பத்தில் மூழ்கினர்.

*''மாலையும் பசும்பொனும்*
*மயங்கி வார்கணைக்*
*கோலெயுங் குனிசிலை*
*நுதலி ஞரொடு*
*வேலியல் ஆடவர்*
*விரவி விண்ணவர்*
*ஆலய மிதுவென*
*ஐயம் செய்யுமே''*

(சிந்–90)

இப் பாடல் இராசமாபுரத்து மாந்தர் எய்திய காதல் இன்பத்தை விளக்குகிறது. கூர்மையான அம்புகளை எய்யும் வில்லைப் போல நன்கு வளைந்த நெற்றியையுடைய வர்கள் நங்கைமார்கள். ஆடவர்கள் வேற் படைப் பயிற்சியிலே திறம்பெற்ற வீரர்கள். இவ்வில் வீரர்கள் நங்கையரின் நுதலாகிய வில்லின் வலிமைக்கு மெலிவுற்று அவர் களை மருவினர். மருவுங்காலத்துக் காதலர் கள் சூடியிருந்த மாலையும், மாதர்கள் அணிந்திருந்த அணிகலனும் ஒன்றே

டொன்று மயங்கின. இங்ஙனம் அந் நகரத்து மாந்தர் அனைவரும் அளப்பரும் காதல் இன்பத்தை எய்தினமையால் அந் நகரம் விண்ணவர் உறையும் பொன் னுலகமோ என்று ஐயுறும் வண்ணம் விளங்கியது.

ஒரு பழ மரத்தைப் பல பறவைகள் நாடுவது போல செல்வ வளங் கொழிக்கும் இடத்தைப் பல்திறப்பட்ட மக்கள் நாடுவர் அன்றோ? செல்வத்தால் சீர்பெற்றொளிரும் இராசமாபுரத்தில் பதினெட்டு மொழி பேசும் பல்வகை மக்கள் நிறைந்திருந்தனர். இட்ட எள் கீழே விழாவண்ணம் அத்துணை நெருக்கமாக அம்மக்கள் அந்நகரில் கூடி இருந்தனர் என்பர் திருத்தக்க தேவர்.

இனி, அந் நகரின் மதிலைச் சூழ்ந்திருந்த அகழியின் தன்மையைக் காண்போம். ஆழ்ந்த அகழியிலே பல அன்னப் பறவை கள் தம் குஞ்சுகளோடு இங்கு மங்கும் அழகாக இயங்கின. பெண்டிர் தம் முன் கைகளிலே கிளிகளை ஏந்திக்கொண்டு அகழியிலுள்ள அன்னக் குஞ்சுகளை அக் கிளிகளுக்கு எண்ணிக் காட்டுவர். அவ் அகழியில் சுறு இனங்களும் முதலைகளும் எண்ணற்றனவாய் நீருக்குள்ளே திரிந்தன. அகழியில் ஓர் அன்னத்தின் காட்சியை அழகுபடச் சித்தரிக்கிறார் ஆசிரியர்:

"சிறையனப் பெடையினோ(டு)
ஊடிச் சேவல்போய்
அறுபத வண்டினம்
ஆர்ப்பத் தாமரை
உறைவது குழுவினின்
நீங்கி யோகொடு
கறையற முயல்வதோர்
கடவுள் ஒத்ததே."

(சிந்-96)

ஓர் அன்னம் தன் பெடையினோடு ஊடல் கொண்டு அதைவிட்டு நீங்கி ஒரு செந்தாமரை மலரை அடைந்து அதன் கண் தனித்து உறைந்தது. அது அம் மலரை அடைந்ததும் அதன் கண் இருந்த வண்டுகள் ஆர்த்து எழுந்தன. இங்ஙனம் வெண்ணிறமான அன்னம் செந்நிறத் தாமரையின்கண் தனித்திருந்த காட்சி ஒரு முனிவர் சுற்றத்தினின்றும் நீங்கிக் காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மும் மலங்கள் அறும் பொருட்டுத் தீயிடை நின்று தவஞ்செய்வது போன்றிருந்தது.

இன்னும் அவ் அகழியை ஆசிரியர் பரத்தைக்கும், குலமகளுக்கும், கன்னிக் கும் ஒப்பிட்டுக் கூறும் நயம் சிந்தைக்கு இனிய நல்விருந்தாகும். தன்னை அடை யும் ஒருவனை அழிக்கும் தன்மையுடை யவள் பரத்தை. இதைப்போலவே அகழி தன்கண் அகப்பட்டவரை ஆழ்த்திக் கொல்லும். மணம் செய்த குலமகள் அழ குடன் விளங்குவாள். அகழி தன்கண் ணுள்ள மலர்களினால் அழகுடன் ஒளிர்ந் தது. கன்னியானவள் கற்பைத் தனக்குக் காவலாக உடையவள். அகழி தனக்குப் பல போர் வீரர்களின் காவலைப் பெற்றி ருந்தது.

அடுத்து ஆசிரியர் மதிலின் பெரு மையை விளக்குகிறார். மதிலின்கண் பல வகையான பொறிகள் அமைக்கப்பட்டி ருந்தன. மாற்றவர்கள் அகழியைக் கடந்து மதிலைப் பற்றுவார்களாயின் அப்பொறிகள் அவரைத் தாக்கி அழித்தொழிக்கும். ஒரே சமயத்தில் நூறுபேரை அழிக்க வல்ல நூற்றுவரைக்கொல்லி என்ற பொறியும், பகைவர்களைத் தள்ளி அடிக்கும் நூக்கி யெறி என்ற பொறியும், பேய்ப்பொறியும், களிறுப் பொறியும், பகைவர்களை விழுங் கும் பாம்புப் பொறியும், தானே சென்று பகைவர்களைக் கட்டும் சங்கிலிப் பொறி யும், புலிப் பொறி முதலியனவும் அங் கிருந்தன. இன்னும் விற் பொறி, பகைவர் மேல் விடுங் குதிரைப் பொறி, பகை வரைத் தானே தொடர்ந்து கொல்லும் தொடர்வாள், வந்தோர் மேல் கல்லை

வீசும் கற் பொறி, தீப் பொறி, பகைவரது தலைகளைத் திருகிக் கொல்லும் நெருக்கு மரம் முதலியவைகளும் மதிலுக்குப் பாது காவலாக அமைக்கப்பட்டிருந்தன.

இவையே யன்றி, எங்கும் திரிந்து குழம்பை உமிழும் செம்புருகும், இரும் புருண்டைகளை உமிழும் வெம்புருகும், வெப்பமான நெய் உமிழும் பொறியும், அம்புமிழும் பொறியும், வேலுமிழும் பொறியும், கல்லுமிழும் பொறியும், இரும்பால் இயன்ற பன்றிப் பொறியும், நாகப்பொறியும், குரங்குப்பொறியும், தகர் (ஆட்டுக்கிடாய்)ப் பொறியும், பிடித்த கையை அரியும் நுண்ணூலும் மதிலின்கண் பொருத்தப்பட் டிருந்தன. இதிலிருந்து பழங்காலத் தற்காப்புப் படையின் திறத்தை நாம் உணரலாம்.

இனி, உள்நகரத்தின் சிறப்பைக் காண்போம். உள் நகரத்தில் முதற்கண் பரத்தையர் இடத்தை ஆசிரியர் விளக்குகிறுர். பரத்தையர் சேரி எத்தகையவரையும் கவரும் பொலிவோடு திகழ்ந்தது. அச் சேரியைச் சார்ந்த இடமும் திண்ணைகளும் குங்குமத்தாலே மெழுகப்பட்டிருக்கும். உள்ளிடமெங்கும் சந்தனத்தால் மெழுகப் பெற்று மாலைகள் தாழத் தொங்கும். வீடுகளின் அழகான சுவர்கள்தோறும் காமக் குறிப்புப்பட நாடகம் எழுதியிருக்கும். மாளிகைக்குள் மெல்லிய மலர்கள் பரப்பிய படுக்கைப் பொலிவுறும். விண்ணவரையும் அங்கு வந்து விரும்பும்படியாகச் செய்யும் அத்துணைச் சிறப்புக்களோடு அச்சேரி விளங்கியது. அங்கு வாழ்ந்த பரத்தையர்கள் தம் தோழியரை ஆடவர்கள்பால் தூதாக அனுப்பி அவர்களைத் தம்பால் இழுப்பர். தூது செல்லும் தோழியர் மிக்க அழகு வாய்ந்தவர்கள். பவழத்தையும் வெல்லும் நிறமும் அழகும் பெற்ற செவ்வாயினர் அவர்கள். மேலும் அவர்கள் உரைக்கும் தூதுமொழி எத்தகைய ஆடவர் உள்ளத்திலும் வேட்கையினை விளைவிக்கும். பரத்தையர்கள் தம்மிடம் வந்த ஆடவனுக்குத் தன் உடலைச் செம்பொன் ஒன்றுமுதல் ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன் ஈருக விலை பேசி விற்பர். (கழஞ்சு என்பது பன்னிரண்டு பணவெடைகொண்ட நிறை). அவர்கள் என்றும் உவர்ப்பில்லாத காம நுகர்ச்சியை உடையவர்கள்.

பரத்தையர் சேரி எங்கும் இடையருது இனிய ஒலிகளே நிறைந்திருக்கும். கட்டிளங் காரிகையர் அணிந்திருந்த சிலம்பின் ஒலியும், மேகலையின் ஒலியும், அவர்கள் இசைக்கும் யாழ் ஒலியும், பாட்டொலியும், குழல் ஒலியும், முழவின் ஒலியும் சேரி எங்கும் நிறைந்து செவிக்கு இன்பம் பயக்கும். இவ் இன்னெலியால் தேவர் உலகமும் பரத்தையர் சேரிக்கு நிகராகாது. என்று வியக்கின்றனர் திருத்தக்க தேவர்.

அந்நகரத்தில் கடைத் தெருவில் பல கடைகள் பொலிவுற்று விளங்கின. ஒவ்வொரு கடையின் முன்னிடத்தில் கம்பலக்கிடுகு இடப்பட்டிருக்கும், கம்பலக்கிடுகாவது கடைகளுக்கு முன்னுகப் பகலில் உயர்த்தி வைத்தற்கும் இரவில் தாழ்த்தி வைத்தற்கும் அமைக்கப்பட்ட சட்டமாகும். இது கம்பலத்தால் வேயப்பட்டிருக்கும். இராசமாபுரத்துக் கடைகளின் முன்னுல் இடப்பெற்ற கம்பலக் கிடுகுகளின் கால்கள் மணிகள் பதித்த செம்பொன்னுலும் பவழத்தாலும் ஆனவை. அக்கிடுகுகள் முத்த மாலைகளால் அணி செய்யப்பெற்று விளங்கின. அக்கடைகள்தோறும் தரையைத் தூய்மையாக மெழுகிச் சந்தனப் புகையையும் அகிற் புகையையும் இடுவர்; பிறகு நிலத்தில் மலரிட்டுத் தெய்வங்களை வழுத்தி வெண்சிறுகடுகினைச் சிதறுவர். பின்பு கதவைத் திறந்து, பெட்டியிலிருந்து மணி, முத்து, வயிரம் முதலியவற்றை எடுத்துக் குவிப்பர்; இவையே யன்றிப் பவழங்களையும், ஒளிவீசும் அணிகலன்களையும் நண்பகலை இரவாகச் செய்யும் நீல மணிகளால் ஆய அணிகலன்களையும்

குவிப்பர். இங்ஙனம் வணிகர் இவ் விலையுயர்ந்த பொருள்களைக் குவிக்குங் கால் கீழே சில சிதறிப்போகுமானால், அவர்கள் அவற்றை எடுத்துக்கொள்ள மாட்டார்கள். சிதறியவற்றை எடுப்பது இராசமாபுரத்து வணிகர்க்குரிய ஒழுக்க மாகாது. இன்னும் அவர்கள் நடுதற்குக் கமுகு, தென்னை, வாழை முதலியவற்றைத் தேடவேண்டிய தில்லை. அவர்கள் அவற் றையும் பொன்னாலும் மணியாலும் செய்து கொண்டார்கள்; எனின் அவருடைய செல்வத்தை உரைக்க ஒண்ணுமோ?

கடைவீதியில் பல்வகையான மக்களும் நெருக்கமாகக் கூடியிருப்பர். தேனிருலைத் தேனீக்கள் எவ்வளவு நெருக்கமாக மொய்த்துக் கொண்டிருக்குமோ அதுபோல மக்கள் கடைவீதியில் நெருங்கிக் கொண் டிருப்பர் என்றும், ஒருவர் மார்பிலே பூசி யுள்ள சந்தனம் எழுவர் மார்பிலே பூசிக் கொள்ளும்படி அவ்வளவு நெருக்கமாக மக்கள் இருந்தனர் என்றும் உரைக்கின் றனர் தேவர். அங்கு எழுந்த ஓசை கட லொலி போல ஒலித்தது என்றும் அவ் வோசையை ஓசையென்றே உணர லாமே யன்றி அதன் எழுத்தின் வடிவு உணரலாகாதது என்றும் அவர் கூறுவர். பெருங்கூட்டத்தினர் ஒருவரோடொருவர் பேசிக் கொள்ளுங்கால் எல்லோருடைய குரலொளிகளும் ஒன்றி ஒரே ஓசையாக எழுமேயன்றி வேறு வேறு ஓசையாக எழாதன்றே?

*"மூசுதேன் இருலின்*
*மூச மொய்திரை*
*யியம்பி யாங்கும்*
*ஓசையென்(று) உணரின்*
*அல்லால் எழுத்துமெய்*
*யுணர்தல் ஆகாப்*
*பூசுசாந்(து) ஒருவர்*
*பூசிற்(று) எழுவர்தம்*
*அகலம் பூசி*
*மாசனம் இடம்பெ*
*றாது வண்கடை*
*மலிந்த தன்றே"*
*(சிந்-116)*

தேவரின் இம்மொழிகள் கடைவீதியில் கூடும் மக்களின் காட்சியை எத்துணை இன்பமுற உணர்த்துகின்றன காண்மின்!

இனி, கடைவீதியை விடுத்து மற்ற வீதி களுக்குச் செல்வோம். பொன்னிறமான நறுமணப் பொடியும் புழுகும் பனிநீரோடு கலந்து இளகிப் பின்பு யானையின் மத நீரோடும் மதுவோடும் கலந்து சேறுகும். இச் சேறே வீதிகள் எங்கும் நிறைந் திருக்கும். இதோடு அரிய அணிகலன் கள் வீதியில் பல இடங்களில் சிதறிக் கிடக்கும். இவ்வீதிகளில் யாரேனும் விரைவாக நடந்தால் அவர்கள் வழுக்கி விழவே நேரும். மேலும் சிதறிக்கிடக்கும் அணிகலன்களால் அவர்கள் கால்களுக்கு ஊறு நேரும். உள்நகர வீதிகளின் தன்மை இதுவாம். முரசும் சங்கும் முழங்குகின்ற கோயில்களிலே இடும்புகை மேகம்போல வீதியின் ஒரு பக்கத்தே மேலெழுந்து ஞாயிற்றை மறைக்கும். தேவர்களுக்குப் பூசை நடைபெறுங்கால் அரசர் பலர் தம் முடியும் முடியும் நெருங்க, தேவரை வணங் குவர். அப்போது அவர்கள் முடிகளி லிருந்து எழும் சுடர் மேகத்தின் மின்னலைப் போல ஒருபால் மின்னும்.

ஊடல் கொண்ட மகளிரைக் கணவன் மார்கள் துகில் பற்றி இழுப்பர். அங்ஙனம் இழுக்குங்கால் அவர்தம் இடையிலே அணிந்திருக்கும் மேகலையாகிய அணி கலன் அறுந்து, மணிகள் கீழே சிந்தும். சிந்திய பன்னிற மணிகள் வானவில்போல அழகுடன் ஒளிரும். இக் காட்சி வீதியின் மற்றொரு பால் விளங்கும்.

இன்னொரு பகுதியில் நிகழும் நிகழ்ச்சி நெஞ்சத்தைத் தொடும் தன்மைத்தாம். இல்லத்தினர் அறுசுவை உணவு உண்ணப்

பலரையும் அழைப்பர். ''சங்கை நுண்ணி தாக அறுத்தாற் போன்றனவாகிய தூய வெண்ணிறமான அரிசியால் ஆக்கிய சோற்றையும், நெய்யால் சமைத்த கறியையும், முதிர்ந்த தயிரால் அமைத்த துவையலையும், உண்ண விரைந்து வாருங்கள்; வந்து உண்பவர்களுக்கு அணிகலமும் தருவோம்'' என்ற உரை ஒரு பக்கத்தே கேட்கும்.

*''வளையறுத் தனையன*
*வாலரி யமைபதம்*
*அளவறு நறுநெயொ(டு)*
*அடுகறி யமைதுவை*
*விளைவமை தயிரொடு*
*மிசைகுவிர் விரையுமின்*
*உளவணி கலமெனும்*
*உரையின தொருபால்''*

இல்லறத்திற்கு உயிராகிய விருந்தோம்பலில் அந் நகர மாந்தர் கொண்டிருந்த ஆர்வம் இதனின்றும் புலனாகும். இராசமாபுரத்தில் அனைவரும் வளம்பட வாழ்ந்தனர். எனவே இல்லறத்தார்க்கு விருந்தினர் கிடைப்பது அரிதாயிற்று. ஆனால் தம் இல்லறம் சிறக்க அவர்கள் எப்படியும் விருந்தினரைப் பெறவேண்டும். ஆகவே விருந்தினர் நெஞ்சத்தில் வேட்கை மிகும்வண்ணம் உணவைப்பற்றி அவர்கள் உரையாற்றினர். சோற்றைப்பற்றியும், கறியைப்பற்றியும், துவையலைப் பற்றியும் அவர்கள் சிறப்பித்துரைத்த திறத்தை நோக்குமின். தூய வெண்மையான சங்கை நுண்ணிதாக அறுத்தாற்போன்ற மிக நேர்த்தியான அரிசியைக் கொண்டு சமைத்த சோறு என்றனர். எல்லாக் கறிகளும் நெய்யினால் செய்யப்பட்டவை என்று செப்பினர்; நன்கு முற்றிய தயிரால் அமைக்கப்பட்ட துவையல் என்றனர். இவைமட்டோ? உண்பார்க்கு அணிகலன்களும் உள என உரைத்தனர். இந்தப் பொற்கால நிலை எங்கே, தற்கால வறுமை நிலை எங்கே? இத்தகைய பொற்கால நிலையை நம் நாடும் நானிலமும் எய்துவது எக்காலம்!

அடுத்து உள் நகரத்து மனைகளின் சிறப்பு விளக்கப் பெறுகின்றது. மகளிர் பந்தாடுவர். அவர்கள் பந்தடிக்கும்போது அவ்வோசைக்கு அன்னம் அஞ்சி மேலெழுந்து பறக்கும். அப்போது வானத்தில் இயங்கும் மதியைத் தன்னினம் எனக் கருதி அதற்கருகே உள்ள மாடத்தின் உச்சிமீது அவ் வன்னம் அமர்ந்து மதியுடன் பொருந்தி யிருக்கும். திருவுடன் பொலியும் மனைகளின்மீது நெடுங்கொடி அசையும். அது அசைவது ஞாயிற்றின் தேரை இழுக்கும் ஏழு குதிரைகளின் வெம்மையை ஆற்றுவதுபோன்றிருக்கும் என்று தேவர் கற்பனை செய்கிறார்.

மனைகளின் நிலத்தே மெல்லியதாகச் சாந்தைப் பூசிப் பின்பு பொற் பூவோடு முத்துக்களையும் வைப்பார்கள். இது மனைகளின் செல்வ நிலையைக் குறிக்கும். மனைகளில் வாழ்தற்குரிய புறாக்கள் அங்குத் தங்குவதற்கு அஞ்சிச் சோலையைத் தமக்கு இடமாகக்கொள்ளும். ஏனெனில் மனைகளில் பொரிக்கறியினது வாசனைப் புகையும் மகளிர் கூந்தலுக்கிடும் அகிற் புகையும் நிறைந்திருக்கும். புறா புகைக்கு அஞ்சியோடும் தன்மை உடையது. எனவே அவை மனைகளை நீங்கிச் சோலையை நாடலாயின.

மனைகள் யாவும் வெள்ளியாலான அடுப்புகள் உடையவை. மாந்தர் வெள்ளி அடுப்பில் நறுமண மிக்க நறைக்கொடியையும் புழுகையும் விறகாக இட்டு எரித்து அதன்மீது பொற் கலத்தை ஏற்றி, நெய்யினால் இன்னமுது ஆக்குவர். ஆக்கிய உணவினைத் தாமே தமித்துண்ணுமல் விருந்தோடும் உண்பர். அவர்களுக்கு விருந்தினர் கிடைப்பது அருமை. எனினும் முயன்று விருந்தினரைப் பெற்று அவரோடும் உண்பார்கள்.

மகளிர் உயர்ந்த மாடத்தே நின்று கொண்டு பாக்கு மரத்தின் பழத்தையும்.

வெற்றிலைக் கொடியி லிருந்து வெற்றிலையையும் பறித்துத் தம் கணவன்மார்களுக்குத் தந்து, அவர்கள் அணிந்திருந்த சண்பக மாலையை வாங்கிக் காதல் வேட்கையோடு தம் கூந்தலிலே சூடிக்கொள்வர். சேக்கையிலே காதலில் மூழ்கித் திளைக்கும் அந்நகர மாந்தர் இரவும் பகலும் அறியா ராயினர். இதனால் அந்நகர் இரவும் பகலும் இல்லாத பொன்னுலகத்தை ஒத்திருந்தது.

இமையவர் கண் இமைப்ப தில்லை. அதற்குக் காரணம் திருத்தக்க தேவர் கற்பிக்கின்றார். இராசமாபுரத்துப் போகத்தையும், செல்வத்தையும், வீரத்தையும் விடாமற் காண்பதற்கு அவர்கள் இமைக்காமல் விழித்திருப்பதுபோல் உள்ளது என்கிறார்.

''முல்லை யங்குழ
லார்முலைச் செல்வமும்
மல்லன் மாநகர்ச்
செல்வமும் வார்கழல்
செல்வர் செல்வமுங்
காணிய என்பர்போல்
எல்லி யும்மிமை
யாரிமை யாததே''
(சிங். 137)

இத்துணைப் பெருமை வாய்ந்த இராசமாபுரத்தை ஆசிரியர் முடிவில் கற்பகச் சோலைக்கு ஒப்பிட்டுச் சிறப்பிக்கின்றார். கற்பகச் சோலை வேண்டுவோர்க்கெல்லாம் மாலை முதலியவற்றை அளிக்க வல்லது. அதைப் போலவே இராசமாபுரம் தேன் நிறைந்த மலர்மாலை, பைந்துகில், செம்பொன், வயிரமாலை, முத்துமாலை முதலியவை நிரம்பப் பெற்று அவற்றால் அனைவரும் பயனடையச் செய்து கற்பகச் சோலை போல விளங்கிற்று. மேலும் அந்நகரத்தில் வாழ்வார் அனைவரும் அருள் நிரம்பியவர். அவர்தம் பேரருளைக் காணும் பிறரும் அருள்சுரக்கப் பெற்றுச் சுவர்க்கம் எய்துவராவர்.

''தேன்தலைத் துவலை மாலை
பைந்துகில் செம்பொன் பூத்து
ஞான்றன வயிர மாலை
நகுகதிர் முத்த மாலை
கான்றமிர் தேந்தி நின்ற
கற்பகச் சோலை யார்க்கும்
ஈன்றருள் சுரந்த செல்வத்(து)
இராசமா புரம தாமே''

இதுவரை கூறியவற்றால் இராசமாபுரத்தின் அமைப்பையும் சிறப்பையும் நன்கு உணரலாகும். காவினால் சூழப்பெற்ற அந்நகரத்தின் முழுத் தோற்றமும், பிறகு புறநகர், இடைநகர் ஆகியவற்றின் சிறப்புக்களும், அகழியின் தன்மையும், மதிலின் பெருமையும், அதன்கண் அமைக்கப்பட்ட போர்க் கருவிகளின் பேராற்றலும், உள்நகர் வீதிகளின் தன்மையும், மனைகளின் செல்வமும் பொலிவும், மாந்தரின் இன்பமும் ஆகிய இன்னோரன்னவற்றைத் திருத்தக்க தேவர் சுவைநலம் நிரம்ப விளக்கியுள்ளார். இதன் வாயிலாக ஒரு நகர் எங்ஙனம் அமைந்து இயங்கவேண்டும் என்பதை அவர் உணர்த்துகின்றார் என்று கொள்ளலாம்.

---

''பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும்பேர் இன்பம்
பற்றின் வருவது முன்னது, பின்னது
அற்றோர் உறுவது அறிக''

— மணிமேகலை, 2–14:17.

---

# புத்தரும் பௌத்தமும்

— காந்தியடிகள் —

பௌத்த, இந்து சமயாசாரிகளைப் போல, நான் இந்து மதத்திற்கும், பௌத்த மதத்திற்கும் அடிப்படைப் போதனைகளில் எவ்வித வேறுபாட்டையும் காண்பதில்லை. புத்தர் வாழ்ந்த பயங்கர காலத்தில் அவர் ஒரு சீர்திருத்த வாதியாய்த் திகழ்ந்தார் என்பதில் சந்தேகமில்லை. எதற்கும் துன்பம் இழைக்காது தனது சீர்திருத்தத்தை நிலைநாட்டுவதே, நமது ஆத்ம, சரீரவளர்ச்சிக்கு இன்றியமையாதது என்பதை உணர்ந்து கடைப்பிடித்தார். சரித்திரம் தரும் ஆதாரங்களினபடி அன்று வாழ்ந்த மூடப் பிராமணர்கள், புத்தரின் சீர்திருத்தக் கொள்கை சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டதெனக் கூறி, அதனை ஏற்க மறுத்தனர். ஆனால் மக்கள் தங்கள் நேரத்தைத் தத்துவார்த்தங்கள் பேசுவதில் போக்கவில்லை. அவர்கள் தத்துவார்த்தங்களைச் செயலில் காட்டுபவர்கள்; அறிவு படைத்தவர்கள். அதனால், பௌத்தம் சுயநலத்தைக் குறிக்கோளாகக் கொண்டது என்ற பொய்ப்பிரசாரத்தை ஒதுக்கி விலக்கினர். அவர்களின் கொள்கையை வெளிக்கொணர்ந்தவர் புத்தர்தான் என்பதை மக்கள் அங்கீகரிக்கத் தயங்கவில்லை. நானும் சாதாரண மக்களில் ஒருவனாக இருப்பதால், மக்கள் பின்பற்றவும், அனுஷ்டிக்கவும் தக்கவகையில் மாற்றியமைக்கப்பட்ட இந்து மதமே பௌத்த மதம், என்று எண்ணுகிறேன். இதன் காரணமாக கற்றறிந்தோர் சில சமயங்களில் பௌத்தம் கூறும் மிக இலகுவான போதனைகளை நம்புவதில்லை. அவர்கள தங்கள் மேதா விலாசத்தைத் திருப்திப்படுத்தும் நோக்கத்துடன் மதத்தை அணுகுவதனால் ஏமாற்றந்தான் ஏற்படுகிறது. மதம் பெரிதும் உளம் சம்பந்தமானது. எனவே மதத்தை மேதா விலாச கர்வத்துடன் நோக்குபவர்களுக்கு ஏமாற்றம் ஏற்படுவது இயல்பே.

புத்தர் ஒரு நாஸ்திகரல்லர் என்று நான் துணிவாகக் கூறுவேன். அகந்தையுடன் செல்லும் எந்த மனிதனையோ, பக்தனையோ கடவுள் எற்றுக்கொள்வ தில்லை. விழுந்து வணங்கி, மூக்கைப் பூமியில் அழுத்துபவர்களிடம் எல்லாம் ஆண்டவன் நம்பிக்கை வைப்பதில்லை. கடவுளுக்கு வெறும் அடையாளங்கள் வேண்டியதில்லை. அவர் ஒவ்வொருவரின் உள்ளத்தையும் உற்று நோக்குகிறார். மற்றவனுக்கு இரக்கப்படாத ஒருவன் தனது மூக்கை வெட்டிக்கூட நிலத்தில் அழுத்திக் கொள்ளலாம். ஆனால் அவனின் இதயத்தில் இரத்தம் சுயேச்சையாக ஓடிக்கொண்டிருக்காதவரை ஆண்டவன் அவனை அங்கீகரிப்பதில்லை. அகங்காரம் என்ன என்று அறியாத பாமர மக்கள், மிக்க தாழ்மையுடன் ஆண்டவனை அணுகுவதனால் நடைமுறையில் உன்னத தத்துவ ஞானிகளாக இருக்கிறார்கள். அதனால் நாமும் அவர்களைச் சுதந்திரமாகப் பின்பற்றலாம். இவ்வாறுதான் நான் பௌத்தத்தின் முக்கியப் போதனைகளைப் பற்றி அபிப்பிராயப்படுகிறேன். பௌத்தம் பெரிதும் பாமரர்களுக்கான மதம். இதையிட்டு அணுவேனும் எனக்குச் சந்தேகமில்லை. ஒரு கணமேனும் நான பௌத்தம் இந்தியாவில் இருந்தும் மறைந்துவிட்டதென்று எண்ணுவதில்லை. பௌத்தத்தைப் பெயரளவில் பின்பற்றும் நாடுகளான சீனா, யப்பான், இலங்கை போன்ற நாடுகளிலும் பார்க்க, இந்தியா பௌத்த போதனைகளைப் பெரிதும் அனுஷ்டானத்தின் மூலம் காட்டுகிறது. பர்மிய நண்பர்களிலும் பார்க்க, இந்தியாவி லுள்ள நாங்கள் பௌத்த போதனைகளை எமது நடத்தையின் மூலம் அதிகம் பின்பற்றுகிறோம். புத்தரை மறைத்து ஒதுக்குவது முடியாத காரியம்.

'ஜயந்தி' இதழிலிருந்து எடுக்கப்பட்டது.

# கலாவல்லி

(தமிழ் மாதம் இருமுறைப் பத்திரிகை)
தபால் பெட்டி நெ. 1353
*12/13, அங்கப்ப நாய்க்கன் தெரு,*
*சென்னை—1.*




## 15–5–56 மலர்

*80 பக்கங்கள்* *விலை அணு 4*

*சிறந்த எழுத்தாளர்களின் சிறுகதைகள்,*

*உள்ளத்தைத் தொடும் உயர் தொடர்கதைகள்,*

*கருத்தைக் கிளறும் கட்டுரைகள்,*

*ஆராய்ச்சி மிகுந்த அரசியல் கார்ட்டூன்கள்,*

*கன்னித் தமிழில் கவிதைத் தொகுதிகள்,*

*சிறுவருக்கு ஏற்ற சீரிய கதைகள்*

*விடாமல் நகைக்க வைக்கும் விகடத்துணுக்குகள்,*

*நேர்மையான சினிமாவிமர்சனம்,*

*அழகு மிகுந்த அட்டைப் படம்,*

*தன்னிகரிலாத் தலையங்கங் களுடன்*

*ஒருங்கே தரும் உயர்ந்த குடும்ப மாதம் இருமுறைத் தமிழ்ப் பத்திரிகை*

**கலாவல்லி**

# கலாவல்லி

## சந்தா விவரம்

வருட சந்தா ... ... ... ரூ. 6
6 மாத சந்தா ... ... ரூ. 3

வி. பி. கிடையாது.

*6 மாதத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.*

விவரங்களுக்கு :

**சர்குலேஷன் மானேஜர்,**

*''கலாவல்லி''*

தபால் பெட்டி நெ. 1353,
*12/13 அங்கப்ப நாய்க்கன் தெரு,*
*சென்னை—1.*

*கலாவல்லி 15–5–56 மலரில் மொத்தம் ஆறு கதைகள், மூன்று கட்டுரைகள், ஒரு நாடகம், ஒரு தொடர்கதை, ஒரு பாப்பாக் கதை மற்றும் வழக்கமான அம்சங்கள் எல்லாம் வெளிவருகின்றன.*

*பி. எஸ். ராமையா எழுதும் புதிய தொடர்கதை 1–6–56 மலரில் ஆரம்பமாகிறது. அதைப்பற்றிய விசேஷ அறிக்கை ஒன்றும் இந்த மலரில் வெளியாகிறது. 'சபலா' என்பது ஒரு சாதாரணப் பெண்ணின் பெயரல்ல. வலிமை பெற்ற நெஞ்சம் படைத்த ஒரு பெண்ணின் பெயராக அது விளங்கப் போகிறது. இதைப்பற்றி பீ.எஸ். ராமையா என்ன சொல்லுகிறார் என்று தெரிந்துகொள்ள வேண்டுமானால் இந்த மலரை நீங்கள் கட்டாயம் வாங்கிப் பார்க்க வேண்டும்.*

*விந்தன் எழுதிய சின்னஞ் சிறு கதை வெறும் கதையல்ல; ஒரு கருத்தோவியம்.*

*தி. ஜ. ர. வின் ஹிந்திக் கட்டுரையில் மலருக்கு மலர் புதுமைக் கருத்துக்கள் மலருகின்றன.*

*பூஜ்யர் வினோபாஜி தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்யும் நல்வேளையிலே அவரது பூமிதான இயக்கத்தைப் பற்றிய கட்டுரை ஒன்று வெளியாக வேண்டியது அவசியந்தானே ? க. சோமசுந்தரம் 'அடிகள் காட்டும் வழி'யை எப்படிச் சித்திரித்திருக்கிறார் என்பதைப் பாருங்கள்.*

*இந்த மலரில் இன்னும் சில புதுமைகள் இருக்கின்றன. வாங்கிப் பார்த்துத் தெரிந்துகொள்ளுங்கள்.*



இந்திய அரசாங்

# புத்தகயை யிலுள்ள திருக்கோயில்

[புத்தர் ஞானத் தெளிவு பெற்ற போதி மரத்தின் பக்கத்தில் இந்த ஆலய
அசோகரால் கட்டப்பட்டது.]




இந்திய அரசாங்கம்

அஜந்தாக் குகையில்



இந்திய அரசாங்கம்

கனேரிக் குகையில்



கனேரிக் குகையில்

# ஆசியாவில் பௌத்த மதம்

திரு. க. இராமதாஸ், எம். ஏ.

இன்றைய உலகில் மற்றெந்த மதத்தினரையும்விடப் பௌத்த மதத்தைப் பின்பற்றுவோரின் எண்ணிக்கையே மிகவும் அதிகமாக இருக்கிறது. கி. மு. ஆறாம் நூற்றாண்டில் தோன்றிய இம்மதம் தொன்மை வாய்ந்தது. தோன்றிய நாள் முதல் இன்றுவரை கடந்த 2500 ஆண்டுகளாகப் பல கோடி மக்களின் ஆன்மிகத் தேவைகளை நிறைவேற்றிய பெருமையும் இம் மதத்திற்கு உண்டு. இந்தியாவில் தோன்றிய இம்மதம் பல்வேறு நூற்றாண்டுகளில் பல்வேறு ஆசிய நாடுகளுக்குப் பரவியது. இன்று இங்கிலாந்து, ஐரோப்பா, அமெரிக்கா போன்ற மேலை நாடுகளில் கூட இம்மதத்தைப் பலர் விரும்பிப் பின்பற்றுகின்றனர்.

பௌத்த மதம் அரசகுடியில் தோன்றிய கௌதமன் அல்லது சித்தார்த்தர் என்பவரால் ஏற்படுத்தப்பட்டது. கௌதமர் தம்முடைய தத்துவங்களைச் சீடர்களுக்குக் கற்பித்ததோடு நின்றுவிடாமல் அவர்களைப் பிற நாடுகளுக்கும் அனுப்பி, ஏனைய மக்களும் தம் தத்துவங்களை உணர்ந்து உய்யுமாறு வழி வகுத்தார். தத்துவ உண்மைகள் பிராமணர்களின் ஏகபோக உரிமையாக இருந்த காலம் அது. இந்த ஏகபோக உரிமையைத் தகர்த்து, சாதி பேதம் பாராமல் மனிதகுலம் அனைத்திற்கும் பொருந்துமாறு ஒரு தத்துவத்தைத் தருவதே அவருடைய நோக்கம். ஆகவே முதலிலிருந்தே பௌத்த சமயம் உலக மதமாக விளங்கியது.

உலக வரலாற்றில் மதங்களின் அடிப்படையில் எழுந்த பல போர்களைப் பார்க்கிறோம். பிற நாடுகளின் சுதந்திரத்தைப் பறித்து, மக்களின் அடிப்படை உரிமைகளை நசுக்கிவிட்டு, கத்தி முனையிலும் இரத்தப் பெருக்கிலும் தங்கள் மதங்களைப் பரப்பிய பல மத வெறியர்களைப் பார்க்கிறோம். ஆனால் பௌத்த பிக்குகள் தங்கள் மதத்தைப் பரப்புவதற்கு வாளின் வலிமையை நாடவில்லை. அன்பின் துணை கொண்டு, அஹிம்சா முறையில் புத்தரின் நல்லுபதேசங்களைப் பிறர்க்கு எடுத்துரைத்தார்கள். பிறர்க்கு உபதேசிக்கு முன்னர்த் தாங்கள் அவ்வழி நடந்து காண்பித்தார்கள். ஆதலின் பௌத்த சமயம் இந்தியாவிலும் ஏனைய நாடுகளிலும் விரைவாகப் பரவியது.

புத்தரின் மறைவுக்குப் பிறகு பௌத்த பிக்குகளிடையே கருத்து வேற்றுமைகள் தோன்ற ஆரம்பித்தன. புத்தரின் தத்துவங்களுக்குப் புதுப்புது விளக்கங்கள் தரப்பட்டன. ஆகவே புத்தரின் கொள்கைகளைப் பற்றி முடிவு செய்து ஒரு ஒருமைப்பாடமைந்த உடன்பாட்டிற்கு வருவதற்காக இராஜகிருகம் என்னுமிடத்தில் பௌத்த மகாநாடு ஒன்று கூட்டப்பட்டது.

இம் மகாநாடு கூடிய நூருண்டுகளுக்குப் பின்னர் வைசாலி என்னுமிடத்தில் இரண்டாவது மகாநாடு கூட்டப்பட்டது. இம் மகாநாட்டில் கலந்துகொண்ட பௌத்த பிக்குகளில் ஒரு பகுதியினர் தாங்கள் கடைப்பிடிக்கும் ஒழுக்க முறைகள் கடுமையாக இருக்கின்றதென்றும் அவைகள் தளர்த்தப்பட வேணடுமென்றும் கோரிஞர்கள். இம் முற்போக்குப் பகுதியினரின் கோரிக்கைகளை மகாநாடு ஏற்காததால் அவர்கள் பிரிந்து சென்று மகா சங்கிகர்கள் என்ற ஒரு சங்கத்தை ஏற்படுத்திஞர்கள்.

இதற்குப் பிறகு சுமார் நூருண்டுகள் வரை பௌத்த மதத்தைப் பற்றிய குறிப்புகள் நமக்குக் கிடைக்கவில்லை. கி. மு. 270-ல் அசோகர் ஆட்சிக்கு வந்த பிறகு பௌத்த மதத்தைப் பற்றிய குறிப்புகள் ஏராளமாகக் கிடைக்கின்றன. வடகிழக்கு இந்தியாவில் நிலவிய பௌத்த சமயம் அசோகரது தீவிர முயற்சியால் உலக மதமாக மாறியது. புத்தரின் நினைவாக நினைவுச் சின்னங்கள் ஏற்படுத்தப்பட்டன. இந்தியா வெங்கும் பௌத்தக் கலைகள் வெள்ளம்போல் பரவின. இக்கலைப் பெருக்கால் இந்திய மக்கள் ஒன்றுபட்டனர். பௌத்த சமயம் இந்தியாவின் அரசாங்க மதமாக மாறிச் செழித்தோங்கியது.

அசோகரது ஆட்சியில் மூன்ருவது பௌத்த மகாநாடு பாடலிபுத்திரத்தில் கூட்டப்பட்டது. பௌத்த பிக்குகளிடையே பரவியிருந்த பிளவுகளை முறியடிக்கவும், முறைகேடான வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள பிக்குகளைத் தண்டித்து அவர்களை நேர் வழிப்படுத்தவும், பௌத்த மதக் கோட்பாடுகளையும் தத்துவங்களையும் முறைப்படுத்தி ஒருங்கு சேர்க்கவும் இம் மகாநாடு கூட்டப்பட்டது.

காலப் போக்கில் பிராமணீய தத்துவங்களும் வழிபாடுகளும் பௌத்த சமயத்தில் இடம் பெற்றன. இதன் விளைவாகப் பௌத்த சமயம் ஹீனயானம், மகாயானம் என இரு பிரிவுகளாகப் பிரிந்தது. அசோகர் மறைந்த ஒரு நூற்ருண்டிற்குள் மனிதராக இருந்த புத்தரை மகாயான தத்துவ ஞானிகள் கடவுளாகச் செய்து விட்டனர். கல்லிலும் உலோகங்களிலும் பௌத்த விககிரஹங்கள் செய்யப்பட்டு உருவ வழிபாடு தொடங்கியது. மந்திரங்கள் ஓதிப் பௌத்த விக்கிரஹங்களை ஊர் வலமாக எடுத்துப் பக்தி வழிபாடு செய்தனர். இந்த மாறுதல்கள் கௌதம புத்தரின் தத்துவங்களுக்கு நேர்மாருக இருந்த போதிலும், அவை பாமர மக்களால் விரும்பி வரவேற்கப்பட்டன. மூடப் பழக்கங்களுக்கும் மூடக் கொள்கைகளுக்கும் அடிமையாகும் பாமர மக்களைப் பக்தி மார்க்கம் அளிக்கும் பௌத்த சுவர்க்கம் எளிதாகக் கவர்ந்து விட்டது. ஒழுக்கத்தின் அடிப்படையில் எழுந்த ஹீனயானம் அறிவின் வழிப்பட்டது. ஆஞல் மகாயானம் உணர்சசி வழிப்பட்டது. வெவ்வேறு சூழ்நிலைகளும் பழக்க வழக்கங்களும் உள்ள பிறநாடுகளில் பௌத்த சமயம் பரவியதும் அவ்வச் சூழ்நிலைகளுக்கேற்ப இவ்வேறுபாடுகளும் வளர்ந்தன.

கி. மு. இரண்டாவது நூற்ருண்டில் வடமேற்கு இந்தியா கிரேக்க - பாக்டீரியர்களின் ஆளுகைக்கு உட்பட்டது. அப்போது மிஞண்டர் என்னும் அரசர் பௌத்த மதத்தைத் தழுவி மகாயான தத்துவங்களின் வளர்ச்சிகுத் துணை செய்தார். இந்தத் தத்துவங்கள் கனிஷ்கரது ஆட்சியில் மேலும் வளர்ந்தன. கனிஷ்கரது ஆட்சியில் நான்காவது பௌத்த மகாநாடு காஷ்மீரில் கூடி மகாயான தத்துவங்களைச் சமஸ்கிருதத்தில் எழுதிஞர்கள்.

தக்ஷசீலத்தில் இருந்த பல்கலைக் கழகமும், நளாந்தா பல்கலைக் கழகமும் பௌத்த மதத்தைப் போதித்தன. நளாந்தா பல்கலைக் கழகத்தில்மட்டும் சுமார் 10000 மாணவர்களும் 1500 ஆசிரி

யர்களும் இருந்தார்கள். பௌத்த மதத்தைக் கற்றுத் தெளிய ஜப்பான், கொரியா, சீனு, மங்கோலியா முதலிய வெளி நாடுகளிலிருந் தெல்லாம் மாணவர்கள் விரும்பி வந்தார்கள். கி. பி. ஏழாம் நூற்ருண்டில் சீனுவிலிருந்து வந்த ஹியூவன் சாங், இட்சிங் போன்ற தத்துவ அறிஞர்கள்கூட இப்பல்கலைக் கழகத்தில் சில ஆண்டுகள் கற்ருர்கள் என்ருல் இப்பல்கலைக் கழகத்தின் பெருமையும் பௌத்த மதத்தின் சிறப்பும் நன்கு விளங்கும். இப் பல்கலைக் கழகம் கி. பி. இரண்டாம் நூற்ருண்டு முதல் கி. பி ஒன்பதாம் நூற்ருண்டு வரை சமயத் துறையிலும் ஏனைய கலைத்துறைகளிலும் சிறந்த தொண்டினை ஆற்றி இருக்கிறது. இப்பல்கலைக் கழகத்திலே ஒரு அரிய நூல் நிலையமும் இருந்தது.

இந்தியாவில் பௌத்த சமயம் கி பி. ஏழாம் நூற்ருண்டி லிருந்து நாளடைவில் மறையத் தொடங்கியது. ஹூணர்கள் இந்தியாமீது படையெடுத்துப் பௌத்தக் கோவில்களையும் மடங்களையும் கொள்ளையடித்து அவற்றினை அழித்தார்கள். பின்னர் ஹர்ஷரது ஆட்சியில் பௌத்த மதத்திற்கு அரசாங்க ஆதரவு கிடைத்தது. இருப்பினும் ஹர்ஷரால்கூட; பௌத்த மதத்தை அதன் அழிவுப் பாதையினின்றும் மீட்க முடியவில்லை. கி.பி. பதினென்ரும் நூற்ருண்டில் அலை அலையாக வந்த இஸ்லாமியப்படையெடுப்பினுல் மீதமிருந்த பௌத்தமதக் கோவில்களும் மடங்களும் ஏனைய நினைவுச் சின்னங்களும் அழிந்து பட்டன. பௌத்த மதத்தின் சிறபபுக்கு அதன் வலிமை மிகுந்த சங்கங்கள் பெரும் ஆதாரமாக இருந்தன ஆனுல் பிற்காலத்தில் இச் சங்கங்கள் பாழ் பட்டதால் பௌத்த மதமும் அழியத் தொடங்கியது. பௌத்த பிக்குகள் நெறி தவறிய வாழ்க்கையில் ஈடுபட்டு மக்களின் நன் மதிப்பை இழந்தனர். அதனுல் பௌத்த சங்கங்களுக்குக் கிடைத்துவந்த நன்கொடைகள் போன்ற வருமானங்கள் குறைந்து பொருளாதார நெருக்கடி பொன்னையும் பொருளையும் விரும்பாத பிக்குகளுக்கே வந்துவிட்டது. தாங்கள் செய்த தவறுகளுக்குத் தானமும் யாகமும் செய்து தப்பித்துக்கொள்ள நினைக்கும் மனப்பான்மை பாமர மக்களுக்கு உண்டு. ஆனுல் பௌத்த சமயம் இத்தகைய யாகச் சடங்குகளுக்கு இடமளிக்காததால் பாமர மக்கள் பௌதத மதத்தினின்றும் விலகி இந்து மதத்தைப் பின்பற்றத் தொடங்கினுர்கள். முடிவில் பௌத்த சமயம் நாடு கடத்தப்பட்ட மதமாக இன்று வெளிநாடுகளில் நிலவுகிறதே ஒழியப் பிறந்த மண்ணில் அது நசித்துவிட்டது. இந்தியாவில் இப்போது சுமார் 30 லட்சம் பௌத்தர்கள் இருக்கிருர்கள். இந்தியாவின் மொத்த ஜனத்தொகையில் இவர்களுடைய எண்ணிக்கை ஒரு சதவீதத்திற்கும் குறைவானதே.

விடுதலையடைந்த இந்தியாவில் எல்லாத் துறைகளிலும் ஒரு புதிய விழிப்பையும் உற்சாகத்தையும் காண்கிருேம். இந்த மாறுதல்கள் பௌத்த சமயத்திலும் ஒரு மறு மலர்ச்சியை ஏற்படுத்தி இருக்கின்றன. இந்தியாவில் 1891-ம் ஆணடு ஏற்படுத்தப்பட்ட மகாபோதி சங்கத்தினரின் தீவிர முயற்சியால் பௌத்த மதம் புத்துயிர் பெற்று விளங்குகிறது. இச் சங்கத்தினர் பௌத்த மதத்தைப பற்றிப் பிரசாரம் செய்வதுடன், புத்த கயை போன்ற பௌத்தர்களின் புண்ணிய தலங்களுக்கு வரும் பிரயாணிகளுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்து அவர்களின் நலன்களைப் பாதுகாக்கின்றது. இவையன்றிப் பௌத்த மதத்தைப் போதிபபதற்குப் பள்ளிகளையும் நூல் நிலையங்களையும் ஏற்படுத்தி இந்துக்கள் போன்ற மற்ற மதத்தினரின் நன்மதிப்பைக்கூடப் பெற்று வருகின்றனர். நம் அரசாங்கமும் பௌத்த மதத்தின் புனர் வாழ்விற்குத் தன்னுலான உதவிகளைச் செய்து வருகிறது. அண்மையில புத்த கயைவில் உள்ள பௌத்த கோவிலின் திருப்பணிக்

காக அரசாங்கத்தினர் இரண்டு லட்சம் ரூபாய் கடனளித்திருக்கிறார்கள். மேலும் புத்தரின் 2500-ம் ஆண்டின் நினைவு விழாவைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் பலவற்றை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது. இந்த விழாவில் கலந்துகொள்வதற்காக உலகத்தின் பல பகுதிகளிலிருந்தும் பௌத்த பிக்குகளும் பிறரும் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இம் முயற்சிகளின் விளைவாகப் பௌத்த மதத்திற்கு ஒரு நல்ல எதிர்காலம் இந்தியாவில் உண்டு என்பதைத் திண்ணமாகக் கூறலாம்.

## இலங்கை:

கி. மு. ஐந்தாம் நூற்றண்டில் கங்கைச் சமவெளியில் வாழ்ந்து வந்த இந்துக்கள் இலங்கை சென்று குடியேறினார்கள். இதற்கு இருநூறு ஆண்டுகளுக்குப் பின் அசோகர் தம் மகன் மகேந்திரனையும், மகள் சங்கமித்திரையையும் மற்றும் பல பௌத்த பிக்குகளையும் அனுப்பி இலங்கை வாழ் இந்துக்களிடையே பௌத்த மதம் பரவச் செய்தார். சங்கமித்திரை போதி மரத்தின் கிளையொன்றை இந்தியாவிலிருந்து எடுத்துச்சென்று, அப்போது இலங்கையின் தலைநகராக இருந்த அனுராதபுரத்தில் நட்டு வைத்தார். அம்மரம் சுமார் 2200 ஆண்டுகளாக இன்னும் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அப்போது இலங்கையை டிஸ்ஸா என்ற அரசர் ஆண்டு வந்தார். மகேந்திரனது முயற்சியால் அரசர் டிஸ்ஸாவும் அவரது சபையினரும் பௌத்த மதத்தைத் தழுவினர். அரச குடும்பத்தில் தோன்றிய பௌத்த பிக்குகளான மகேந்திரனையும் சங்கமித்திரையையும் கௌரவிக்கும் முறையில் அரசர் டிஸ்ஸா அனுராதபுரத்திற்கருகில் ஒரு மடத்தைக் கட்டுவித்தார். மேலும் கௌதம புத்தரின் புனிதத் தோள் எலும்புகளைப் பாதுகாத்துப் போற்றி வழிபடுவதற்காகத் தூபராம தகோபா என்ற பௌத்தக் கோவிலையும் அனுராதபுரத்தில் கட்டினார். கி.பி. முதலாம் நூற்றுண்டில் நினைவு வழி வந்த பௌத்த தர்மம் முதன் முதலாகச் சிங்கள மொழியில் எழுதப்பட்டது. இம் முதல் நூலைச் சிங்களவர்கள் பெரிதும் போற்றிப் பாராட்டுகிறார்கள். கி.பி. மூன்றும் நூற்றுண்டில் கௌதம புத்தரின் புனிதப் பல்லைப் பெற்று இலங்கை மேலும் பெருமையுற்றது. இப் புனிதப்பல் கண்டியில் உள்ள பௌத்த கோவிலில் இன்றும் இருப்பதாகக் கூறப்படுகிறது. இக்கோவில் ஆசியாவில் வாழும் 15கோடி பௌத்தர்களுக்குப் புனித 'மெக்கா' வாக இன்னும் திகழ்கிறது.

கி.பி. பதினொன்றும் நூற்றுண்டில் தஞ்சாவூரில் அரசோச்சிய சோழ மன்னர்கள் இலங்கை மீது படையெடுத்து வெற்றி கண்டார்கள். இப் படையெடுப்புகளின் விளைவாக இலங்கையில் பௌத்த மதம் சிறிது வீழ்ச்சி யுற்றது. பௌத்த சங்கங்கள் பாழடைந்து பௌத்த பிக்குகளின் எண்ணிக்கையும் குறைந்து போயிற்று. இக்குறையைப் போக்க பர்மாவிலிருந்து பௌத்த பிக்குகள் இலங்கைக்கு வந்தார்களென அறிகிறோம். கி. பி. பன்னிரண்டாம் நூற்றுண்டுக்குப் பின் பௌத்த மதம் மறுபடியும் புத்துயிர் பெற்று வளர்ந்தது.

இன்றைய இலங்கையில் இந்துக்களும் கிறிஸ்தவர்களும் இருந்த போதிலும் பெரும் பகுதி மக்கள் பௌத்த மதத்தினராவர். அயல் ஆட்சியினின்றும் விடுதலை பெற்ற அவர்களது அரசாங்கம் பௌத்த மத நினைவுச் சின்னங்களைப் புதுப்பிக்கவும் நிறையத் திட்டங்கள் வகுத்திருக்கிறது. இலங்கையில் உள்ள பௌத்த சங்கமும் செழிப்பு மிக்கதாய்ச் சீரிய முறையில் செயலாற்றி வருகிறது. இலங்கையி லன்றி ஏனைய நாடுகளிலும் பௌத்த மதத்தைப் பரப்புவதற்குப் பண உதவி அளிப்பதுடன் பிக்குகளையும் அனுப்பிப் பிரசாரத்தில் ஈடுபடச் செய்கிறது. இலங்கைவாழ் பௌத்த பிக்கு

கள் சுத்த பிடகம் (Sutta Pitaka) எனப் படும் புத்தரின் போதனைகளைச் சிறக்கக் கற்றுத் தெளிந்த உள்ளமுடையவர்கள். இவற்றையெல்லாம் பார்க்கும் போது இனி வருங்காலத்தில் பௌத்த உலகிற்கே வழி காட்டியாய் இலங்கை விளங்கு மென்றால் அது மிகையன்று.

## பர்மா:

சுவர்ண பூமி என்று அழைக்கப்பட்ட பர்மாவில் அசோகரது காலத்தில் பௌத்த மதம் பரவியது. கி பி. 1000 ஆண்டுகள் வரை பர்மியர்கள் ஹீனயான பௌத்த மதத்தையும் மஹாயான பௌத்த மதத்தையும், நாட் (Nat) எனப்படும் துஷ்ட தேவதைகளை வழிபடுதலையும் மேற்கொண்டார்கள். கி.பி. 1044 முதல் கி.பி. 1077 வரை பர்மாவை அரசாண்ட அனவ்ரஹ்தா என்ற பர்மிய அரசர், தெரவாடா எனப் படும் ஒரு வகை ஹீனயான பௌத்த மதத்தைத் தழுவினர். அது முதல் பௌத்த மதம் பர்மாவின் அரசாங்க மதமாக மாறியது. அனவ்ரஹ்தா தன் தலைநகரான பேகனில் பகோடா என்று அழைக்கப்படும் பௌத்த கோவில்களைப் பல்லாயிரக்கணக்கில் கட்டுவித்தான். இதற்குச் சுமார் நூற்றாண்டுகளுக்குப் பிறகு ஷுவே டகன் (Shwe Dagon) என்ற அழகிய பௌத்த கோவில் ரங்கூனில் எழுந்தது. இக்கோவிலின் மையக் கோபுரத்திற்குப் பொன் தகடு போர்த்தி இருப்பதால் இக் கோவிலைப் பொற்கோவில் என்றும் அழைப்பர். இக் கோவிலில் புத்தரின் புனிதத் தலைமயிர் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஷுவே டகன் பகோடா, பௌத்த உலகின் புனித யாத்திரைத் தலமாக இன்றும் விளங்குகிறது. கி. பி. 13-ம் நூற்றாண்டில் மங்கோலிய மன்னன் குப்லிகானின் படையெடுப்பால் பர்மிய தலைநகரமான பேகன் சிதைவுற்று அழிந்தது. இதற்குப் பின் 16-ம் நூற்றாண்டில்தான் பர்மா ஒரு பௌத்த நாடாக ஒன்றுபட்டது. பின்னர் ஆங்கிலேயரின் ஆட்சிக்குப் பர்மா அடிமையான போதிலும், இவ்வாட்சி மாறுதலால் பௌத்த மதம் எவ்வகையிலும் பாதிக்கப்படவில்லை.

பர்மாவில் இன்று வழக்கி லிருக்கும் பௌத்த மதம் ஏனைய நாடுகளி லிருக்கும் பௌத்த மதத்தைவிடத் தூய்மையானது. பர்மிய பௌத்த பிக்குகள் புத்தரின் இலட்சிய வாழ்வை மேற்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அபிதம்மா (Abhidhamma) எனப்படும் தியான முறைகளில் வல்லவர்களாய்த் திகழ்கிறார்கள். பர்மிய மக்களும் தங்கள் நாட்டைப் பொதுவுடமை அபாயத்தினின்றும் காத்துப் புனர் நிர்மாண வேலைகளில் ஈடுபடுததுவதற்குப் பௌத்த வாழ்க்கை நெறிகளை மேற்கொள்வதே சாலச் சிறந்ததெனக் கருதுகிறார்கள்.

## சயாம்:

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சயாமியர்கள் மகாயான பௌத்த மதத்தைப் பின் பற்றினார்கள். பிற்காலத்தில் தெரவாடா என்னும் ஹீனயான பௌத்த மதத்தைத் தழுவினார்கள். சயாமியர்கள் சீனாவிலிருந்து சயாமில் குடியேறுவதற்கு முன்பே பௌத்த மதத்தைப் பின் பற்றி இருக்க வேண்டுமென்று நம்பப்படுகிறது. கி.பி. பதினான்காம் நூற்றாண்டில் சயாமை ஆண்ட மன்னனின் விருப்பத்திற்கிணங்க இலங்கை அரசாங்கம் ஒரு பௌத்த பிக்குவை அனுப்பியது. இப் பௌத்த பிக்கு சயாமில் உள்ள பௌத்த சங்கத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார். சயாம் மன்னரும் அசோகரைப் பின்பற்றிப் பௌத்த மதத்தைத் தழுவினர். அன்றிலிருந்து இன்றுவரை சயாமில் அரச குடும்பத்தினருக்கும் பௌத்த சங்கத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருந்துவருகிறது. இலங்கை, பர்மா, சயாம் ஆகிய மூன்று நாடுகளும் தெரவாடா எனப்படும் ஹீனயான பௌத்த மதத்தைப் பின் பற்றுகின்றன. இலங்கையிலும் சயாமிலும் உள்ள

பௌத்த பிக்குகள் மஞ்சள்நிறக் காவியுடை அணிகிறார்கள். ஆனால் பர்மாவில் உள்ள பௌத்த பிக்குகள் ஆரஞ்சு வண்ணக் காவியுடை அணிகிறார்கள். சயாமின் தலைநகரமான பாங்காக்கில் கலைத்திறன் மிக்கதொரு பௌத்த கோவில் காண்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வகையில் அமைந்துள்ளது.

அரசாங்க ஆதரவு பெற்ற சயாமிய பௌத்த சங்கம் வலிவுடையதாய் விளங்குகிறது. இப்பௌத்த பிக்குகள் நவீன கருத்துக்களைத் தெரிந்து கொள்ளும் பொருட்டு ஆங்கிலம் கற்கிறார்கள். பிற மொழிகளில் உள்ள பௌத்த நூல்களைச் சயாமிய மொழியிலும், சயாமிய மொழியில் உள்ள நூல்களைப் பிற மொழிகளிலும் மொழிபெயர்ப்பதில் இப்பௌத்த பிக்குகள் பெரிதும் ஈடுபட்டிருக்கிறார்கள். மேலும் சங்கத்தின் தலைமைப் பிக்குகள் சயாம் வானொலியில் வாரந்தோறும் உரை நிகழ்த்துகிறார்கள். இம் முயற்சிகளின் பலனாய்ச் சயாமில் பௌத்த மதம் செழிப்புற்று விளங்குகிறது.

## கம்போடியா:

கம்போடியாவின் பெரும் பகுதி மக்கள் சீனர்கள்; ஏனையோர் கம்பூஜர்கள் அல்லது கீமர்கள் எனப்படுவார்கள். மக்கள், சீனர்களாய் இருந்தபோதிலும் அவர்களுடைய நாகரிகம் ஆதிகாலத்தில் இந்து நாகரிகமாகத்தான் இருந்தது. பிரம்மா, விஷ்ணு, சிவன் போன்ற இந்துக் கடவுள்களுக்குக் கோவில்கள் சமைத்து வழிபாடு செய்தார்கள். பின்னர்ச் சீனாவின் செல்வாக்கு கம்போடியாவில் அதிகரித்தது. அதன் விளைவாகக் கம்போடியாவில் மகாயான பௌத்த மதம் பரவியது. கி. பி. பதினான்காம் நூற்றாண்டு வரை கம்போடியர்களின் மதம் இந்து மதமும் மகாயான பௌத்த மதமும் கலந்த ஒரு கலப்பு மதமாக இருந்தது. இதற்குச் சான்றாகக் கம்போடியாவின் பழம் பெரும் கோவிலான அங்கார் வாட் (Angkor wat) இன்றும் விளங்குகிறது. பின்னர்ச் சயாமியர்கள் கம்போடியா மீது படையெடுத்துக் கம்போடியாவின் புராதனக் கோவில்களை அழித்தார்கள். இப் படையெடுப்பிற்குப் பின் கம்போடியாவில் சயாமின் செல்வாக்கு அதிகரித்தது. அதன் பலனாகத் தேரவாடா எனப்படும் ஹீனயான பௌத்த மதம் கம்போடியாவில் பரவிற்று. அண்மையில் கம்போடியாவில் பரவிய உள்நாட்டுச் சண்டைகள் காரணமாகப் பௌத்த மதம் சிறிது சிதைவுற்றது. இருப்பினும் சண்டையில் சலிப்புற்ற மக்கள் பௌத்த மதத்தை நாடுவதால் மேலும் மேலும் பல பௌத்த சங்கங்கள் கடந்த பல மாதங்களாக இந்நாட்டில் தோன்றி வருகின்றன.

## சீனா:

கி. பி. முதலாம் நூற்றாண்டில்தான் பௌத்த மதம் இந்தியாவிலிருந்து சீனாவிற்குப் பரவியது. சீன மன்னர் மிங்-டி கி. பி. 61-ல் தூதர்களை இந்தியாவிற்கு அனுப்பிப் பௌத்தமத நூல்களையும் பௌத்த பிக்குகளையும் கொண்டு வரச் செய்தார். அதன்படி இந்தியாவிலிருந்து இரண்டு பௌத்த பிக்குகள் தங்களுடன் புத்த விக்கிரகங்களையும் மகாயான பௌத்த நூல்களையும் மன்னரின் தலைநகருக்குக் கொண்டு சென்றனர். இவ்விரு பிக்குகளில் ஒருவர் இந்நூல்களைச் சீன மொழியில் மொழி பெயர்த்தார். அது முதற்கொண்டு பௌத்த மதம் சீனாவில் பரவத் தொடங்கியது.

இதற்கு முன் சீனர்கள் டாயிஸம் (Taoism) கன்பூஷியனிஸம் (Confucianism) என்ற இரண்டு மேம்பாடடைந்த மதங்களைப் பின்பற்றி வந்தனர். ஆகவே பௌத்த மதம் சீன மண்ணில் அடியெடுத்து வைக்கு முன்பே சீனர்கள் சிறந்த பண்பாடுடைய மக்களாய்த் திகழ்ந்தார்கள். இம்மக்கள் பௌத்த மதம்

போதிக்கும் துறவற வாழ்க்கையையும், இறந்து உயிர் வாழ்தல் என்ற வாழ்க்கை முறையையும் ஏற்றுக்கொள்ள மறுத்தனர். அதன் விளைவாகச் சுமார் 300 ஆண்டுகள் வரையில் பௌத்த மதம் சீனுவில் அதிகமாகப் பரவவில்லை. பின்னர்க் கி. பி. நான்காம் நூற்றுண்டிலும் ஐந்தாம் நூற்றுண்டிலும் ஏராளமான பௌத்த நூல்கள் சீன மொழியில் மொழி பெயர்க்கப் பட்டன. இத்துறையில் குமாரஜீவா என்பவரின் முயற்சி பாராட்டத் தக்கது. இம் முயற்சிகளின் பலனுகச் சீன மக்களுக்குப் பௌத்த மதத்தில் ஒரு புது விருப்பமும் உற்சாகமும் ஏற்பட்டது. பௌத்த மதத்தைப் பின் பற்றுவோர் துறவிகளாவதற்கும், பௌத்த சங்கத்தை ஏற்படுத்துவதற்கும் அனுமதி கிடைத்தது. கி. பி. ஆறும் நூற்றுண்டில் வடமேற்கு சீனுவின் பெரும்பகுதி மக்கள் பௌத்தர்களாயினர். அதற்குப் பின் காஞ்சிபுரத்தி லிருந்து சீனுவிற்குச் சென்ற போதி தர்மா என்ற பௌத்தர் சீனர்களின் விருப்பத்திற்கும் தேவைகளுக்கும் ஏற்ற முறையில் ஒரு புதிய பௌத்த சங்கத்தை ஏற்படுத்தினுர். இதற்குத் தியானு என்று பெயர். சீன மொழியில் சன் (Ch'an) என மருவி வழங்குகிறது. இந்த 'சன்' என்ற பௌத்த மதத்தைப் பெரும்பாலான சீன மக்கள் பின்பற்றினுர்கள்.

சீனுவில்தான் முதன் முதலில் பௌத்த மதம் அரசாங்கத்தினரின் தாக்குதலுக்கு இலக்காயிற்று. மன்னர்கள் பௌத்த மதத்தை ஒறுத்தார்கள். தத்துவ ஞானிகள் பௌத்த மதத்தில் புதைந்துள்ள மூடக் கொள்கைகளைப் பற்றிப் புகார் செய்தார்கள். சீனுவின் ஒப்பற்ற புதல்வர்கள் பௌத்த மதத்தைச் சார்ந்து துறவறத்தை மேற்கொள்வதால், சீனுவின் ஜீவ ரத்தம் மலடாகிப் பாழ்படுகிறது என்று பதறினுர்கள் இராஜ தந்திரிகள். இந்தச் சூழ்நிலையில் பௌத்த மதத்தின் வளர்ச்சி மன்னன் கன்பூசிய மதத்தைச் சார்ந்தவனு அல்லது பௌத்த மதத்தைச் சார்ந்தவனு என்பதைப் பொறுத்திருந்தது. முடிவில் அரசாங்கத்தை மதம் வென்றது. மன்னர்கள் புதிய கடவுள்களிடம் சமாதானம் செய்து கொண்டார்கள். கி. பி. ஏழாம் நூற்றுண்டிலிருந்து கி. பி. 18-ம் நூற்றுண்டு வரை பௌத்த மதம் சீனுவில் உச்ச நிலையில் இருந்தது. பாஹியான், ஹியூவன் சாங், இட்சிங் போன்ற தத்துவ ஞானிகள் இந்தியாவிற்கு வந்து ஏராளமான பௌத்த நூல்களை எடுத்துச் சென்று சீன மொழியில் மொழிபெயர்த்தார்கள். சீனுவில் உள்ள பௌத்த பிக்குகள் பௌத்த நூல்களை முதல் முதலில் அச்சிட்டு வெளியிட்டார்கள். இந்தியாவிலிருந்து சீனுவிற்குச் சென்ற பௌத்த பிக்குகள் தங்களுடன் விஞ்ஞானத்தையும் மருத்துவக் கலையையும் எடுத்துச் சென்ருர்கள். இவ்வாறு பௌத்த மதம் சீனுவில் கட்டிடக் கலை, இலக்கியம், சித்திரம், சிற்பம் ஆகிய கலைகளை வளர்த்துச் சீன மக்களின் பண்பாட்டைப் பெரிதும் உயர்த்தியது.

கி. பி. 18-ம் நூற்றுண்டின் துவக்கத்திலிருந்து பௌத்த மதம் சீனுவில் மறையத் தொடங்கியது. சீனுவில் பௌத்த மதம் மறைந்ததற்குக் காரணம் மன்னர்களின் அடக்கு முறை அல்ல. மஞ்சு வம்சத்தைச் சார்ந்த பல அரசர்கள் பௌத்த மதத்திற்கு ஆதரவு தந்த போதிலும் பௌத்த மதத்தின் அழிவை அவர்களால் தடுக்க முடியவில்லை. பௌத்த மதத்தின் அழிவிற்கு அம்மதத்திலும் பௌத்த சங்கங்களிலும் பரவிய பல குறைபாடுகள் தான் முக்கியக் காரணங்கள். சங்கங்களில் ஊழல்கள் அதிகரித்தன. மக்களின் மூடக் கொள்கைகளும், மூட நம்பிக்கைகளும் பௌத்த மதத்தில் இடம் பெற்றமை காரணமாக அம்மதம் நாளடைவில் தரம் குன்றியது. இன்று பௌத்த மதக் கோவில்கள் தங்கள் வருவாய் இழந்து பாழடைந்திருக்கின்றன. வறுமையில் உழலும் பௌத்த பிக்குகள் மட்டுமே அக்கோவில்களுக்குச்

செல்கின்றனர். பொதுவுடைமைச் சீனு வில் இம் மதத்தின் எதிர்காலம் எப்படி இருக்கு மென்பதற்குக் காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

### கொரியா:

சற்றேறக்குறையக் கி. பி. 370-ம் ஆண் டில் பௌத்த மதம் கொரியாவிற்குப் பரவி யது. கி. பி. 13-ம் நூற்றுண்டு வரை பௌத்த மதத்தின் செல்வாக்கு அங்கே உச்ச நிலையில் இருந்தது. அதற்குப் பின் சீனுவிலிருந்து கன்பூசிய மதத்தின் செல் வாக்கு அலை அலையாகக் கொரியாவுக்குப் பரவவே பௌத்த மதம் சீர்குலையத் தொடங்கியது. சீன பௌத்த மதத்திற் கும் கொரியாவில் பரவிய பௌத்த மதத் திற்கும் அதிக வேறுபாடுகள் இல்லை. புத்தரை முக்கியக் கடவுளாகக் கொண்டு தியானத்தின் அடிப்படையில் விளங்கு கிறது கொரிய பௌத்த மதம். இன்று கொரியாவில் பௌத்த மதத்தைப் பின் பற்றுவோரின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்த போதிலும் அதன் தரம் குறையா மல் இருக்கிறது. அங்கே பௌத்த பிக்கு கள் ஆத்மிக ஒழுக்கத்தில் சிறந்தவர்க ளாய், கடும் நோன்புடைய வாழ்க்கையை மேற்கொண் டிருக்கிறுர்கள்.

### ஜப்பான்:

பௌத்த மதம் சீனுவி லிருந்து கொரியா விற்குப் பரவி, பின் கொரியாவி லிருந்து கி. பி. 552-ல் ஜப்பானுக்குப் பரவியது. ஜப்பானிய இளவரசர் ஷோடோகு பௌத்த மதத்தைத் தழுவியதோ டன்றி அம்மதம் ஜப்பானில் பரவுவதற்குப் பல துறைகளி லும் முயற்சிகள் பலவற்றை மேற்கொண் டார். அவரே பல பௌத்த நூல்களுக்கு விளக்கங்கள் எழுதியிருக்கிறுர். நாரா, ஹொர்யூஜி போன்ற நகரங்களைக் கட்டி அங்கே பௌத்தத் துறவிகளைக் குடியேறச் செய்தார். காலத்தால் அழியாமல் கட்டிடக் கலைக்கு ஓர் எடுத்துக்காட்டாக இன்றும் ஜப்பானில் விளங்குகின்ற பல பௌத்தக் கோவில்களை அவர் கட்டுவித்தார். வெண் கலத்தாலும், மரத்தாலும் ஆன பல கலைத் திறன் மிக்க புத்த சிலைகள், அவர் காலத் தில் செய்யப்பட்டன. அஜந்தா சித்திரங் களுடன் ஒப்பிடும் வகையில் பல அழகு மிகு பௌத்த சித்திரங்கள் ஹொர்யூஜியில் வரையப்பட்டன.

பௌத்த மதம், ஜப்பானில் பரவுவதற்கு முன்பே முரண்பாடுடைய கருத்துக்களைக் கொண்ட பல பிரிவுகளாகப் பிரிந்திருந்தது. ஜப்பானில் இப்பிரிவுகளும் முரண்பாடு களும் மேலும் மேலும் அதிகரித்தன. எதிரி மனப்பான்மையுடன் இயங்கும் சங்கங்க ளால் பௌத்த மதத்திற்கு அழிவேயன்றி ஆக்கமில்லை. இதை நன்குணர்ந்த கர்னல் ஆல்காட் என்பவர் கி. பி. 1891-ல் பௌத்த மதத்தின் பதினுன்கு அடிப்படை நம்பிக்கைகளைத் தொகுத்தார். இவற்றை ஜப்பானில் பௌத்த மதத்தைப் பின்பற்றும் பல்வேறு பிரிவினரும் ஏற்றுக்கொண்டு ஒன்று பட்டனர். இரண்டாவது உலகப் போருக்குப் பின் ஜப்பானியரை கிறிஸ்தவ மதத்தை ஏற்கும்படி செய்வதற்கு அமெ ரிக்கா எடுத்துக்கொண்ட எல்லா முயற்சி களும் தோல்வியில் தான் முடிந்தன. ஜப் பானிய பௌத்த மதம் இன்று புத்துயிர் பெற்று விளங்குகிறது. ஜப்பானைப் பார்வை யிடச் செல்லும் பிறநாட்டவர்கள் கோவில் வாசலை மிதித்ததும் "பௌத்த மதத்தின் பன்னிரண்டு அடிப்படைக் கொள்கைகள்" என்ற புத்தகத்தின் பிரதி ஒன்றைக் கொடுத்து அவர்கள் வழியனுப்புகிறுர்கள்.

ஆசிய நாடுகளில் ஹீனயான பௌத்த மதம் இலங்கை, பர்மா, சயாம், கம்போ டியா ஆகிய நாடுகளிலும், மகாயான பௌத்த மதம் திபெத்து, பூட்டான், சிக் கிம், நேப்பாளம், மங்கோலியா, சீனு, கொரியா, ஜப்பான், ஜாவா, சுமத்ரா ஆகிய நாடுகளிலும் பரவி இருக்கின்றன. பௌத்த மதம் இந்தியாவில் தோன்றிய போதிலும்,

பௌத்த கோவில்களில் மிகப் பெரிய கோவில் ஜாவாவில்தான் இருக்கிறது. போரோபுதூர் (Borobudur) என்ற இக் கோவிலில் 436 கலைத்திறன் மிக்க புத்த சிலைகளைச் செதுக்கிய பின்பும் மன நிறைவு பெருமல், கோவிலின் சுவர்களில் புத்தரின் வாழ்க்கை வரலாற்றை மூன்று மைல் நீளத்திற்குச் செதுக்கி இருக்கிருர்கள். கல்லில் செதுக்கிய காவியமாக இக் கோவில் இன்றும் காட்சியளிக்கிறது.

பௌத்த மதம் உலகின் பல பகுதிகளில் பரவிய போதிலும், அது ஒரு உலக சக்தியாக இன்னும் உருவாகவில்லை. ஒவ்வொரு நாட்டிலும் அது தனித்தே இயங்குகிறது. பௌத்த மதத்திற் கென்று ஒரு போப் பாண்டவர் இல்லை. நிர்வாண நிலையை எய்துவதற்குத் தனிமனிதனின் சொந்த முயற்சியையே அது வலியுறுத்துகிறது. நாடுபிடிக்கும் ஆசையும் அதற்குக் கிடையாது. சங்க உறுப்பினர்கள் அரசியலில் ஈடுபடுவது, தாங்கள் உடுத்தி இருக்கும் காவி ஆடைக்கே இழிவைத் தரும் செயலாக அது கருதுகிறது. திபெத்தைத் தவிர வேறெந்த நாட்டிலும் அதற்கு அரசியலதிகாரமும் கிடையாது. மேற்கூறிய காரணங்களால் பௌத்த மதம் ஐ. நா. சபையைப் போல் ஒரு உலக அமைப்பாக உருவாவது கடினமாகிறது. இருப்பினும், உலக அமைதியும் உள்ள அமைதியும் மனித குலத்தின் முதல் தேவயாக இருக்கும்வரை பௌத்த மதம் வாழ்வின் உயிர் ஓட்டாமக இருந்தே தீரும். துன்பத்தில உழலும் மனிதனைப் பார்த்து மற்ற மதங்கள் இரக்கப்படுவதோடு நின்றுவிடுகின்றன. ஆனல் பௌத்த மதம் துன்பத்தை விளக்கி, அத்துன்பத்தின் காரணங்களை ஆய்ந்து அவற்றிற்கு ஒரு முடிவும் காண்கிறது. ஆகவே பௌத்த மதம் பிறவி யறுக்கும் பெரு மருந்தாக மட்டுமல்லாமல், இவ்வுலகிலே வாழுகின்ற நேரத்தில் மனநிறைவு பெற்ற வாழ்க்கையை மக்களுக்கு அளிக்கும் பேரமுதமாகவும் அது இருக்கிறது; இருக்கும்.

○✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱○

"ஒருநிலைப்படாமல் அலைந்துகொண்டே யிருக்கும் மனத்தைக் கட்டுப் படுத்துவதும் பாதுகாப்பதும் தொல்லையானவைதான். எனினும், கணைகளைச் செய்பவன் உலோகத்தை நீட்டி நிமிர்த்தித் தன் திட்டப்படி நேராக்குவதைப் போல, அறிவாளியும் தன் மனத்தை நேராக்கிவிடுகிருன்"

"விழிப்புடன் இருப்பவனுக்கும் ஆசை அற்ற மனம் உடையவனுக்கும், நன்மை தீமை இரண்டையும் ஒதுக்கியவனுக்கும் அச்சம் என்பது எப்போதும் ஏற்படுவதில்லை."

"எனக்கு மக்கள் இருக்கிருர்கள், செல்வம் இருக்கிறது என்றெல்லாம் அறிவற்ற மூடன் நினைக்கிருன். அவனே அவனுக்குச் சொந்தம் இல்லையென்ருல், மக்களும் செல்வமும் எம்மாத்திரம்?"

— புத்தர்.

○✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱○

# எண்ணின் பிரிவுகள்

திரு. எஸ். நாராயணசாமி, B. A.

★

கணிதம் விரிவடையத் தொடங்கிய போது இரு பெரும் பிரிவிலே தோன்றி விரிந்தது. அவை எண் (number), உருவம் (form) என்பன. எண்ணின் வளர்ச்சியினுல் எண் கணிதமும் (Arithmatic) இயல் கணிதமும் (Algebra) தோன்றின. 'உருவத்' தின் வளர்ச்சியினுல் உருவ கணிதம் (Geomertry) வளர்ந்தது. பின் இவற்றின் கலப்பாலே இன்று நாம் காணும் பல்வேறு கணித இயல்கள் தோன்றின.

கணிதத்தின் ஆரம்ப ஊற்றிலொன்ருன எண், எவ்வாறு தோன்றியிருக்கலாம் என மார்ச் கலைக்கதிரில் கண்டோம். இனித் தொடர்ந்து அதன் வளர்ச்சியினுல் அதனிடத்து எழுந்த பிரிவுகளில் சிலவற்றை விரிவுறக் காண்போம். மனிதன் எண்ணைப் பற்றி எண்ணியபோது பொருள்களோடு அவற்றை அமைத்துக் கண்டான் என முந்திய இதழில் குறிப்பிட்டேன். பொருள்களை முழுதாக எண்ணும்போது ஒப்பிடல் முறையால் அவற்றை எண்ணினுன். ஆனுல் அவன் சம்பந்தப்பட்ட எல்லாப் பொருள்களும் முழுப்பொருள்களாகவே இருந்திருக்கமுடியாது. உதாரணமாக அவன் தன் உணவை மற்றவனுக்குப் பங்கிட்டளிக்க வேண்டியிருந்திருக்கும், நிலத்தைக் கூறுபோடவேண்டியிருந்திருக்கும். எனவே அவற்றைப் பற்றி எண்ண வேண்டி யிருந்திருக்கும். இங்நிலையில் அவன் உள்ளத்தில் பாதி, கால்பாகம் போன்ற அளவுகள் உதித்திருக்கும். எனவே பின்னங்கள் (Fraction) இயற்கையாகவே அவன் கணிதத்தில் இடம் பெற்றன. எண்ணும் முழு எண் (Intger), பின்னம் எனப் பிரிக்கப்பட்டது. பிறகு முழு எண்ணும் பின்னமும் சேர்ந்து கலப்பெண் (Mixed Number) தோன்றியது.

எனவேதான் எண் முதல் நிலையில் முழு எண், பின்னம், கலப்பெண் எனப் பிரிக்கப் பட்டது.

1. 5. 8, 13 என்பன முழு எண்கள்.

$\frac{1}{5}$, $\frac{7}{12}$......என்பன பின்னங்கள்;

$1\frac{1}{4}$, $\frac{7}{5}$, என்பன கலப்பெண்கள்.

ஆனுல் கணிதம் வளர வளர எண்ணின் அளவுமட்டும் போதவில்லை. அதன் திசையும் தேவைப்பட்டது. ஒருவன் 5 மைல் கிழக்கே செல்வதையும், 5 மைல் மேற்கே போவதையும் மாறுபடுத்திக் குறிக்க வேண்டியிருந்தது. வரவுக்கும் செலவுக்கும் வேறுபாடு தேவைப்பட்டது. லாபம் நஷ்டம் தீர்மானிக்கப்பட வேண்டியிருந்தது. இதற்கு இரண்டு விதமான குறிப்பிட்ட எண்கள் தேவைப்பட்டன. இந்தத் தேவையை மிகை (Positive), குறை (Negative) எண்கள் பூர்த்தி செய்தன. மிகை எண்கள் + குறியினுலும், குறை எண்கள் – குறியினுல் முறையே குறிக்கப்பட்டன.

எனவே 5 மைல் கிழக்கே செல்வதை + 5ஆல் குறித்தால் 5 மைல் மேற்கே போவதை – 5ஆல் குறிக்கலாம். 10 ரூபாய் லாபத்தையோ வரவையோ + 10 ஆலும் 10 ரூபாய் நஷ்டத்தையோ செலவையோ – 10ஆலும் குறிக்கலாம். இந்த +, – குறிகள் முதன் முதலில் ஜெர்மானிய (German) வியாபாரிகள் 15-ம் நூற்றுண்டில் அவர்கள் மண்டியில் (Ware house) உபயோகித்து வந்த குறிகளாம். அவர்கள் பீப்பாய்களின் நிறை ஒரு அந்தருக்கு மிகுதியாக அல்லது குறைவாக இருப்பதை முறையே + – குறிகளினுல் குறித்து வந்தனர். பின்னர் அதே குறிகள் கணிதத்தில் எடுத்தாளப்பட்டு இன்றுவரை நின்று நிலவி உதவுகின்றன.

ஆனுல் இன்று சாதாரணப் பள்ளி மாணவன்கூடப் புரிந்துகொள்ளும் வகையில் எளிதில் விளக்கப்படும் இந்தக் குறை எண்கள் தோற்றக் காலத்தில் அறிவிற்குப் பொருத்தமற்றன என ஒதுக்கப்பட்டன. டியபான்டஸ் (Diophantus) என்ற கிரேக்க வல்லுநர் (3A. D) – 4 என்ற எண் ஒரு சமன்பாட்டின் (Equation) மூலமாக வரவே அது பொருத்தமற்றதென ஒதுக்கினுர். பின்பே குறை எண்களின் முக்கியத்துவம் உணரப்பட்டது. ∴பிபோனசி (Fibonacci 1175–1250) என்பவர் மிகை, குறை எண்களை லாப நஷ்டத்துடன் ஈடுபடுத்தி விளக்கினுர். பின்னர் அவை பற்றிய விதிகளும் தோன்றின. அவையாவன.

(1) ஒரு மிகை எண்ணை மற்றெரு மிகை எண்ணுல் பெருக்கினுல் வருவது ஒரு மிகை எண்.

$(+) \times (+) = (+)$

$+5 \times +6 = +30$

(2) ஒரு மிகை எண்ணை ஒரு குறை எண்ணுலோ அல்லது ஒரு குறை எண்ணை ஒரு மிகை எண்ணுலோ பெருக்கினுல் வருவது ஒரு குறை எண்.

$(+) \times (-) = -$

$(-) \times (+) = -$

$+2 \times -3 = -6$

$-7 \times +6 = -42$

(3) ஒரு குறை எண்ணை மற்றொரு குறை எண்ணுல் பெருக்கினுல் கிடைப்பது ஒரு மிகை எண்.

$(-) \times (-) = +$

$-3 \times -4 = +12$

இனி ஒரு எண்ணை அதே எண்ணுல் ஒரு முறை பெருக்கி வருவதை அதன் இருபடி (Square) என்கிறோம். 9 என்பது 3-ன் இருபடி. ஏனெனில் 3 ஒரு முறை 3ஆல் பெருக்கினுல் 9 கிடைக்கிறது. இதை $3^2$ என்பதாலும் குறிக்கலாம். மூன்றின் வலது தலைப்பில் சிறிதாக போடப்படும் 2 அதன் இருபடியைக் குறிக்கிறது. எனவே $9 = 3^2$. இதே போல் 3ஐ 9ன் இருபடி மூலம் (Square root) எனக் கூறுகிறோம். இதையே $\sqrt{9}$ என்பதால் குறிக்கலாம். $\sqrt{}$ என்ற கொக்கிக்கோடு இருபடி மூலத்தைக் குறிக்கப் போடப்படுகிறது. எனவே $\sqrt{9} = 3$ ஆனுல் $-3 \times -3 = 9$ அல்லது $(-3)^2 = 9$ ஆக –3 என்பதும் 9ன் ஒரு மூலமாக அமைகின்றது. முடிவாக $\sqrt{9} = +3$ அல்லது –3 ஆகும். 64 என்ற எண்ணை எடுத்துக்கொண்டால் அதன் மூலம் +8 அல்லது –8 ஆகும். இவ்வாறு எல்லா எண்களின் மூலங்களும் முழு எண்களாகவே இருக்க முடியாது. கலப்பெண்களாகவும் பின்னங்களாகவும் வரம்பிலாத் தசம பின்னமாகவும் (Recurring Decimals) சில சமயங்களில் இருக்கலாம். உதாரணமாக $6\frac{1}{4}$ன் இருபடி மூலம் $2\frac{1}{2}$. இது ஒரு கலப்பெண. $\frac{9}{16}$ன் மூலம் $\frac{3}{4}$ இது ஒரு பின்னம். 3ன் மூலம் 1·732...என்னும் வரம்பிலாத் தசமபின்னம்.

இந்த வேறுபாட்டினுல் எண்களிடையே இருவிதப் பிரிவுகள் தோன்றின. அவையே

தகு எண்கள் (Rational Nos.) தகா எண்கள் (Irrational Nos.) என்பன. $\frac{p}{q}$ என்ற உருவில் அமைக்க இயல்வன யாவும் தகு எண்களாம். pம் qம் முழு எண்களாக இருத்தல் அவசியம். 4 என்ற எண்ணை $\frac{4}{1}$ என்றும், $2\frac{1}{2}$ என்பதை $\frac{5}{2}$ என்றும். ·75 என்பதை $\frac{75}{100}$ என்றும், 1·73 என்பதை 1·$\frac{73}{100}$ என்றும் அமைக்கலாம். எனவே இவை தகு எண்கள். ஆனால் 3ன் மூலமாகிய 1·732... என்ற வரம்பிலாத் தசம பின்னத்தை அவ்வாறு அமைத்தல் இயலாது. ஏனெனில் அதன் முழு மதிப்பை ஒரு வரம்புடைய தசமபின்னமாக எழுத முடியாது. எனவே $\sqrt{3}$ ஒரு தகா எண். இவ்வாறே 7ன் முப்படி மூலமாகிய $\sqrt[3]{7}$, 16ன் ஐம்படி மூலம் $\sqrt[5]{16}$ என்பன தகா எண்கள்.

இனி குறிகளின் விதிகளைக் கூர்ந்து கவனித்தால் குறை எண்கள் எந்தவகை எண்களுக்கும் இருபடியாக (Square) இல்லாத நிலையிலுள்ளது தெரியவரும். ஏனெனில் குறை எண்ணை மற்றொரு குறைஎண்ணால் பெருக்கினாலும் வருவது மிகை எண். ஒரு மிகை எண்ணை மற்றொரு மிகை எண்ணால் பெருக்கினாலும் வருவது மிகை எண்ணே; ஆகவே குறை எண்ணுக்கு இருபடி மூலம் ஒன்று இருக்க முடியாது. இந்தக் குறையை நீக்க $\sqrt{-1}$ என்பதைக் கற்பனை (Imaginary) அளவாகக் கொண்டனர். அதைக் கற்பனை என்பதின் ஆங்கில வார்த்தையான (Imaginary)ன் முதல் எழுத்தான i என்பதால் ஆயிலர் (Euler) என்பவர் குறித்தார். இதன் உதவி கொண்டு குறை எண்களின் மூலங்களை எழுதினர். $-9$ன் மூலம் தேவைப்பட்டால் அதை $-1 \times 9$ எனக் கொண்டு 9ன் மூலம் $+3$ அல்லது $-3$, $-1$ன் மூலம் i எனவே $-9$ன் மூலம் $+3i$ அல்லது $3i$ எனக் கொண்டனர். $3i$ என்பதில் i என்பது கற்பனை அளவு. ஆதலின் $3i$ என்பதும் கற்பனை அளவாயிற்று. இவ்வகை எண்கள் கற்பனை எண்கள் (Imaginary Nos.) எனப்பட்டன. இவற்றிலிருந்து மற்றவற்றை வேறுபடுத்திக் காட்ட அவற்றை மெய்யெண்கள் (Real Nos) என்றனர். 13, $-12$, $\sqrt{5}$ –, $\sqrt{3}$, 1·65 என்பன மெய்யெண்களாம். பின்னமும் முழு எண்ணும் சேர்ந்ததைக் கலப்பெண் என்றது போல மெய்யெண்ணும் கற்பனை எண்ணும் சேர்ந்ததைத் தள எண் (Complex Nos) என்றனர்.

$3+2i$, $4-3i$, $5i+2$ என்பன தள எண்களுக்கு எடுத்துக் காட்டுகளாம்,

இதுவரை மேலே கூறப்பட்டவை இன்றைய கணித நிலையில் நாம் காணும் எண்ணின் பிரிவுகளில் சிலவாம், இவையேயன்றி வேறு சில பிரிவுகளும் எண்களில் உண்டு.

குழம்பிலேயே தோய்ந்துள்ள கரண்டிக்குக்
குழம்பின் சுவை தெரியாது; வாழ்க்கை
முழுதும் அறிவாளியோடு பழகினாலும்
முட்டாளுக்கு உண்மை புலப்படாது.

—புத்தர்.

# புத்த ஞாயிறு

திரு. இரா. இருசு, B.A.,(Hons.)

உலகின் கண்ணீர் உள்ளத் துரப்ப பலர் புகழ் ஞாயிறு ஒன்று 2500 ஆண்டு கட்கு முன்னர் இந்திய நாட்டில் உதித்தது. ஆசை இருளில் அல்லல் பட்டு ஆற்ருது நின்ற மக்கட்குத் தண்ணெளி வீசி அறிவுச் சுடர் பரப்பி அருட்பிழம்பாய் எழுந்த அஞ் ஞாயிறு எது? அதுவே புத்த ஞாயிறு.

இஞ் ஞாயிற்றினை அறிய விஞ்ஞானக் கருவி ஏதும் தேவையில்லை. பற்றில்லாத களங்கமற்ற அறிவு வேண்டும்; உள்ளத் தூய்மையும் உண்மையில் நாட்டமும் வேண்டும்.

புத்தர் தோன்றிய காலத்து உலகு எங் கணும் அறிவுக் கொந்தளிப்பு இருந்தது. அக் கொந்தளிப்பி னிடையே அமைதிப் பண்பொடு விண்மீன்களிடை உலவும் வெண்ணிலவு போன்று, உலகின் உள் ளத்தை ஈர்த்த ஞான ஒளியாகப் புத்தர் தோன்றினுர்; உலகின் துயர் கண்டு உளம் பதைத்தார். கட்டிய காதல் மனைவி ஒரு புறம், புத்திளங் கன்ருன புதல்வன் மற் ருெரு புறம், அன்புத் தந்தையும் அரச போகமும் பிறிதொருபுறம்! இத்தனைச் சிறைகளுக் கிடையே அவர் உள்ளம் உலகத் துயரை எண்ணி எண்ணி நைந்தது. உண்மை அறிய, உலக மக் களின் துன்பம்போக்கும் வழி அறிய ஒரு நாள் இரவு மனைவி, மகன், அரசு அனைத் தையும் துறந்து அவர் வெளியேறினுர். வெளியேறிய பின்னர் 5 ஆண்டுகள் கடுநோன்பு நோற்ருர். உடலை வாட்டி உள்ளக் கனலை எழுப்ப முயன்ருர். ஒளி ஒன்றும் எழுந்தபாடில்லை. உள்ளம் ஒளி பெற உடலையும் ஓம்பவேண்டும் என்று அறிந்தார், நாட்கள் சென்றன. ஒரு நாள் அரசமரத் தடியில் வீற்றிருந்து தியான நிலையில் இருக்கையில் ஞானஒளி, மெய்யறிவுச் சுடர் தோன்றியது. புத்தர் உண்மையைக் கண்டார். உண்மை புத் தரைக் கண்டது.

அவர்பெற்ற மெய்யறிவு எது? ''அவாவை நீக்கு'' என்பதுதான் அவர் பெற்ற மெய்யறிவு. உலகின் தத்துவங்களை எல் லாம் இவ்விரண்டு சொற்களில் அடக்கி விட்டார். இத்தத்துவத்தை அறிய, அறிந்து தெளிய எத்தகைய ஏட்டுப்படிப் பும் வேண்டுவதன்று. சுதந்திரமாக எண் ணும் ஆற்றலே போதும். சுதந்திரமாக எண்ணும் ஆற்றலை இந்நன்ஞளில் பெறு வோமாக!

தான் பெற்ற மெய்யறிவினை வேண்டு வோர்க் கெல்லாம் வழங்கினுர் புத்தர் பெருமான். வேண்வோர் நாளுக்கு நாள் பெருகினர், நாடு முழுதும் அவர் பெற்ற ஞான அமுதினைப் பருகியது. பிம்பிசார மன்னன் போன்ருேர் புத்தர் தம் அருள் மொழியினைக் கேட்டுக் கொலையாகத்தினை நிறுத்தினுர்கள். அவர் திருவடியைத் தீண்டும்பேறு பெறப் பெருநில மன்னர்கள் தவங்கிடந்தனர். அத்தகைய பெருமை வாய்ந்த புத்தர் பெருமான் வாழ்ந்த சூழ் நிலையை நாம் சிறிது இங்கு எண்ணிப்

பார்க்க வேண்டும். அக்காலத்தே தெய்வ அருள் பெற ஆடு மாடுகளைப் பலியிடு வோர் மல்கி யிருந்தனர். தத்துவம் பேசு கிறேம் என்று உள்ளத் தூய்மையைக் கொன்றுபோலி வாதங்கள் பேசி பொழுது போக்கிய சூழ்நிலை. தத்துவம் பேசுதலும் கலையைக் கற்றலும் ஒரு சாரார்கே உரியன என்று கருதப்பட்ட காலம். தத்துவம் வாழ வழி வகுக்காது தன்னையே சுற்றிச் சுற்றி மயங்கிய சூழ்நிலை. இத்தகைய சூழ்நிலையில்தான் புத்தர் தோன்றினர். ''வீண் பேச்சு வெற்றி தராது,பணி செய்ய வாரீர்'' என அறைகூவி அழைத்தார். மனத்தூய்மை பெற்ற பின்னர் வாதம் பேச லாம் என அறிவுறுத்தினர். அவர் உள்ள ஒழுக்கத்தையே வலியுறுத்தலானர்.

இன்றும் தெய்வ வணக்கம் உடலின் செயலாகவே உள்ளது. உள்ளத்தின் செய லாக இல்லை. கோவிலைச் சுற்றுவதாலும் விழுந்து விழுந்து கும்பிடுவதாலும், தேங் காய் பழம் வைத்துப் படையல் செய்வத ஞலும் ஆண்டவன் அருள் பாலிப்பார் என்ற அறியாமை, கற்றறிந்த பெரு மக்க ளிடமும் இன்று நிலவுகிறது. இதனைக் கண்ட புத்தர் இத்தகைய தெய்வ வணக் கத்தால் பயன் ஒன்றும் இல்லை என்றார்.

புத்தர் சமய வாதங்களையும் வருணசிரம மயக்கத்தையும் வீழ்த்தினர். யாவரும் எளிதில் ஏற்றுப் பின்பற்றும் அமுது போன்ற தத்துவத்தை அருளினர். உண்மை செயலில் விளையாடியது. மேல் உலக இன்பங்களை எல்லாம் இம்மையிலே ஒருவன் எய்தி நுகர்தற்குத் தூய்மை யான வாழ்வே வழி எனப் பகர்ந்தார்.

அவர் காட்டிய வழி எளிய வழி. ஐம்புல இன்பங்கட்கு இரைகொடுத்து வாழும் ஆசை நெறியும் அன்று; உடலை ஒறுத்து ஒடுக்கிக் காடேகிக் கடுந்தவம் புரியும் தீவிர நெறியும் அன்று. ஆனல் இரண் டிற்கும் இடைப்பட்ட நடுநெறி; செம்மை நெறி. உடலையும் உள்ளத்தையும் ஒருங்கே ஓம்பும் உயர்வழி அது. அமைதிப் பண்பு நல்கும் அரிய வழி.

புத்தர்தம் சில அரிய பண்புகளை உணர்ந்து பின்னர் அவருடைய முக்கியக் கொள்கைகளை அறிவோம்:



[உதவி: இந்திய அரசாங்கம்]

போதிசத்துவர்

சிந்தனைச் சுதந்தரம் எல்லோரும் பெற வேண்டும் என விரும்பிய புத்தர்பெருமான் ''நான் சொல்கிறேன் என்று எதையும் ஏற் றுக் கொள்ளாதீர்கள். நீங்களே சிந்தித்

துப் பார்த்துப் பிறகு ஏற்றுக்கொள்ளுங்கள்' 'என்ருர். ஏன்? எப்படி? என ஆய்ந்து பார்க்கத் தூண்டி அவரது கொள்கைகளை அறிவியல் ஆராய்ச்சி யாக்கிக் காட்டினர். அற்ப அரசியல் காரணங்கட்காக அறிவை மயக்கி யலேயும் இன்றைய சூழலில் நிற்கும்



[உதவி: இந்திய அரசாங்கம்]

புத்தர்

நமக்கு, உயர்ந்த மனித வாழ்வுக்காகக் கூட அறிவைக் கட்டுப்படுத்த விரும்பாத அண்ணல் புத்தர்பெருமானை நினைக்கையில் கண்ணீர் சுரக்கிறது.

உண்மைக்கும் எதிர்ப்பு உண்டு. புத்தர் கொள்கைகளை விரும்பாத, ஏற்றுக் கொள்ளாத பெருமக்கள் புத்தரை வைதார்கள். தூற்றினர்கள். அப்போதெல்லாம் புத்தர்தம் அருமை மாணவர்களால் அத்தகைய வசவுகளையும் தூற்றலையும் பொறுக்க முடியவில்லை. இதனை உணர்ந்த பெருமான் அவர்க்குக் கூறும் உரைகள் யாரையும் கவரும் வண்ணம் உள்ளன. ''துறவிகளே, என்னையோ, அன்றி என்னுடைய கொள்கைகளையோ, அல்லது நம் கழகத்தினையோ பிறர் தாழ்த்திக் கூறுகிருர்கள் என்பதற்காக நீங்கள் வெறுப்பும் சினமும் கொள்ளக் காரணம் இல்லையே. சினமும் வெறுப்பும் கொள்வது உங்கட்கே தீங்கு தரும். சினத்திற்கும் வெறுப்பிற்கும் உள்ளத்தில் இடம் கொடுப்பீராயின் அவர்கள் கூறுவது சரியா, தவரு? என பகுத்துணரும் வாய்ப்பினை இழப்பீர்'' என்று வெகுண்டெழுந்த மாணவர்க்கு அறிவுரை தந்திருக்கின்ருர். இத்தகைய கடல் போன்ற பொறுமையும், எந்த எதிர்ப்புக்கும் கலங்காத உண்மை நாடி, மெய்ப்பொருள் காணும் தெள்ளறிவும் நமக்கு அரிய பாடங்கள்.

புத்தர் நான்கு உண்மைகளைக் கூறுகிருர். முதல் உண்மை துக்கம். பிறப்பும் துக்கம், பிணியும் துக்கம், மூப்பும் துக்கம், இறப்பும் துக்கம். விரும்பிய பொருளைப் பிரிதலும், விரும்பாததோரு சேர்வதும் துக்கம். பொதுவாக வாழ்வே துக்கம். அடுத்த உண்மை துக்கத்தின் மூலே எது என்பது ஆகும். அதையும் இதையும் அவாவி அலேவதும், அவ் அவாவின் காரணமாகத் தீவினைகள் புரிவதும், தீவினைகளால் மீண்டும் பிறப்பு எடுப்பதும் துக்கத்தின் மூலே ஆகும். சுருங்கக் கூறின் அவாவே துக்கத்தின் அடிப்படை மூன்ருவது. உண்மை துக்கத்தை நீக்கவேண்டும் என்பது. அதாவது அவாவை அகற்ற வேண்டும்.; பொறி புலச் சிறையில் இருந்து விடு

தலை பெறவேண்டும் என்பது ஆகும். நான்காவது உண்மை, துக்கத்தை நீக்கும் வழிகள் எவை என்பது. துக்கத்தைத் தொலைக்க, எண்வகை வழிகளைப் புத்தர் வகுத்துரைக்கிருர்.

முதன் முதலில் ஒருவன் 'நல்லறிவு' பெறவேண்டும். நல்லறிவு என்பது எது? உலகம் துன்பம் நிறைந்தது; அத்துன்பத்தினின்றும் விடுபட வேண்டும். உலகம் காரணகாரியத் தொடர்பு உடையது என்ற அடிப்படை அறிவு பெறவேண்டும். இதனைத்தான் ''நல்லறிவு'' என்கின்ருர். நல்ல சிந்தனை, நேரிய பேச்சு, நல்லொழுக்கம், நேரிய வாழ்வு, நன்முயற்சி, தூய மன அடக்கம், தூய எண்ணம் என்பவைகள் மற்ற வழிகள்.

வேதங்களாலும், ஆசிரியராலும், மூத்தோராலும் சொல்லப்பட்டது, கொள்ளப்பட்டது என்பதற்காக எதனையும் ஏற்றுக் கொள்ளாது ஒருவன் எவ்வித சிந்தனைக் கட்டுப்பாடும் இன்றி, வேண்டுதல் வேண்டாமை அற்றுத் தெளிந்த அறிவுடன் உண்மையை ஆராயப் புகவேண்டும் என்பதைப் புத்தர் பெரிதும் வற்புறுத்துகிருர்.

தம் மாணவன் எப்படி இருப்பான் என்று புத்தர் கூறுகிருர்:- புத்த சமய மாணவன் கொல்லாமை நோன்பு நோற்றுக் கொடுங் கருவிகளை நீக்கி, உயிர் உள்ள அனைத்தின் மீதும் அருள் சுரக்கும் பண்புடையவனுய் இருப்பான். செந்தண்மை பூண்டொழுகும் அந்தணனுய் வாழ்வான். வஞ்சனையும், சூதும் அவனை நெருங்கா. பொய் சொல்லுதலும் புறங்கூறுதலும் அவனிடம் காண முடியாது. அமைதியையே பரப்புவான். அமைதி தரும் சொற்களையே பேசுவான். அவன் வாயினின்று வரும் சொற்கள் எல்லாம் மனிதப் பண்புடையவையாய், மனங்கவர்வனவாய், செவிக்கினியனவாய் அமையும், கடுமொழியோ அன்றி பயனில சொற்களோ அவன் அறியாதவை. மயக்கம் தரும் பொருளைத் தொடவும் மாட்டான்.

இல்லறத்தானும் ஏற்று நடக்கத்தகு இனிய தத்துவங்கள்! வேற்றுப் பொருள் கூறி ஏய்த்துத் தப்பிக்க முடியாத எளிய தத்துவங்கள்! வாழ்விற்கு நல்ல மருந்தாகும் உயரிய தத்துவங்கள்! உலக முழுதும் இவற்றை ஏற்றுப் பின் பற்றும் நன்ளுள் வரும் என விரும்புவோமாக.

தத்துவமும், சமயமும் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொண்டிருந்த சூழ்நிலையில் ''தத்துவப் பேச்சு வேண்டாம், நல்லவை நாடு; தீயவை நீக்கு; உள்ளத் தூய்மை பெறு'' என்ற வான் குரல் ஒலித்தது. அவ்வொலி மற்றவர்க்குத்தான் நமக்கன்று, என்று எண்ணுமல் நமக்காக அந்த ஒலி ஒலித்தது என்று எண்ணுவோமாக.

புத்தருடைய அன்பு, சாதி சமய வேறுபாடு, உயர்திணை அஃறிணை வேறுபாடு கடந்து, உயிரினங்கள் யாவற்றின் மீதும் பரந்து நின்றது. வாடிய பயிரைக் கண்ட காலத்தும் வாட்டம் கண்டு வருந்தும் பான்மையது.

புத்தருடைய கொள்கைகள் இந்நாளைய கூர்தலறத் (Evolution) திற்குப் பெரிதும் ஒத்து இருப்பன. மனித இனமும் ஏனைய உயிர் இனங்களும் பல பிறவி எடுப்பதன் மூலம் சிறிது சிறிதாக முனனேறி வருவதனை எடுத்துக் காட்டுவதில் டார்வினும் புத்தரும் ஒத்துக் காணப்படுகின்றனர். ஆனுல் இதனுடைய ஆதி எது, அதனுடைய அந்தம் எது என்றெல்லாம் ஆராய்வதனைப் புத்தர் விரும்பவில்லை. ஆராய்ச்சியில் உற்சாகமாக இறங்கி விட்டால் பண்பு பெறும் நோக்கம் தடைப்படும் விடப்படும். அறிஞர் அர்னுல்டு (Arnold) அவர்கள் ''நான் முன்னரும் சொல்லியிருக்கிறேன். மீண்டும் மீண்டும் சொல்லுகிறேன். புத்த சமயத்திற்கும் இன்றைய விஞ்ஞானத்திற்கும் நெருங்கிய

"தனியே அமர்ந்து,
தனியே துயின்று,
தனியே நடந்து
தன்னைத் தான் கட்டுப்படுத்திக் கொள்வதில் சோர்வில்லாமல் வாழ்பவன் கானகத்திலும் இன்பத்தைக் காணுவான்"

—புத்தர்.

அறிவுத் தொடர்பு உண்டு" என்று கூறுகிறார். இக்கூற்றுப் பொருத்தம் உடையதாய்த் தோன்றுகிறது.

புத்தர் கூறிய உண்மைகள் தனி மனிதனுக்குத்தான் என்பது அவைகளைக் காணுகையில் நன்கு விளங்கும். சமுதாயத்தினைத் தனி மனிதனின் குழுவாகவே புத்தர் கண்டார். தனி மனிதன் பின் பற்றுவது எளிது. ஆனால் பரப்பான நாட்டை ஆண்ட மன்னன் ஒருவன் புத்தர் போதனைகளை அவன் நாட்டு மக்கள் வாழ்வாக மாற்றிய அற்புதத்தினை எண்ணும்தோறும் எண்ணும்தோறும் உள்ளம் வியப்பில் ஆழ்கிறது. ஆப்கனிஸ்தான், பாகிஸ்தான், பர்மா முதலிய நாடுகளும் தென்னிந்தியா நீங்கலாக இந்திய நாடும் அசோகப் பேரரசனின் ஆட்சியின் கீழ் இருந்தன. அத்தகைய பேர் அரசில் படைவீரர் இல்லை. நால்வகைப் படைகளும் இல்லை. ஆனால் அன்பின் ஆற்றல் ஆட்சி புரிந்தது. அமைதியை நிலை நாட்டியது. அறம் காவல் செய்தது. அசோகனின் வெளிநாட்டுத் தூதர்கள் எல்லாம் அறத்தின் பொருட்டு அனுப்பப்பட்டவர்களே. அவனது ஆட்சியில் அனைத்து உயிர்களும் உரிமை பெற்று அச்சம் நீங்கிவாழ்ந்தன. தருமம் தவழ்ந்து விளையாடியது. 40 ஆண்டுகளுக்கு மேல் தருமத்தையே துணையாகக் கொண்டு ஆண்ட அசோகன் ஆட்சிக்கு ஒப்புமையான ஆட்சி இன்றுவரை உலகில் இல்லை. விலங்கினங்களும் மருத்துவ வசதி பெற்றன. அரசாங்கம் அருள் மொழி பேசியது. புத்தர்தம் அருள் மொழிகளைத் தாங்கிய தூண்கள் நாடு எங்கணும் காணப்பட்டன. மற்ற மதங்களின் மீது பொறுமையும் சகிப்புத் தன்மையும் கொண்ட மக்கள் மலிந்தனர். உலகு எங்கணும் புத்தர் தம் கொள்கைகளைப் பரப்ப ஏற்பாடுகளைச் செய்தான் அசோக மன்னன்.

உலக வரலாற்றிலே இன்றுவரை ஆயுதங்கள் இன்றி, படை பலம் இன்றி அன்பு நெறியால் ஆளப்பட்ட நாடு புத்தர்தம் அருள் நெறியைப் பின் பற்றிய அசோகர் நாடுதான் என்று நாம் இறுமாந்து கூறலாம்.

புத்தர் பிறப்பு விழாவினைக் கொண்டாடும் நாம் ஒவ்வொருவரும் புத்தர் காட்டிய அறவாழ்வு வாழ நம்மைப் பணித்துக் கொள்வோமாக!

**வாழ்க புத்தர் அறநெறி!**

✱



## போரிடும் மீன்கள்

சையாம் நாட்டுப் போரிடும் மீன்கள் ஆறுமணி நேரம் இடைவிடாமல் போரிடும் ஆற்றலுடையவை.

# குளிரொளி

திரு. எஸ். உதயமூர்த்தி

★

## முன்னுரை

எரியும் ஒளிச்சுடரின் நடுவிலே விரலை வைக்க உங்களால் முடியுமா ?

ஆனால் அந்த ஒளிச்சுடர் அப்படியே குளிர்ச்சியாக இருக்கிறதென்று ஒருகணம் கற்பனை செய்து பாருங்கள் அப்போது நீங்கள் தாராளமாக உங்கள் விரலை அதனிடையே வைக்கலாம்; அதன் குளிர்ச்சியை, இனிமையை அனுபவிக்கலாம், இதைத்தான் 'குளிர்ந்த ஒளி' என்று சொல்கிறோம், இந்தக் குளிர்ந்த ஒளியை விஞ்ஞானி சாத்தியமாக்கி யிருக்கிறான்.

நீலநிற ஒளி சிந்தி இரவில் கண் சிமிட்டும் மின்மினிப் பூச்சிகள் மரங்களையே முழுதும் ஒளிமயமாகச் செய்து விடுகின்றன. கடலிலே வாழும் சிலவகைப் பாக்டீரியாக்கள், கடல் நீரைத், தகதகவென கொதிக்கும் நீர் போல் தோன்றச், செய்கின்றன. வீட்டிலே, தெருவிலே நாம் எப்போதாவது காணும் சிலவகைப் பூச்சிகள்- 'செவ்வட்டை' போன்றவை-தாங்கள் செல்லுமிடங்களிலெல்லாம் ஒளி விடும் பொருள்களை-மின்னும் பொருள்களை-நிலையாகச் சிந்திச் செல்கின்றன.

இவை தரும் ஒளி கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருக்கிறது; நாம் விரும்பும் லட்சிய ஒளியாக இருக்கிறது. காரணம்: இவற்றிலே சூடில்லை; ஒளியிருக்கிறது. வெப்பமில்லை; வெளிச்சமிருக்கிறது. மின்மினிப் பூச்சிகளைக் குருவிகள் தங்கள் குஞ்சுகளுக்கு வேடிக்கை காட்டவும், குரங்குகள் தங்கள் பொந்தில் இருளைப் போக்கவும் பயன்படுத்துவதைக் கண்ட மனிதன், இத்தகைய குளிரொளியைத் தானும் பெற வேண்டும் என்று பழங்காலந்தொட்டே விரும்பியிருக்கிறான்.

## குளிரொளி என்றால் என்ன ?

ஒரு விளக்கு எரியுமானால் வெளிச்சத்துடன் வெப்பமும் கூடவே பரவுகிறது. ஆனால் மின்மினிப்பூச்சி போன்றவை தரும் ஒளியிலோ இந்த வெப்பமில்லை. குளிர்ந்த ஒளி என்னும்போது அது குளிர்ந்த கதிர்களைப் பரப்பி அறையின் வெப்ப நிலையைக் குளிரச் செய்கிறது என்று அர்த்தமில்லை. இதில் புதுமை என்னவென்றால் வழக்கத்துக்கு மாறாக, இதன் ஒளியிலேசூடு இல்லை; வெறும் ஒளிதான் பரவுகிறது என்பது தான். குளிரொளி பரவும்போது சூழ்புறத்தின் வெப்பநிலை எவ்வளவு மாறுகிறது என்று கணக்கெடுத்திருக்கிறார்கள். அது ·001 c வெப்ப மாற்றம்தான்.

சூரிய ஒளிக்கதிரை ஆராய்ந்தால் அதில் ஏழுவித வண்ண நிறங்களும், இவ்வண்ணங்களுக்கு இப்பாலும் அப்பாலும் கண்ணுக்குப் புலனாகாத ஒளிப்பகுதியும் சூடும் இடம் பெறுகின்றன. ஆனால் மின்மினிப் பூச்சி போன்றவற்றின் ஒளியில் நம் கண்

ணுக்குத் தெரியும் வண்ணங்கள் மட்டுமே இருக்கின்றன. சூடு கிடையாது. அதாவது, இதன் ஒளி, முழுவதும்-நூறு சதவிகிதமும்-எவ்வித சேதமும் இன்றி வெளிச்சமாகவே கிடைக்கிறது.

இக்குளிரொளி பலவகைப்படும். அவற்றுள் சில;-

(1) உயிர்வாழ் விலங்கினமும் தாவரமும் வெளியிடும் ஒளி 'உயிர் வாழ் இன ஒளி' எனப்படும். (Biolumenescence)

(2) சர்க்கரை அல்லது யுரேனில் நைட்ரேட்-இவற்றின் படிகங்களைக் கல்லுரலில் வைத்து வேகமாகப்பொடி செய்யும்போது உண்டாகும் ஒளி ஓர் வகைப்படும்.

(3) சூடுபடுத்தாமல் சாதாரண வெப்ப நிலையில் மெதுவான ரசாயன மாற்றம் காரணமாக ஏற்படும் ஒளி ரசாயன ஒளி எனப்படும்.

(4) யுரேனியம் போன்ற கதிரியக்கப் பொருள்கள் வெளியிடும் ஒளியைக் கதிரியக்க ஒளி என்கிறோம்.

**உயிர்வாழ் இன ஒளி** (Biolumenescence)

மின்மினிப் பூச்சி, செவ்வட்டை, மெலிந்து நீண்டு மெதுவாக நகரும் ஒரு வகைப் பூரான். இவை நாம் சகஜமாகக் காணும் ஒளிவிடும் பூச்சிகளாகும். பிராணிகளின் உடலிலுள்ள ஒருவகைப் பொருள் (Oxygen) உயிரியத்துடன் சேர்ந்து வேறு பொருளாக மாறும் ரசாயன மாற்றமே இவற்றின் ஒளிக்குக் காரணம்.

நாக்டிலூகா என்னும் சிறு உயிர்கள், போலா, ஸ்குவிட் எனப்படும் பிராணிகள், சிலவகை மீன்கள்-இவைகளெல்லாம் கடலில் ஒளிவிடும் பிராணிகளே. ஒளிவிடும் பிராணிகள் சாதாரணமாக நல்ல தண்ணீருள்ள குளம் குட்டைகளிலே காணப்படுவதில்லை. கடலிலேதான் காணப்படுகின்றன.

சிறு உயிர்களின் உடலிலிருந்து ஒரு வகைப் பசை வெளி வந்து ஒளி தருகின்றன. சிலவகைப் பூச்சிகளில் அவைகளின் கழுத்துப்பட்டைக்கு அருகில் ஒளிவிடும் உறுப்புக்கள் இடம் பெற்றிருக்கின்றன. இவ்வுறுப்புக்கள் பொதுவாக மூச்சுச் செல்லும் காற்றுக் குழாய்களுக்கு அருகில் அமைந்திருக்கின்றன. ஏனென்றால் காற்றுக் குழாய்களி லிருந்து இவ்வுறுப்புகள் உயிரியம் பெறுவது இதனால் எளிதாகிறது. இப்பிராணிகள் சிலவற்றின் உடலிலே பூதக்கண்ணாடி போன்ற ஒருவித தசை அமைந்து, கிடைக்கும் ஒளியை அதிகப் படுத்துகிறது. சிலவகை மீன்களில் ஒளியை வேண்டிய திசையில் பிரதிபலிக்கும் சாதனங்கள் அமைந்திருக்கின்றன. வெவ்வேறு நிற ஒளியைத் தருவதற்கு இவற்றின் உறுப்புகளில் வெவ்வேறு நிறச் சவ்வுகள் அமைந்திருக்கின்றன.

பிராணி நூல் ஆராய்ச்சியாளர்கள் இவற்றின் உடலிலே காணப்படும் இரு வகைப் பொருள்களே ஒளிக்குக் காரணம் என்று கண்டு பிடித்திருக்கிறார்கள். அவை யாவன:-

(1) **லூசிபெரேஸ்:** தூண்டுகோலாக -என்சைமாகப்-பயன்படுவது. புரதப் பொருள்.

(2) **லூசிபெரின்:** மாறுபாடடையும் புரதமல்லாத பொருள்.

இவ்விரு பொருள்களும் உயிரியத்தின் முன்னிலையில் ஒளியை உண்டாக்குகின்றன. லூசிபெரின் ஆக்சி லூசிபெரினாக மாறுகிறது. ஆக்சி லூசிபெரினை அப்போது பிறக்கும் நீரகம் (Nascent Hydrogen) மூலம் மீண்டும் லூசிபெரினாக மாற்றலாம். ஆகவே இது மீண்டும் லூசிபேரெசுடன் சேர்ந்து உயிரியத்தின் முன்னிலையில் ஒளியைத் தரும். இப்படி இதைத் தொடர்ந்து நடைபெறச் செய்யலாம்.

இவ்விரு பொருள்களையும் பிரித்தெடுத்து அத்துடன் சில துளி தண்ணீரைச் சேர்ப்ப தன் மூலம் இவ்வொளி தோன்றுகிறது. ஒளிவிடும் பூரானை அடித்தால் அவை தங் களிடமுள்ள ஒளிவிடும் பொருள்களைக் கக்குகின்றன. இவற்றைச் சுரண்டி எடுத்துத் தண்ணீர்த் துளிகளுடன் சேர்ப்ப தன் மூலம் ஒளி பிறக்கச் செய்யலாம். பிராணிகளின் தசைநார், நரம்பு இவை களின்கட்டுப்பாட்டினுல்தான ஒளியேற்படு கிறது என்று அதுகாறும் நிலவி வந்த கொள்கை மேற்கூறிய பரிசோதனைகளி னுல்மாறியது ஒளிவிடுதலுக்குக் காரணம் ரசாயன மாற்றமே என்பது தெளிவாகியது.

நாற்பது மின்மினிப் பூச்சிகள் ஒரு அறையை வெளிச்சமாக்குகின்றன அவை ஏறத்தாழ ஒரு மெழுகுவத்தியின் ஒளி யைத் தருகின்றன.

சில பூச்சிகள் தங்கள் ஒளியின் மூலம் இரைகளைக் கவர்கின்றன. சில இடங் களில் எதிரிகளிடமிருந்து தங்களைக் காத் துக் கொள்ளவும், தாங்கள் செல்லும் பாதைகளில் வழி காட்டவும் பயன்படு கிறது. ஆண் பெண் உறவை விரும்பும், மின்மினிப் பூச்சிகள் ஒரு குறிப்பாக, இந்த ஒளியைப் பயன்படுத்துகின்றன.

மெக்ஸிகோ நாட்டுப் பெண்கள், மின் மினிகளை வலைகளில் கட்டித் தங்கள் கூந் தல்களில் வைத்து அலங்கரித்துக் கொள் கிருர்களாம் !

## ஒளி விடும் மனிதன் !

ஒளிவிடும் தன்மை உயிர் வாழ் இனங் கள் அனைத்திற்குமே இயல்பான ஒன்று என்று ஆராய்ச்சியாளர்கள் அபிப்பிராயப் படுகிருர்கள். ஈவான்ஸ், டபிள்யூ, காட் மன் என்பார் மனிதனின் சிறுநீரையும், ரத்தத்திலுள்ள ஹீமோகுளோபின் என் னும் பொருளையும் காரங்களின் முன்னிலை யில் (Alkaline medium) ஹைட்ரஜன் பராக்சைடு என்ற பொருளால் ரசாயன மாற்றம் நேரச் செய்து ஒளி உண்டாக் கினர். இதில் விசித்திரம் என்னவென் ருல் மேலே குறிப்பிட்டுள்ள எல்லாப் பொருள்களும் மனித உடலில் இயற்கை யிலே இருப்பதுதான். ஆனுல் சாதாரண மாக இவைகள் ஒன்று சேர்வதில்லை, அசாதாரணமாக சிலர் உடம்பு ஒளி விடுவ துண்டு !

இத்தகைய ஒளிக்கு மேற்குறிப்பிட்ட ராசாயன மாற்றம் காரணமா யிருக்கலாம் என்று விஞ்ஞானிகள் விளக்கம் தருகிருர் கள்.

சில முனிவர்களையும் தவசிகளையும் சுற்றி ஒளி வீசுவதாக - காந்தி நிறைந்திருப்ப தாகச் சொல்லப்படுகிற தல்லவா? விஞ் ஞானி அதற்குத் தரும் விளக்கம் மேற் கூறியபரிசோதனைதான்.

ஒளிவிடும் தாவரங்கள் எண்ணிக்கை யில் மிகக் குறைவே. காட்டுச்சேம்பு என் ஞெருவகைச் செடி தங்கள் இலைகளின் விளிம்புகளிலே ஒளி விடுகின்றன. ஒரு வகைப்புல் (Euphorbia phosphorea), ஒருவகை அல்லிச்செடி (Lilium bulbi ferum) ஒருவகை பப்பாளி (Papaya orientale) இவையனைத்தும் ஒளிவிடும் செடிகளே. இவைவிடும் ஒளி அவ்வளவு பிரகாசமாக இல்லை.

## ரசாயனக் குளிரொளி

ரசாயனக் குளிரொளிக்கு வருவோம். பாஸ்வரத்துண்டை, இருளிலே சுவற்றின் மீது எழுதினுல் அது எழுதிய இடங்களி லெல்லாம் மின்னுகிறது. பாஸ்வரத்தின் இந்தக் குணம், அதைக் கண்டுபிடித்த காலத்தில் உலகின் எட்டாவது அதிசய மாகக்கருதப்பட்டது. பதினெட்டாம் நூற் ருண்டில் கிராப்ட் என்பான் இந்த அதிச யத்தை எல்லா மன்னர்களிடமும் அரண் மனையிலும் காட்டி நிறையப் பரிசுகள் பெற்ருன்.

மெதுவான ரசாயன மாறுபாடு காரண மாகப் பாஸ்வரம் இருளில் ஒளிவிடும்.

பாயில் என்ற விஞ்ஞானி வேடிக்கைக் காகத் தன் வீட்டு விருந்தினர் அருகில் ஒரு பாஸ்வரத்துண்டை வைத்துவிட்டுப் படுக்கச் சென்று விட்டார். பாஸ்வரம் ஒளி விட்டு மின்னியது. அங்கே வந்த வேலைக்காரன், தலையருகில் ஏதோ எரிகிற தெனப் பயந்து விருந்தினர் தலையிலே ஒரு வாளி தண்ணீரைக் கொண்டு கொட்டி அணைத்தான் !

குளிரொளி பெறக் கீழேகாணும் சோத னையைச் செய்து பார்க்கலாம். இரு துளை யுள்ள கார்க் பொருத்தப்பட்ட கண்ணாடி சீசாவில் கொஞ்சம் கண்ணாடிப் பஞ்சை (Glasswool) போடுங்கள். பிறகு சீசா வைக் கரிஇருதீயதை (Corbondioxide) வாயுவால் நிரப்பிக் கொள்ளுங்கள். இப் பொழுது மஞ்சள் பாஸ்வரத்தைப் பட் டாணி யளவு சிறுதுண்டுகளாக நறுக்கி உள்ளே போடுங்கள். ஒரு துளை வழியாக கரிஇருதீயதை வாயுவைப் பாய்ச்சுங்கள். திறந்திருக்கும் மறு துளையிலே நீலநிறச் சுடர்-குளிர்ந்த ஒளி தெரியும். இந்த ஒளி யில் தீக்குச்சியைக் கொண்டு சென்றால் அது தீப் பிடிப்பதில்லை. [பாஸ்வரம் எளி தில் தீப்பிடிக்கக்கூடியது. கவனத்துடன் கையாளவும். இச்சோதனை துவங்க சூடான நீர்த்தொட்டியில் (Hot water bath) ஒளி - தென்படும் வரை அமிழ்த்தி வைத்திருக்க வேண்டும். ஒளிச்சுடர் தெரிய ஆரம்பித்தவுடன் நீர்த்தொட்டியை அகற்றிவிட வேண்டும்.

இது சாதாரணமாகக் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் செய்து பார்க்கக்கூடிய பரிசோதனைதான்.

பாஸ்வர ஒளி பாஸ்வரம் எரிவதனால் ஏற்படுவ தல்ல. பாஸ்வரம் மெதுவாக ரசாயன மாறுபாட்டுக்குட்படும்போது இவ் வொளி உண்டாகிறது. இதன் நீலநிற ஒளியை நல்ல இருளில்தான் தெளிவாகப் பார்க்க முடியும்.

பினைல் மக்னீசியம் புரோமைடு (Phenyl magnesium bromide) என்னும் பொருள் இருளிலே ஒளி விடுகிறது. இதனுடன் ஏதாவது ஒரு நைட்ரோ கூட்டுப் பொருள் (Nitro compound) சேரும்போதும் ஒளி உண்டாகிறது.

சிறந்த ஒளிவிடும் அருமையான பரி சோதனை 'லூமினல்' கொண்டு செய்யும் சோதனைதான். இதற்குத் தேவைப்படும் பொருள்கள்:-

(1) லூமினல் எனப்படும் 3-அமினோ தால் ஹைட்ரசைடு 'Luminol' [0·1 கிராம்] (3-Aminothal hydrazide)

(2) ஒரு ஆக்சிகரணப் பொருள். (3% ஹைட்ரஜன் பராக்சைடு [10· c. c.]

(3) மற்றோர் ஆக்சிகரணப் பொருள் (பொட்டாசியம் பெர்ரிசையனைடு) [0·25 கிராம் Potassium ferricyanide)

(4) காரம் (Alkali) (ஆக்சிகரணத்தை விரைவு படுத்த) [10·c. c.-5% காரம்]

(5) தண்ணீர்.

இவைகளைக் குறிப்பிட்ட அளவில் கலப் பதன் மூலம் நீலநிற ஒளி தோன்றுகிறது இதன் ஒளி மிகுந்த பிரகாசம் கொண்ட தாய் இருக்கிறது. இதன் ஒளி சுமார் 7 மணி நேரம் நீடித்திருக்கிறது. இது மிகவும் கவர்ச்சிகரமான பரிசோதனை யாகும்.*

எங்கும் எல்லோராலும் செய்து பார்க்கக் கூடிய ஒரு எளிய பரிசோதனையுடன் இக் கட்டுரையை முடிக்கிறேன்.

---

* Journal of Chemical Education -Vol. 21- Page 142.

(1) 5% பைரோகாலிக் அமிலம். நீரில் கரைக்கப்பட்டது. (Pyrogallic acid)

(2) பார்மலின் (Formalin)

(3) 10% சோடியம் கார்பனேட் கரைசல்.

(4) 4% ஹைட்ரஜன் பராக்சைடு.

எல்லாவற்றிலும் 20 c. c. எடுத்துக் கொள்ளுங்கள். பார்மலினுடன் பைரோ கலாலிக் அமிலக் கரைசலைச் சேருங்கள். இதைச் சோடியம் கார்பனேட்டுடன் கல வுங்கள். அறையை இருட்டாக்கிய பிறகு இருளைப் புரிந்துகொள்ள கண்களுக்குச் சில விநாடி அவகாசம் தந்துவிட்டு, இந்தக் கரைசலை அப்படியே ஹைட்ரஜன் பராக் சைடுடன் சேருங்கள்.

[ குறிப்பிட்ட முறையில் ஒன்றுடன் ஒன்றைச் சேர்க்கவும் ]

அழகிய ஆரஞ்சுநிற ஒளி தோன்றுகிறது.

## முடிவுரை

சோதனை நிலையி லிருக்கும் இக்குளி ரொளிக்கு ஒளிமிகுந்த எதிர்கால மிருக் கிறது. எதிர்காலத்தில் இது நமது வீடு களை அலங்கரிக்கலாம். வீதிகளை அழகு படுத்தலாம். தீங்கு செய்யாத இவ்வொளி விடும் பொருள்களைப் பூவாகவும் சித்திரங் களாகவும் கொண்ட சட்டைகளையும் புட வைகளையும் மக்கள் இரவிலணிந்து ஆனந் திக்கலாம்.

*'' தீக்குள் விரலைவைத்தால்*<br>*-நந்தலாலா—நின்னைத்*<br>*தீண்டுமின்பம் தோன்றுதடா*<br>*—நந்தலாலா ''*

என்று பாரதியார் '*தீக்குள்விரலை*' வைக் கும் கனவைப் பாடினார். பாரதியார் கற் பனை உலகில் நின்று பாடினார். விஞ்ஞானி கவிஞனின் கற்பனையை மாத்திரமல்ல; உழவனின் நடைமுறை அனுபவத்தையும், செயல் திறமையையும் பெற்றவன்.

அதனால்தான் அவன் குளிரொளியைச் சாத்தியமாக்கி யிருக்கிறான்.

---

***ஒருவன் ஒருமுறை பாவம் செய்து விட்டால் மீண்டும் மீண்டும் அப்பா வத்தைச் செய்யக்கூடாது. தன் இத யத்தில் அப்பாவத்தை நினைக்கவே கூடாது. தீயொழுக்கத்தின் பெருக் கம் துன்பத்தையே தரும்.***

** ** **

***கையில் காயம் இல்லாதவன் நஞ் சைத் தீண்டலாம். காயம் இல்லாத வனை நஞ்சு ஒன்றும் செய்வதில்லை. அப்படியே தீமை செய்யாதவனுக் குத் தீமை நேர்வதில்லை.***

** ** **

***நன்றாகக் கட்டப்பட்ட வீட்டில் மழைநீர் நுழைவதில்லை. நற்சிந் தனை படைத்தவன் உள்ளத்தில் ஆசை நுழைவதில்லை.***

** ** **

***ஆசையிலிருந்து துன்பம் தோன்று கின்றது; ஆசையிலிருந்து அச்சம் தோன்றுகின்றது. ஆசையிலிருந்து விடுபட்டவனுக்குத் துன்பம் இல்லை; அச்சம் மட்டும் எப்படி இருக்கும்?***

** ** **

***குணம் சிறிதும் இல்லாமல குற் றங்களே நிறைந்தவனும், குற்றம் சிறிதும் இல்லாமல் குணங்களே நிறைந்தவனும் வாழ்ந்ததில்லை; வாழவில்லை; வாழவும் முடியாது.***

** ** **

***உலகத்தில் ஆசையைப் போன்ற நெருப்பில்லை; வெறுப்பைப் போன்ற பகை இல்லை; மயக்கம் போன்ற வலை இல்லை; காமத்தைப் போன்ற புயல் இல்லை.***

** ** **

***பொறாமை, பேராசை, குற்றம் உடைய எவரும் முக அழகாலோ, இனிய பேச்சாலோ நல்லவனாய்விட முடியாது.***

—புத்தர்.

# புத்தர் பிறந்தார்

'சிந்தனை'

*[உலகத்தில் தோன்றும் பெரியோர்களைப் பற்றிக் கற்பனைக் கதைகள் எழுவது இயல்பு. அப் பெரியார்களின் கொள்கைகளைப் பின்பற்றுவோர், அப் பெரியார்களிடத்திலுள்ள ஈடுபாட்டினால் அவர்கள் பிறப்பிற்கும் ஒரு புதுமையைக் கற்பிக்கின்றனர். புத்தர்மகானைப் பின்பற்றிய மக்களும் அம் மகானின் பிறப்பினைக் கற்பனைசெய்தும், சிற்ப ஓவியங்களைச் செதுக்கியும் தீட்டியும் உள்ளனர். அவ்வோவியங்களும் சிற்பங்களும் கூறுங் கதையைத் தழுவியதே இக்கட்டுரை.]*

இளவேனிற் காலம் (வசந்தம்) எல்லோர் உள்ளத்தும் ஓர் ஈடு இணையற்ற இன்பத்தை அளிக்க வல்லது. இளவேனிலை 'இளவரசன்' என்று கவிகள் கற்பனை செய்கின்றனர். இளவரசன் என்றால் (முன்பெலாம்) அவனுக்குள்ள சூழ்நிலை, அவன் செல்வ நிலை, தகுதி, எதிர்காலம் இவ்வளவும் நம் கண்முன் காட்சி யளிக்கும். அவன் இன்பப் பொழுது போக்கு ஒரு தனிச் சிறப்புடையது. அவன் தான் விரும்பிய வாறு இன்பம் அனுபவிப்பவன்; துன்பமென்பது துளியுங் காணா நிலையினன். அவன், தான் விரும்பிய இன்பத்தை எளிதில் பெறுதல் போன்று, மக்கள் விரும்பிய இன்பத்தை எளிதில் தரவல்லது இளவேனில். மக்களை இளவரசர்களாக்கும் ஆற்றல் பெற்றிருப்பதால் இளவேனிலை 'இளவரசன்'என்று கற்பனை செய்கின்றனர் கவிஞர்கள்.

மக்கள், சிறப்பாக உழவர்கள், ஆண்டு முழுதும் உழைத்து, உழைப்பின் பயனை அறுவடை செய்து, சேமித்து வைத்து, ஓய்வு பெற்று இன்பமாகப் பொழுது போக்க விரும்பும் காலமும் இன்னிளவேனில் வருங்காலமும் ஒன்றாக இருக்கும். ஓய்வு பெறும் மக்கள் இன்பம் பெறுதற்குரிய எல்லா வகையான சூழ்நிலையையும் அமைத்துத்தர வல்லது இளவேனில். அதிக வெப்பமும், அதிகக் குளிரும் இல்லாத காலம்; மரங்களும் செடிகளும் செழித்துத் தழைத்து, மணந்து மணம் வீசும் காலம், சோலைகள், கற்பகச் சோலைகளாகக் காட்சியளிக்குங் காலம், மலைய மாருதங் கொணருங் காலம்.

அக்காலத்து அரண்மனைச் சோலையென்றால் அதற்குமேல் கற்பனையும் வேண்டுவதில்லை. அச் சோலையை இளவேனிலின் இன்பப் பெட்டகம் எனலாம். அப்பெட்டகத்தின் ஒரு புறம், கருத்தொருமித்த காதலர்கள் ஒருவரை ஒருவர் அணைத்த வண்ணம் எதையோ கண்கொட்டாது பார்த்து நிற்கின்றனர். அவர்களின் அழகைக் சுருக்கமாகக் கூற விரும்பினால், காமனும் தேவியும் (மன்மதன் ரதி) என்று கற்பனை செய்யலாம். அவர்கள் கபிலவஸ்துவைத் தலைநகரமாகக் கொண்ட ஒரு பரந்த நாட்டை ஆளும் உரிமை பெற்றோர்; அரசர் சுத்தோதனர், அரசி மாயாதேவி.

* * *

இளவேனில் இன்பக் காட்சியைக் கண்டு மீண்ட அன்றிரவு அரசி ஓர் கனவு கண்டாள். ஆறு தந்தங்களுடைய ஒரு வெள்ளையானை அவள் படுக்கை அறையை

அணுகியது; சிறிது நாழிகைக்குள் வலது புறமாக அவள் வயிற்றில் நுழைந்தது. யானையைக் கனவில் கண்டதாலோ அது வயிற்றில் நுழைந்ததாலோ அரசி அஞ்ச வில்லை. யானையைக் கண்டு வியந்தாள்; யானை தன் வயிற்றில் மறைந்ததும் என் றும் அறியாத பேரின்பங்கண்டாள்; அவ் வின்பம் எத்தகைய தென்று கூறவும் அறி யாது நின்றாள்.

கண்விழித்தாள், கணவன் கட்டிலில் இருப்பதைக் கண்டாள்; சிறிது முன் கண் டது கனவென்பதை உணர்ந்தாள். கண வனை எழுப்பிக் கனவினைக் கூறினாள்; கனவின் விளைவறிய விழைந்தாள்.



பொழுது புலர்ந்தது; புரோகிதர்கள் அழைக் கப் பட்டனர். அமைச் சருடன் கனவு நூல் வல்ல புரோகிதர்கள் அரண்மனை அணுகினர்; அரசனைக் கண்டு வாழ்த் துக் கூறி அமர்ந்தனர். தேவிகண்ட கனவு புரோ கிதர்களுக்குத் தெளி வுறுத்தப் பட்டது; ஆராய்ந்து விளைவு கூறினர்.

'வெள்ளை யானையைக் கனவில் கண் டதே ஒரு நற்சகுனம். அவ்யானை தேவி யின் வயிற்றில் புகுந்தது, ஒரு தேவமகன் தேவியின் கருவில் வளர்வதைக் குறிப்ப தாகும். தேவி அடைந்த பேரின்பம், உல கப் புகழ் பெறும் அத்தெய்வக் குழவியால் உலகமக்கள் அடையப் போகும் நிலை பேறான இன்பத்தை எடுத்துக் காட்டுவ தாகும். தேவி வயிற்றிலுள்ள குழந்தை 'துசித' என்னும் விண்ணுலகில் (Tusita Heaven) உள்ள 'பிரபபால போதிசத்வ மகாசத்வா' (Prabhapala Bodhisattva Mahasatwa) எனும் தேவனாகும்,' என்று கூறினர்.

கனவின் பயன் கேட்ட அரசியும் அரச னும் அடைந்த ஆனந்தத்திற்கு ஓர் அள வில்லை; உள்ளங் குளிர்ந்து உடல் பொடித் தனர்; பெற்ற பெருமை பேசவும் ஒண்ணா தது. அவையில் உள்ளோர்க்கும், பொது மக்கட்கும் இனிப்புப் பண்டங்களும், இன் சுவைக்கனிகளும், தேனீர் வகைகளும் வழங்கி, அவர்கள் அடைந்த இன்பத்தில் எல்லோரையும் பங்கு பெறச் செய்தனர்.

அரசி அன்று தனி அழகுடன் விளங்கி னாள். அன்று மாலை, குளிர் நீராடி, கூந் தலைப் பின்னிவிட்டு, இளவேனில் மாலைக் கேற்ற துகில் உடுத்து, தோழிகளுடன் தன் காவ லன் அமர்ந்திருந்த இசையரங்கை நோக்கி நடந்தாள்.

அவள் நடை அன்ன நடையைப் பின்னிடச் செய்தது; அவள் சாயல் மயிலை நாணச் செய்தது; அவள் இடை மின்னலை எதிரொலித்தது; அவள் நோக்கு மானினை மருளச் செய்தது; அவள் மேனி மாந்தளிரைப் பழித்தது.

அரசன் அருகமர்ந்தாள்; இசையரங்கு அமைதி பெற்றது. அரசி கொஞ்சும் மொழியில் அரசனிடம் கெஞ்சினாள்.

'அரசே, இன்றிலிருந்து தன்னடக்க ஒழுக்கத்திற்குரிய எண்வகைக் கொள்கை களைக் கடைப்பிடிக்க அவாவுகின்றேன். தங்கள் அனுமதியே என் கொள்கைக்கு வெற்றி யளிப்பது. உயிர்களைக் கொல் லாமை, ஊற்றின்பம் கொள்ளாமை, பொய் யாமை, புறங்கூறாமை, வெஃகாமை, சின வாமை, வஞ்சியாமை, வீண் ஐயங்கொள்

“அறியாமை இருட்டிலே மூழ்கி ஆயிரம் ஆண்டுகள் வாழ்பவனைவிட, அறிவுள்ள மனிதனுக ஒருநாள் வாழ்பவனே மேலானவன்” —புத்தர்.

ளாமை ஆகிய விரதங்களே என் கொள்கைகள். இக்கொள்கைகளே எல்லா உயிரிடத்தும் செலுத்த வேண்டிய அன்புள்ளத்தை அளிக்க வல்லவை!

‘தேவி, நீ தேவனைப் பெறும் கன்னித் தெய்வம்; ஆகையால் இனி, நீ என் தாய், தங்கை, தவமுதாட்டி! உன் விருப்பமே என் விருப்பம்’ என்ருன் அரசன்.

இளவேனில் முடிவுறும் காலம் குறுகியது. தேவியின் பேறுகாலமும் அணுகியது. அணுகிய தறிந்த தந்தை, தன் மகள் தேவமகனைப் பெற்றதும் இறந்து விடுவாளோ என்ற ஐயங் கொண்டான், அன்பு மிகுதியால். மகளைத் தன்னிருப்பிடம் அழைக்க விழைந்தான். தன் மகளின் இன்பப் பொழுது போக்கிற்கேற்ற *லும்பினிசோலையை(Lumbini gardens) அழகு படுத்தினன். பின் அரசனிடம் தன் எண்ணத்தை வெளியிட்டான். அரசனும் இசைந்தான்.

கபில வஸ்துவிலிருந்து மாயா தேவி செல்ல வேண்டிய சாலை நெடுக செப்பனிடப்பட்டது. விருதுகள் முன் செல்ல தாதியர், விறலியர் சூழ வெள்ளானை மீதமர்ந்து, படைகள் காவல் புரிய தேவி பிறந்தகம் அடைந்தாள்.

தாயகம் புகுந்த தேவி மறுநாளே லும்பினி சோலைக்குச் சேடியர் சூழ உலாவச் சென்ருள். அவள் உள்ளத்தைக் கவரும் சாலா (Sala) எனும் மரங்களும் அச்சோலையில் வளர்ந்திருந்தன. அம்மரங்கள் அடிமுதல் முடிவரை ஒரே ஒழுங்காக இருக்கும்; கிளைகளும் அவ்வாறே; இலைகள் மயிலின் தலை போன்று ஒளியும் மென்மையும் பெற்று விளங்கும்; மலர்கள் எங்கும் கணடிராத மணம் வீசி மலர்ந்திருக்கும்.

அம்மரத்தைக் கண்டதும், தேவி அதன் நிழலில் சுற்றிச் சுற்றி வந்தாள். அவளிடம் அன்புகொண்ட மரக்கிளைகள் வளைந்து கொடுத்தன. மாயா, கிளைகளைப் பற்றியவாறு ஆகாயத்தைச் சுற்றிப் பார்த்து நின்ருள். நின்ற நிலையிலே வலப்புறமாக வயிற்றைக் கிழித்துக் கொண்டு மகன் வெளிப்பட்டான். ஆனுல் கிழிந்த வயிற்றில் வடுவும் காணப்படவில்லை.

குழந்தை சொக்கத் தங்கமென ஒளிர்ந்தது. தேவர்கள் மலர் மழை பொழிந்தனர்; வானில் இன்னியம் இயங்கின. தேவர்கள் குழந்தைக்குப் பொன்னுடை போர்த்தனர். குழந்தையைக் கையில எடுத்து அணைத்த வண்ணம், மாயா தேவியைப் பார்த்து, ‘தேவி, உனக்கு இன்பம் பெருகுவதாக! தேவனைப் பெற்றதற்காக நீ பெரு மகிழ் கொள்க!’ என்று வாழ்த்தி மறைந்தனர்.

உடனே குழந்தை எழுந்து நின்று, ‘இனி எனக்குப் பிறவி இல்லையே! யான் புத்த நிலையை அடையலாமோ!’ என்று சொல்லி ஏழடி தூரம் நடந்தது. நடந்த இடம் எல்லாம் தாமரை மலர்கள் பூத்தன. இறுதியாகக் கிழக்கு நோக்கிக் கீழ்வானத்தைப் பார்த்து, ‘இவ்வுலகில் பிறப்பு இறப்பிற்குக் காரணமான தீச் செயல்களையும், அவைகளால் விளையும் துன்பங்களையும் அடியோடு அழிப்பேன்’ என்று கூறி மானிடக் குழந்தையாக மாறிற்று.

இளவேனிற் காலத்து இறுதியில் தோன்றி, இளவேனில் போன்று நிலையற்ற இன்பத்தை அளிக்காது, நிலைத்த இன்பத்தைத் தந்து என்றும் உள இளவேனில் ஆயினுர் புத்தமகான். ○

* சில வரலாற்று ஆசிரியர்கள் லும்பினி கிராமம் என்று கருதுகின்றனர்.

# பறவை இனத்தில் பரதவர்கள்!

திரு. K. S. மகாதேவன், M. A., B. Sc.

✷

மீன் உண்பவர்கள் பலர் இருக்கலாம்; ஆனால் மீன் பிடிப்பவர்கள் சிலரே இருக்கின்றனர். அதே போல், பறவைகளெல்லாம் பெரும்பாலும் மீன் உண்ணும்; இருந்தாலும் நீர் நிலைக்குச் சென்று நேரடியாக மீன் பிடிக்கும் ஆற்றல் சில பறவைகளுக்கே உள்ளது! ஆனால் அவை அதற்குக் கையாளும் வகைவகையான முறைகளோ, நம்மை எல்லையில்லா வியப்பில் ஆழ்த்துகின்றன!

## அகப்பட்டதைச் சுருட்டல்

"அகப்பட்டதைச் சுருட்டு" என்பது ஒரு பழமொழி! முயற்சியில் ஈடுபடத் தெரியாத சில சோம்பேறிப் பறவைகள் இந்த முறையில் கிடைத்த மீன்களை வயிறு புடைக்கத் தின்று வாழ்ந்துகொண்டிருக்கின்றன. நீரைப் பிரிந்த மீன் (Fish out of water) என்று நாம் அடிக்கடி பேசுகின்றோம். ஆனால், சில சமயங்களில் மீன்கள் ஏனோ தாமாகவே நீரைவிட்டுவெளியே பாய்கின்றன! நீரோட்டத்தை எதிர்த்துச் செல்லும் மீன்கள் அவற்றின் வழியில் சிறு தடைகள் இருந்தாலும் 'குபீர்' என்று நீர் மட்டத்திற்கு மேல் பாய்ந்து தடைகளைத் தாண்டிச் செல்லல் இயல்பு. அப்படித் தாண்டும்போது சில சமயங்களில் மீண்டும் நீரில் விழுவதற்கு மாறாக அருகில் உள்ள தரைப்பகுதியில் விழுந்து உயிருக்குத் திண்டாடும் நிலை ஏற்படுகின்றது! இதை எதிர்பார்த்தபடி கரையில் அமர்ந்திருக்கும் பறவைகள் அவற்றை எளிதில் பிடித்துத் தின்றுவிடுகின்றன!

## திடீர்த் தாக்குதல்

சில பறவைகள் மீன்களைப் பிடிப்பதற்கு முன் அறிவிப்பின்றிப் பாய்ந்து பிடிக்கின்ற "திடீர்த் தாக்குதல்" முறையைக் கையாளுகின்றன! ஆனால் இந்த முறையை எல்லாப் பறவைகளும் கையாண்டுவிட முடியாது! கூர்மையான கண்களும், இடுக்கி போன்ற அலகும், கண் மூடித்திறப்பதற்குள் பாய்ந்து மீளும் தனியாற்றலும் உள்ள பறவைகளால்தான் இம்முறையைப் பின்பற்ற முடியும்: மீன் கொத்தி (King fisher) போன்ற பறவைகள் இத்தகைய திடீர்த் தாக்குதலை ஆகாயத்திலிருந்தபடியே நடத்துகின்றன! இப்பறவைகள் நீர்நிலைக்கு நேர் மேலாகச் சிறகடித்தபடி நிற்கும்; ஆனால் கண்களோ, நீரின் ஆழத்தினுள் நடமாடும் மீன்களினிடத்து ஊடுருவிச் சென்று பொருந்தியிருக்கும்! மீன்கள் நீர்மட்டத்திற்கு அருகில் வரும்போதே இப்பறவைகள் இறகுகளைக் குவித்துக்கொண்டு நீரினுள் வீழ்ந்து அவற்றைத் தப்பாமல் அலகினால் இடுக்கிக்கொண்டு போய்விடும்; அருகில் உள்ள மரக்கிளைகளில் அமர்ந்தபடி பின்னர் அவை தமது 'சாப்பாட்டை'த் தொடங்கும்.

இதே திடீர்த்தாக்குதல் முறையினை முற்றிலும் மாறுபட்ட சூழ்நிலையில் கொக்கு, நாரை போன்ற உருவத்தில் பெரிய பறவைகள் கையாளுகின்றன. நீர் நிலைகளின் கரைகளிலும், ஆழமற்ற நீரிலும் இவை அசையாமல் அப்படியே நின்று விடுகின்றன. ஆனால் மீன்கள் இவற்றைக் கண்டு

ஐயுறக்கூடா தல்லவா? அதற்காக இவை கள் அசையாத ஓவியங்களாக மாறிச் சூழ்நிலையோடு சூழ்நிலையாக ஒன்றிவிடுகின்றன! நீரிலே இயல்பாக எழுந்து பரவும் அலைகள்கூட அவற்றின்மீது பட்டு ஒலி எழுப்புதல் கூடாது என்று கருதி இப்பறவைகள் ஒரே காலில் நின்று கொண்டு மறுகாலை நீர்மட்டத்திற்கு மேல் உயர்த்திக் கொள்கின்றன! இப்படிப்பட்ட அமைதியான சூழ்நிலையை நம்பிவரும் மீன்களை அவற்றின் நீண்ட அலகால் திடீர் என்று கொத்திப் பிடித்துவிடுகின்றன. கூம்பியிருந்து கொத்தும் இந்தக் கொக்குகள் கையாளும் முறை, வள்ளுவரின் உள்ளத்தை எவ்வளவு தொலைவிற்குக் கவர்ந்துள்ளது என்பதற்கு, அவர் கூறும்,

*" கொக்கொக்க கூம்பும்*
*பருவத்து மற்றதன்*
*குத்தொக்க சீர்த்த*
*இடத்து "*

என்ற குறளே சான்றாகும்!

## வளைத்துப் பிடித்தல்

நீர் வாத்துக்களும், காட்டு அன்னங்கள் போன்ற கூட்டமாக வாழும் சில பறவைகளும், வியக்கத்தக்கதொரு முறையினைக் கையாளுகின்றன. இவை பெரும்பாலும் முப்பதிற்குக் குறையாமல் சேர்ந்து கொண்டு நீர் நிலையின் ஒரு கரையிலிருந்து இறங்கி எதிர்கரையை நோக்கி ஆரவாரம் செய்துகொண்டே நீந்திச் செல்லுகின்றன. எதிர் கரையை நெருங்க நெருங்க, அவைகள் செல்லும் வரிசையை ஒரு பிறை உருவத்தில் அமைத்துக் கொள்ளுகின்றன! எனவே வளைந்த பிறை வரிசையின் இரு கோடியிலும் உள்ள பறவைகள் முதலில் எதிர்கரையைச் சென்று தொடுகின்றன. இதனால் விரட்டிக்கொண்டு வரப்பட்ட மீன்களெல்லாம் ஒன்றாகத் திரண்டு எதிர் கரைக்கும், பறவைகளின் பிறை வளைவிற்கும் இடையில் அகப்பட்டுக்கொள்கின்றன! அப்படியும் இப்படியுமாகப் பாய்ந்து தப்பி ஓட முயலும் மீன்களையெல்லாம் நெருங்கி வரிசையாக வளைந்து நிற்கும் பறவைகள் எளிதில் பிடித்துத் தின்று தீர்க்கின்றன!

## தேடிப் பிடித்தல்

மேலும் சில பறவைகள் நீர்நிலையுள் இருக்கும் மீன்களைத் தேடித் தேடிக் கண்டு பிடிக்கின்றன! இயல்பாக ஆழமற்ற குளம் குட்டைகளில் வாழும் மீன்கள் நீருள் வளரும் செடி கொடிகளுக்கு அடியில் தங்கி இருக்கும். ஓசை படாது நடந்து செல்லும் இத்தகைய பறவைகள் தம் நீண்ட அலகை அச்செடி கொடிகளுக்கு அடியில் கொண்டுபோய்த் துழாவி அங்கிருக்கும் மீன்களைப் பிடித்துவிடுகின்றன!

## கலக்கிப் பிடித்தல்

" கலங்கிய நீரில் மீன்பிடித்தல் எளிது " (Fishing in troubled waters) என்ற பழமொழியை நாம் அடிக்கடி பயன்படுத்து கின்றோம்! ஆனால் நம்மைவிட இந்த உண்மையைப் பறவைகள் நன்கு அறிந்து இருப்பதுதான் நமக்குப் பெரும் வியப்பாக உள்ளது! கோடைகாலம் தொடங்கியதும் நம் நாட்டுக் குளம் குட்டைகளில் பெரும்பாலும் நீர் வற்றத் தொடங்கிவிடுகின்றது. அப்பொழுதுதான் மீன் பிடிக்கும் நீர்ப்பறவைகளுக்கு மிகவும் கொண்டாட்டம்! கொக்குகளும் நாரைகளும் ஆழமற்ற நீர் நிலைகளில் குறுக்கும் நெடுக்குமாக விரைந்து நடந்து கொண்டிருப்பதை அவ்வழிச் செல்லும் நாம் அடிக்கடி காண்கின்றோம்; ஆனால் அதன் அடிப்படை உண்மையை ஆராய்ந்து பார்க்க நமக்குக் காலமோ, ஆர்வமோ இருப்பதில்லை! பொதுவாகத் தெளிவான நீரில்தான் மீன்களால் நன்றாக மூச்சுவிட முடியும். நீர் கலங்கிக் குழம்பிவிட்டால் அவை மூச்சுத் திணறி மேலே வரத் தொடங்குகின்றன. இவ்வுண்மையை

உணர்ந்த பறவைகள் கூட்டம்கூட்டமாகச் சென்று குளம் குட்டைகளில் இறங்கி அங்கும் இங்குமாக நடந்து சேற்றைக் கிளறி நீரைக் குழப்புகின்றன. பத்துப் பதினைந்து நிமிடங்களுக்குள் நூற்றுக் கணக்கான மீன்களும், நீர்ப்பாம்புகளும், தவளைகளும் நீர் மட்டத்திற்கு மேல் வந்து சேருகின்றன. தங்கள் உழைப்பின் விளைவைக் கண் எதிரில் கண்ட பறவைகள் அவற்றையெல்லாம் ஆர்வத்துடன் பிடித்து விழுங்குகின்றன !

## பறவையும் பரதவரும்

பறவைகள் மீன் பிடிப்பதற் கென்று கையாளும் முறைகளும், பரதவர்கள் பின் பற்றும் முறைகளும் பலவகையில் ஒத்திருப்பது மிகவும் வியப்பாக உள்ளது. பரதவர்கள் ஆழமற்ற நீர்நிலையில் ஓடும் மீன்களைச் சுருள் வாளியினால் வெட்டித் '' திடீர்த் தாக்குதல் '' புரிகின்றனர்; ஓடுகின்ற நீரின் குறுக்கே தடைகளை வைத்து மீன்களைத் தத்திவிழும்படி செய்து '' அகப்பட்டதைச் சுருட்டுகின்றனர்; '' வலை போட்டு இழுத்து மீன்களை '' வளைத்துப் பிடிக்கின்றனர்; '' நீரின் அடிப்பரப்பிலே அமைதியாக இருக்கும் மீன்களைக் கைகளால் துழாவித் '' தேடிப்பிடிக்கின்றனர். '' குட்டைகளையும் குளங்களையும் கைகளாலும், கழிகளாலும் அடித்துக் '' கலக்கி '' மேலே ஓடிவரும் மீன்களைப் பிடித்துப் போட்டுக் கொள்கின்றனர். இவற்றையெல்லாம் பார்க்கும்போது நமக்கு ஓர் ஐயம் ஏற்படுகிறது. இந்த முறைகளை மனிதனிடமிருந்து பறவைகள் கற்றுக் கொண்டனவா ? அல்லது, பறவைகளிடமிருந்து மனிதன் கற்றுக்கொண்டானா ? விடை காண மிகத் தொலைவு செல்ல வேண்டிய தில்லை. பறவைகளிடமிருந்து தான் மனிதன் கற்றுக்கொண்டிருக்க வேண்டும்; ஏனென்றால், மனித இனம் இம்மண்ணுலகில் தோன்றுவதற்குப் பல நூறாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தே கொக்குகளும், நாரைகளும் இவ்வுலகில் வாழ்ந்துகொண்டு வருகின்றன !

---


*தமிழகத்தின் அறிவுப்பணி முன்னணியில் முன்னிற்பது*

# கலைக்கதிர்

※

**ஆண்டுச் சந்தா ரூ. 5-0-0**

(அரையாண்டுச் சந்தா ஏற்பதில்லை)

*விவரங்கட்கு:*

கலைக்கதிர் — பீளமேடு — கோவை.

# இடை வழி

திரு. B. சிரசிவாஸிதெரோ, பி. ஏ.

தமிழாக்கம்:
திரு. ம. ரா. செயா பூபதி, M. A.

புத்த சமயத்தின் தலை சிறந்த, இன்றியமையாத கூறு இடை வழி (Middle path). இடை வழி என்பது ஒன்றுக்கொன்று எதிரிடையான இரு எல்லைகளுக்கு இடைப்பட்ட வழி. உண்மையைக் காண நீண்ட காலம் அலைந்த பிறகு, புத்தர் இந்த வழியைக் கண்டு பிடித்தார். உடலுக்கு மகிழ்ச்சியூட்டும் இன்ப நிலை, உடலை வாட்டி வருத்தும் துறவு நிலை ஆகிய இரு வேறு எல்லைகளிலும் புத்தர் அனுபவம் பெற்றவர். இந்த அனுபவத்தின் பயனாக, இறுதியில், அவர் எண் வகைப் பாதையைக் கண்டு பிடித்தார்,

இந்த எண் வகைப் பாதையை வாழ்க்கையின் ஒரே வழி அல்லது தலை சிறந்த வழி என்று புத்தர் கருதினார். உலகில் வாழும் எண்ணற்ற சிந்தனையாளர்களும் இவ் வெண் வகைப் பாதையே வாழ்க்கைக்கு ஏற்ற சிறந்த வழி என்றும், ஆடவர் பெண்டிர் அனைவரையும் நல்வழியில் செலுத்துவதற்கேற்ற ஒழுக்க விதி என்றும் போற்றுகின்றனர்.

ஒருவன் இந்த எண் வகைப் பாதையில் வாழ்க்கை நடத்தினால், அவன் அறிவு நேரிதாகத் திகழும்; அவன் எணணங்கள் செம்மையாக ஒளிரும்; அவன் செயல்கள் நல்லனவாக அமையும்; அவன் வாழ்க்கை எடுத்துக் காட்டாக இலங்கும்; அவன் முயற்சி வெற்றி யளிப்பனவாய் விளங்கும்; அவன் கவலை நேரிதாக இருக்கும்; அவன் மன ஒருமையும் செம்மையாகத் திகழும்.

மேற் கூறியவை அனைத்தும் ஒழுக்கம், மன ஒருமை, அறிவு என்ற மூன்று நிலைகளுக்குள் அடங்கும். இம்மூன்று நிலைகளிலும் ஒருவன் கடந்து செல்லும்போது, அவன் தீமையிலிருந்து விடுதலை பெறுகிறான்; நல்லனவற்றையே செய்கிறான்; தன் இதயத்தைத் தூய்மையாக்கிக் கொள்கிறான். இதன் பின், அவன் சிறந்த மனிதருள் ஒருவனாகக் கருதப்படுகிறான். ஆற்றல்களின் சமனை (Equillibrium of Forces) அவனிடம் காணலாம்.

இயற்கையின் இரகசியங்களைப் பிரித்து ஆராயும் போது, சமன் (Equibalance) இல்லாமல், மனித வாழ்க்கையே நடைபெற இயலாது என்பது புலனாகின்றது. விஞ்ஞான முறையில் கூற வேண்டும் என்றால் இயற்கையின் செய்முறை அனைத்துமே ஆக்கக் கூறுகளும் எதிர் மறைக் கூறுகளும் கொண்டு விளங்குகின்றது. இக்கூறுகள் தம் இயல்புக் கேற்ப ஆக்கத்தையோ, அழிவையோ விளைவிக்கின்றன. இக்கூறுகளுக்கு இடையே நிலவும் சமனிலையே (Balance) இயற்கையின் ஒழுங்கு (Regulation of nature) என்று கூறப்படுகின்றது. இதையும் ஒரு வகை இடை வழி (Middle path) யாகவே கருத வேண்டும்.

இயற்கையின் இந்த முரண்பாட்டுக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக இலங்குபவன் மனிதன். தன் இயல்புக் கேற்ற ஆற்றல்களை அவன் எவ்வளவு அழகாக ஏற்றுக்


"அரசர் தாமே அருளறம் பூண்டால்- பொருளும் உண்டோ பிறபுரை தீர்த்தற்கு- அறமெனப் படுவது யாதெனக் கேட்பின்-மறவாது இதுகேள் மன்னுயிர்க் கெல்லாம்-உண்டியும் உடையும் உறையுளும் அல்லது கண்டது. இல்"

— மணிமேகலை.

கொண்டு, தன் இயல்புக்கு எதிரிடையான ஆற்றல்களை எப்படி எதிர்க்கிறான் என்பதை நோக்குங்கள். அவனிடம் குடிகொண்டுள்ள ஆற்றல் வாய்ந்த ஆவல்கள் அல்லது உணர்ச்சிகள் அடிக்கடி போராட்டத்தில் ஈடுபடுமாறு அவனை உந்துகின்றன: அவனுக்கு வலியூட்டுகின்றன; அவனைத் துரத்துகின்றன. மனிதனுடைய உட்புறம் இவ்விதம் உள்ளது. இதனால் சினம், பொறாமை, அதிருப்தி முதலிய பண்புகள் அவனுக்குள்ளே போராட்டத்தை விளைவிக்கின்றன. இவையே வெளிப்புறத்தில் பகைமைகளையும், அழிவுமிக்க போர்களையும் உண்டாக்குகின்றன.

இத்தகைய நிலைமையைத் தவிர்க்க, அனைவர்க்கும் புத்த சமய இடை வழியைக் கற்பித்தல் வேண்டும். அது உயிர்க்கு ஊறு விளைவிக்காத உயர்ந்த வழி. எண் வகைப் பாதை இந்த இடை வழியின் வழியாகத் தோன்றியதே. மனிதன தன் உட்புற. உணர்ச்சிகளை எவ்வாறு அடக்கிக் கொள்வது என்பதை அது கற்பிக்கின்றது.

சில சமயம் மற்றவரைத் துன்புறுத்தவும், மற்றவரால் துன்புறுத்தப்படவும் மனிதன் விரும்புகிறான். யாரேனும் ஒருவருக்கு ஊறு விளைவிக்காமல், யாரேனும் ஒருவரால் ஊறு விளைவிக்கப் படாமல் மனிதனுடைய உணர்வுகள் திருப்தி அடைவதில்லை. இவ்வுணர்ச்சிகளே மக்களுக்குள் போராட்டங்கள் ஏற்படக் காரணம் ஆகின்றன. புத்த சமய இடைவழியைக் கற்பிப்பதன் மூலம், இவற்றை எல்லாம் நிறுத்த முடியும் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை. இதயத்தையும், மூளையையும் அது சமன் செய்யும். இடை வழியின் விதிகளுக்கேற்ப ஒருவன் தன் வாழ்க்கையை நடத்தினால், மனித உணர்ச்சி முழுதுமே ஒரு சமநிலையை அடையும்.



## உலகின் பெரிய ஆறு

அமெரிக்காவிலுள்ள மிசிசிப்பி ஆறு (மிசோரி என்ற அதன் முக்கிய கிளை நதியோடு) உலகத்திலேயே பெரியது. அதன் நீளம் 4200 மைல்கள்.

# புத்தர் நெறி தமிழ் நெறி

*பல்கலைச் செல்வர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், M.A.,B.L.,M.O.L.*

2500 ஆண்டுகள் – ஏறக்குறைய நூறு தலைமுறைகள்– கழிந்தன! ஆசியச் சோதி– கீழைச்சுடர்– ஞானக் கதிரவன்– புத்தர் பெருமான், தோன்றி எத்தனை காலம் ஆய்விட்டது! ஆனால் நல்லகாலம் பழங்கதையாய்க் கனவாய் ஒழியவில்லை! புத்தர் பிறக்கும் போது எத்தனையோ இயற்கை வியப்புகள் நிகழ்ந்தன எனப் புராணம் பாடியது உண்டு. அவரை அவதாரமாய்க் கடவுளாய்க் காணும் கண் இன்றும் குருடாக வில்லை என்பதும் உண்மை. ஆனால் என்ன நம்புகிறோம்? நம்மைப் போல் மனிதராகப் பிறந்தார்; தாய் வயிற்றில் பிறந்தார்; பெண்ணோடு வாழ்ந்தார்; பிள்ளை பெற்றார். உலகத் துன்பத்தினைக் கண்டு உடலும் உள்ளமும் குழைந்து நின்றார்; அதனை நீக்கும் வழி என்ன என்று அரசமரத்தினடியில் ஞானத்தவம் கிடந்தார். மெய்யுணர்வு தோன்றக் கண்டார். பற்றின் வருவது துன்பம் என உணர்ந்தார். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராய் வாழ்ந்தார். அருள் வாழ்வு வாழ்ந்தார். பற்றினை விடுவது எப்படி? 'உலகினை ஆராய்ந்தால் இமைக்கு இமை மாறுவது தோன்ற வில்லையா' என வினவினார். 'அதனைப் பொருள் எனக் கொண்டு பற்று வைப்பது அழகோ' எனக் கேட்டார். பற்றற்ற நிலை யான் எனது என்ற செருக்கற்ற நிலை, எல்லோரையும் – எல்லாவற்றையும் மன்னுயிரை எல்லாம் தன்னுயிர் எனக்கொள்ளும் நிலை முடிவில் நிர்வாண நிலையை முடிவிலா நிறைவாம் இன்ப நிலையைத் தரும் எனக் காட்டினார்.

வேள்வித் தீயில் பொசுங்கிய ஆடுகளைக் கண்டு நைந்தார். வேள்விகள் மறைந்தன. அருள் ஒளி பரந்தது. ஆட்டுக் குட்டிக்கும் அவர் மனம் உருகிற்று. புலிக்கும் உருகிற்று– இவ்வாறெல்லாம் மக்களுக்குத் தோன்றியது. மக்கள், உடல் தூயராயினர்; செயலில் தூயராயினர், சொல்லில் தூயராயினர்; எண்ணத்தில் தூயராயினர்; பகை ஒழிந்தது; தீமை ஒழிந்தது. அமைதி நிலவியது. அசோகன் போரை வெறுத்து இந்த அருளமைதியை விரும்பி அறவாழி யுருட்டினான். பிற நாட்டினுக்கும் அருள்நெறித் தூதர்களை அனுப்பினான்.

தமிழ் நாட்டிலும் இப்பேரொளி பரவியது. மூன்றாம் நூற்றாண்டிலேயே தென்னாட்டு மலைக்குகைகளில் பௌத்தத் துறவிகள் அருள் வாழ்வு வாழ்ந்து காட்டினர். அக்குகைகளின் கற்களே இந்த வரலாற்றைக் கல்லெழுத்தில் கூறுகின்றன. சங்க காலப் புலவர்களிலும் புத்தர்கள் உண்டு. இளம் போதியார் என்ற பெயர் வரவில்லையா? முது போதியார் ஒருவரும் இருந்தனர் போலும்! ''தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்'' என்ற அரிய சொற்றொடர் புறநானூற்றுப் பொற்றொடர், அன்புத் தொடர், அருள் தொடர், அரிய ஞானத் தொடர்.

குழவிகளிடத் தெல்லாம் இவர்கள் அன்புள்ளம் பாய்ந்தது. பள்ளிக்கூடங்கள் என்ற சொற்றொடர் புத்தப் பள்ளிகளை நினைப்பூட்ட வில்லையா! அறிவுத்தொண்டு மருத்துவத் தொண்டு– ஒவ்வொன்றாய்ச் சொல்லுவானேன்; எல்லா வகையன சமுதாயத் தொண்டு செய்யும் நிலையமே பள்ளி. புத்த சங்கம் குடியரசுக்கு வித்து. பலர்

கூடி ஒரு முடிவு செய்வது எப்படி? தலைமை வகிப்பது யார்? எப்படிக் காரணிகன் என்பது தலைவர் பெயர் என இறையனுர் அகப்பொருள் உரை கூறுகிறது? இருவேறு கொள்கைகள எழுந்தால் எப்படி முடிவு காண்பது? பெரும்பானமையோர் கொள்கையை ஒப்புவது எப்படி? கூட்டத்தின் நடைமுறைகள் எவை? இவற்றை யெல்லாம் அந்தச் சங்கங்கள் இந்நாளைய பாராளும் மன்றங்களைப் போலத் தெள்ளத் தெளிய ஆய்ந்தன. புத்த விகாரங்கள் இன்றைய பெரியகோயில்கள் போல் எழுந்தன. குகைகளிலும் ஓவியக்கலை வளர்ந்தது; சிற்பம் வளர்ந்தது துறவு என்ருல் வாளா கிடத்தல் அன்று; தொண்டு வாழவே ஆம்.

கதைகள் வளர்ந்தன. காவியம் வளர்ந்தது. மணிமேகலை அந்தச் சூழ்நிலையில் புத்தக் கொள்கையர் – பிறகொள்கையர் என்ற வேறுபாடும் அதன் வழியே வாயாடலும் மன்ருடலும் விருப்பும் வெறுப்பும் மிகுந்த காலத்தில் எழுந்தது. இளங்கோ வடிகளுக்குச் சிரிக்க நேரமில்லை சாத்தனுர் வயிறு குலுங்கச் சிரிக்கின்ருர். பௌத்த ரல்லாதாரைக் கண்டும் சிரிக்கின்ருர்.

பொதுமகள் என இகழப்படட குலத்தில் உலகினை உய்விக்கும் தொண்டு வடிவமாக மணிமேகலை துறவுக் கோலம் கொண்டு சிறைக் கோட்டத்தினை அறக் கோட்டமாக்குகின்ருர். அருள்வடிவம் அறவண அடிகள் வழியே அறிவு வடிவமும் ஆகிறது. பெண்ணே ஞானியாகிருள். மணிமேகலை அன்பின் காவியம், அறிவின் காவியம்.

பிற மதங்களின் கொள்கைகளை வெல்லுங் கதையைக் கூறும் வழியே அவற்றை விளக்கும் முறை இங்கே வித்திடுகிறது. நீலகேசி, குண்டலகேசி எனக்கேசி என முடியும் பெயர் கொண்ட காவியங்கள் பிற மதங்களை வெல்லும் கதையைக் கூறும் காவியங்கள் இவை. தமிழ் நாட்டுக் காவிய வகையில் தோன்றும் புதுமை இது. குண்டலகேசி என்பது புத்தர்கள் இவ்வாறு கூறிய கதையாம்.

புத்தர் பெருமகனுர் ஆட்டுக் குட்டிக்கும் உருகிய கதையைக் கவிமணி ஆசியசோதியில் பாடியுள்ளார். பிம்பசார காவியம் என்பது பழைய புத்த காவியம். அதில் ஒரே ஒரு பாட்டுத்தான் கிடைக்கிறது. புத்தப் பெருமக்கள் பல பாடல்கள் பாடியிருத்தல் வேண்டும் என்பது வீரசோழிய உரையால் விளங்குகிறது. வீரசோழியம் எனும் இலக்கண நூலும் புத்த மித்திரனுர் என்ற புத்தப் பெருமகன் தந்ததே.

புத்தமதம் இன்று இந்தியாவில் இல்லை. சீனுவிலும், இலங்கையிலும் உள்ளது. காஞ்சிநகர அரசிளங்குமரன் தியான புத்த மதத்தைச் சீனுவில் சென்று பரப்பினுனும். காஞ்சி நகரத்துத் திங்நாகரும் தருமபாலரும் வடநாட்டு நாளாந்தாப் பல்கலைக்கழகத்தில் தலைமை பூண்டனர். பாஹியான் காலத்தில் எத்தனையோ புத்தப்பள்ளிகள் தமிழ்நாட்டில் இருந்திருத்தல் வேண்டும், ஹ்யூன்சாங் காலத்தில் அவற்றில் பல கண்காணிப் பின்றிக் கிடந்தனவாம். காலம் மாறியமை இதனுல் விளங்கும். ஆனுல் இராசராசன் காலத்திலும் இராசேந்திரன் காலத்திலும், குலோத்துங்கன் காலத்திலும் பர்மா அரசர் நாகையில் புத்தப் பள்ளி நிறுவ ஏற்பாடுகள் நிகழ்ந்தன. பள்ளிச் சந்தங்கள் தரப்பட்டன 19ஆம் நூற்ருண்டில் இதனை அழித்தனர் மேலை நாட்டார்.

புறக்குறிகள் மறையலாம். ஆனுல் இந்தியன் –தமிழன் – உயிர் எல்லாம் உள்ளம் எல்லாம் புத்தர் கொள்கை விளங்குகிறது.


**ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே**
**பேரா இயற்கை தரும்** (*குறள்*)

**ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்**
**ஈசனே டாயினும் ஆசை அறுமின்** (*திருமந்திரம்*)

**அற்றது பற்றெனின் உற்றது வீடு**
(*நம்மாழ்வவார்*)

**அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே** (*திருமந்திரம்*)

இவை தமிழன் உயிர். இன்று காந்தியார் தோன்றினுர் என்ருல் புத்தரின் வழி இவ்வுலகிற் கேற்ற இன்றைய வடிவில் தோன்றியது என்றே பொருள். இந்தியா உலகிற்கு காட்டும் புதுநெறி அசோகன் புத்தர் வழிநின்று காட்டிய அருள்நெறியேயாம்; அமைதி நெறியே யாம். ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்பதுதானே இந்த நெறி; இதுதானே தமிழ்நெறி?



[உதவி: இந்திய அரசாங்கம்]

பிறர்துயரம் நீக்கும்
பெருந்துயரம் விழுங்கியதால்

அறவடிவன் சித்தார்த்தன்
அருந்தவத்தை மேற்கொண்டான்



[உதவி: இந்திய அரசாங்கம்]

வேதனைசார் தவமுயற்சி
வெற்றிபெற உணர்ந்தவுண்மை
யாதெனவே எளிதாக
யாவருக்கும் தரும்புத்தன்

# புத்தர் கதைகள்

ம. ரா. போ. குருசாமி

★

'புத்தர்' என்று குறித்தவுடன் கி. மு. ஐந்தாம் நூற்றுண்டில் இவ்வுலகு தொழத் தோன்றிய ஒரு பெருமானையே நாம் நினைக்கின்ருேம். ஆனுல், பௌத்த நூல்கள் அவருக்கு முன்னும் பல புத்தர்கள் தோன்றியதாகக் கூறுகின்றன. கௌதம புத்தருக்கு முன் இருபத்தேழு புத்தர்கள் அறநெறி பரப்பத் தோன்றியதாக ஒரு சாரார் கூறுகின்றனர். மற்ருெரு சாரார் கௌதமருக்கு முன் பிறந்த புத்தர்கள் இருபத்து நான்கு பேர்களே என்பர். மணிமேகலை இயற்றிய சாத்தனுர், 'இறந்த காலத்து எண்ணில் புத்தர்களும்' என்று பொதுவாகக் குறித்திருக்கிருர்.

○

புத்த பெருமானின் தோற்றத்துக்குத் தெய்வத் தன்மை ஏற்பட்டுள்ளது; ஏனைய சமயத் தலைவர்களின் தோற்றத்துக்கும் புத்தரின் தோற்றத்துக்கும் இது பொது நிலை. துடித உலகம் என்பது பௌத்தர்களின் நம்பிக்கையின்படி முப்பத்தொரு உலகங்களில் ஒன்று. அங்கே பிரபாபாலர் என்ற போதிசத்துவர் இருந்தார். நிலவுலகில் அஞ்ஞான இருள் பரவி, அறவொளி மறைந்த காலத்தில் தேவர்கள் பிரபாபாலரிடத்தில் சென்று குறை கூறி முறை யிட்டனர். அவர்களின் வேண்டுகளை ஏற்றுப் பிரபாபாலர் சித்தார்த்தராகத் தோன்றினுர்.

○

நேபாளத்தின் தென்பால் கங்கை யாறு வரையும் விரிந்து கிடப்பது கோசல நாடு. அந்நாட்டின் தலைநகரம் கபிலவாஸ்து. சாக்கிய குலத்து வேந்தர்கள் அந்நகரில் வீற்றிருந்து செங்கோல் செலுத்தினர். சாக்கிய குல அரசருள் சுத்தோதனர் ஒருவர். அவருக்கு மனைவியர் இருவர். முதல் மனைவியின் பெயர் மகாமாயா; மகாமாயாவின் தங்கை மகாப்பிரசாபதியும் சுத்தோதனரின் மனைவியே. மகாமாயாவின் மகனே புத்த ஞாயிறு என்று உலகு தொழத் தோன்றிய சித்தார்த்தர்.

○

இமயமலைச் சாரலில் பெருந்தவம் புரிந்த சான்ருேராய், முக்காலம் உணர்ந்த முனிவராய் வாழ்ந்தவர் அசித முனிவர். புத்தர் தோன்றுதற் குரிய நன்னிமித்தங்கள் பல ஏற்படுவதைக் கண்டார். தம்முடைய ஞானக் காட்சியால் சுத்தோதனருடைய மகவாகச் சித்தார்த்தர் தோன்றியிருப்பதை அறிந்தார். உடனே கபிலவாஸ்துவுக்கு வந்து தெய்விக மகவைக் கண்டு வணங்கினுர். குழந்தையை மும்முறை வலம் வந்து வணங்கிய பின், கையில் ஏந்திக்கொண்டு கூர்ந்து நோக்கினுர். அவரால் அழுகையை அடக்க முடியவில்லை; விம்மி விம்மி அழுதார். சுத்தோதனருக்கு முனிவர் ஏன் அழுகிருர் என்பது புரியவில்லை. "மன்ன, நான் குழந்தைக்காக அழவில்லை; இந்தத் தெய்விகக் குழந்தைக்கு எவ்விதக் கேடும் வாராது. இக் குழந்தை பிற்காலத்தில் புத்த நிலை அடைவான். புத்தனுய் இவ்வுலகில் அறவொளி பரப்பும்போது நான் உயிரோடு இருக்க

மாட்டேனே என்பதை நினைக்கும்போது தான் எனக்கு வருத்தம் தாங்க முடிய வில்லை. ஏற்கெனவே நான் முதியவன். இக் குழந்தை வளர்ந்து, ஞானம் எய்திப் பிறவா நெறி காட்டும்போது நான் வாழ் வதற்கு வழி இல்லையே'' என்று அசித முனிவர் தம் அழுகைக்கு காரணம் கூறிச் சென்றார்.

○

குழந்தை பிறந்த ஐந்தாம் நாள் பெயரி டும் விழா நடைபெற்றது. விழாவினை நடத்துவதற்கு வந்த நூற்றெட்டுப் பிரா மணர்களில் எண்மர் உடற்குறிகள் கண்டு நிமித்திகம் கூறும் வல்லமை பெற்றவர் கள். குழந்தையின் உடற்குறிகளை ஆராய்ந்த அவர்கள் சுத்தோதனரிடம் பின் வருமாறு கூறினர்: ''முதியோன், பிணி யாளன், பிணம், துறவி ஆகிய நான்கு காட்சிகளை உன் மகன் கண்டால் உலகை வெறுத்துத் துறவு பூண்பான். அந்தக் காட்சிகளைக் காணாதிருந்தால் இவன் உலக முழுதாளும் பெரு வேந்தனாவான். அந்தக் காட்சிகளைக் கண்டு துறவு பூண்டால் உலக முழுதும் தொழத்தக்க பெருமுனிவ னாக ஆவான்.'' இது கேட்ட மனனர் 'என் மகன் கண்ணில் இன்பத்துக்கு உரி யவை தவிரத் துன்பத்தின் சாயலும் படும் படியாக விடமாட்டேன்' என உறுதி பூண் டார். கடுமையான காவலுககு உட்பட்ட கேளிக்கை மாளிகையில் சித்தார்த்தர் இனபப் பணணையின் எழில்மிக்க கொடி யாக வளர்ந்தார்.

○

சித்தார்ததருக்கு அப்போது வயது ஐந்து. சாககிய அரசர்களின் பரம்பரையில் ஆண்டுதோறும் நடககின்ற ஒரு சடங் குககுக் குழந்தை சித்தார்த்தரையும அழைத்துச சென்றனர். அரசருக்கு உரிய நிலத்தைஉழும் தொடக்க விழாச் சடங்கு அது அந்தச் சடங்கின்போது சித்தார்த் தர் அதுவரை கண்டிராத ஒரு காட்சியைக் கண்டார். வயலில் இருந்த தவளையை உணவுக்குப் பிடித்துக்கொண்டான் ஓர் உழவன்; மற்றொருவன் ஒரு பாம்பை அடித்துக் கொன்றான். இந்த இரண்டு செயல்களும் குழந்தையின் இதயத்தில் பதிந்துவிட்டன. 'ஏன், இது ஏன்' என்ற கேள்வியிலேயே ஆழ்ந்த சித்தார்த்தருக்கு யோக நிலை ஏற்பட்டுவிட்டது. பெரிய பெரிய ஞானிகளுக்கே கிட்டும் சமாதிநிலை தம் குழந்தைக்கு எற்பட்டது கண்டு தந்தை தம் மகனுக்கு வணக்கம் செலுத்தினார்.

○

கோடைக் காலத்துக்கு ஒரு மாளிகை; குளிர் காலத்துக்கு ஒரு மாளிகை; மழைக் காலத்துக்கு ஒரு மாளிகை — இவ்வாறு மூன்று அரண்மனைகள் சித்தார்த்தருக் காகக் கட்டப்பட்டன. நூற்றுக் கணக் கில் பணியாளர்களும், இசைக் கலைஞர் கள், கதை கூறுவோர், நகைவேழம்பர்கள், நாடகக் கலைஞர்கள் முதலானவர்களும் அந்த மாளிகைகளிலேயே உடனிருந்து சித்தார்த்தர் மனம்போல் நடந்துவந்தனர். வளமும் வசதியும் அளவுக்கு மீறிய நிலை யில் சித்தார்த்தருக்குக் கிடைத்தன. உள் ளத்தால் மிக மென்மையானவராக வளர்ந்தார்.

○

வயது பதினாறு ஆயிற்று. தம் மக னுக்கு ஏற்ற மனையாளைத் தேடி மணம் செய்விக்க விரும்பினர் சுத்தோதன மன் னர். சாக்கிய குலத்தையே சேர்ந்த யசோ தரை என்ற பெண்ணின் பேரழகு பற்றி எல்லோரும் புகழ்ந்தார்கள். அவளையே சித்தார்த்தருக்குத் திருமணம் புரிவிக்க முடிவு செயதார் சுத்தோதனர். ஆனால் அந்த எண்ணத்திற்கு ஒரு தடை எழுந்தது. எந்தப் பெண்ணையும் அவள் விருப்பத்திற்கு மாறாக எவரையும் திருமணம் செய்து கொள்ளுமாறு மன்னராலும் வற்புறுத்த முடியாது. யசோதரையின் சுயம்வரத்தில் ஏற்படுத்தபபடும் போட்டிகளில் சித்தார்த் தரால் வெல்ல முடியுமா என்ற ஐயம் சுத் தோதனர் மனத்தில் எழுந்தது. கேளிக்கை களுக் கிடையே இன்பமாகச் சித்தார்த் தரை வளர்த்தது இடையூறாக முடிந்ததே

என்று வேதனைப் பட்டார். ஆனால், அவருடைய துயரத்திற்கும் ஐயத்திற்கும் எதிரிடையாகச் சுயம்வரப் போட்டிகள் யாவற்றிலும் சித்தார்த்தரே வெற்றி பெற்றார். யசோதரைக்கும் சித்தார்த்தருக்கும் திருமணம் நடைபெற்றது.

○

ஒருநாள் அரசருக்குச் சொந்தமான பூம்பொழிலுக்குப் போக விரும்பினார் சித்தார்த்தர். அந்தப் பூம்பொழில் நகருக்கு அப்பால் இருந்தது. அரண்மனைக்குப் புறம்பே வருவதுமட்டும்தான் சித்தார்த்தருக்கு இல்லாத உரிமை. அரண்மனை விட்டு வெளியே சென்றால், சித்தார்த்தர் காணக் கூடாத நான்கு தீய காட்சிகளைக் கண்டு விடக் கூடுமே என்று அஞ்சினார் அரசர். சித்தார்த்தரை எவ்வளவு தடுத்தும் அவருடைய உறுதியை மாற்றமுடியவில்லை. நகர் முழுதும் பலமான காவல் இடப்பட்டது. இன்பம் நிறைந்த மக்களைத் தவிர துன்பக் காட்சிக் குரிய எதுவும் இளவரசர் போகும் வழியில் ஏற்படாமல் தீவிரமான நடவடிக்கைகளை வீரர்கள் மேற்கொண்டனர். இவ்வளவு கட்டுக்காவலையும் மீறிச் சித்தார்த்தரின் கண்ணுக்கு எதிரே கூன் விழுந்து நாடி நரம்பெல்லாம் தளர்ந்து கண்ணொளி மங்கிக் கோலும் கையுமாய்—எலும்பும் தோலுமாய் – துன்பத்தின் உருவகமாய் ஒரு கிழவன் வந்து நின்றான். இன்பச் சிறையிலே கிடந்த இளம் சித்தார்த்தரின் நெஞ்சை முதுமையின் தத்துவம் உறுத்திற்று. பூம்பொழிலுக்குப் போகும் எண்ணத்தைக் கைவிட்டார்; உடனே அரண்மனைக்குத் திரும்பினார். கண்ட காட்சி கருத்துக்கு வேதனையாய்—உடல் தளர்ச்சியாய் மூண்டெழுந்தது. மகனின் முகவாட்டம் மன்னரை வாட்டிற்று. நிகழ்ந்ததை அறிந்த மன்னர் மேலும் இன்பக் களரியாகச் சித்தார்த்தரின் மாளிகையை மாற்றினார். பயன் இல்லை.

○

மற்றொரு நாளும் நகர்த் தெருக்களூடு சென்று பூம்பொழிலுக்குப் போக விரும்பினார் சித்தார்த்தர். எல்லாம் முன்போலவே நடந்தது. ஆயினும் பிணியால் துன்புறும் நோயாளி ஒருவன் எப்படியோ தட்டுத் தடுமாறி இளவரசர் முன்னர் வந்துவிட்டான். மீண்டும் சித்தாத்தரின் இன்பப் பயணம் தடைபட்டது. துன்பத்தின் மற்றொரு சாயலை இளவரசரின் இதயம் புரிந்து கொண்டது. செய்தியைக் கேள்வியுற்ற சுத்தோதனர் எழிலொழுகும் அரிவையர் பலரை இளவரசர் திருமுன் அனுப்பி நடனம் ஆடச் செய்தார். இளமை அழகு கலை ஆகியவற்றின் புகலிடமாக இருந்த அந்தப் பெண்களைப் பார்த்தும் சித்தார்த்தர் ''ஐயோ பாவம், இந்தப் பெண்களின் உடலும் ஒரு நாள் தளர்ந்து தொய்ந்து நோயும் நோவும் தாக்குவதால் வேதனைப்பட்டு வாடுமல்லவா?'' என்றுதான் நினைக்க முடிந்தது.

○

இன்னொரு நாள். சித்தார்த்தர் உள்ளத்தில் பழைய விருப்பம் எழுந்தது. எத்தனையோ பாதுகாப்புகள் இருந்தும் நால்வர் சுமந்து சென்ற பிணம் அவர் கண்ணில் பட்டுவிட்டது. உலகிலே இருக்கும் இந்தத் துன்பத்தின் நெடி படராமல் இருப்பதற்கு ஏதேனும் வழி கண்டே தீர வேண்டும் என்ற நினைப்பை இந்த நிகழ்ச்சி அவருடைய உள்ளத்தில் ஏற்படுத்தி விட்டது. மற்றொரு நாள் இப்படியே வெளியே சென்ற பொழுது துறவி ஒருவரைக் கண்டார் சித்தார்த்தர். துறவின் தத்துவம் மனத்தில் பட்டவுடன், 'சரி, இதுதான் சரியான வழி' என்ற முடிவுக்கு வந்தார் சித்தார்த்தர்.

○

துறவு கொள்வது என்று சித்தார்த்தர் உறுதிகொண்ட பொழுது மகன் பிறந்த செய்தியும் வந்தது. அன்று இரவே அரண்மனை வாழ்வைத் துறந்து தவநெறி நோக்கிச்செல்வது என்று முடிவு செய்தார். யசோதரையின் அந்தப்புரத்தில் நுழைந்தார். எங்கும் ஆட்சி செலுத்திய உறக்கம்

அங்கே ஆதிக்கம் செலுத்திக்கொண்டிருந்தது. அஞ்ஞான இருளிலே உலகத்து உயிர்களெல்லாம் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருப்பதுபோல் இருந்தது. தங்களை விழுங்கிக்கொண்டிருக்கும் துன்பத்தையும் உணரமுடியாத அளவுக்குப் புறவுலகம் அறியாமையில் தோய்ந்து கிடந்தது. யசோதரையை எழுப்பித் தம் மகனைக் கையிலே தாங்கலாமா என்று ஒரு கணம் நினைத்தார். அசையாமல் நின்று மனைவியையும் மகனையும் உற்று நோக்கினார். மனைவியின் துயிலை எழுப்புவதைவிட அஞ்ஞான இருளில் அறியாமையில் ஆழ்ந்து கிடக்கும் எண்ணற்ற உயிர்களுக்கு விழிப்பூட்டும் கடமையே பெரிது என்று நினைத்தார் போலும். யசோதரை தூங்கினாள்; இராகுலன் தூங்கினான்; பணிப்பெண்கள் தூங்கினர். அரண்மனையே தூங்கிற்று. எங்கும் ஒரே துயில்; விழிப்புற்ற நெஞ்சைச் சுமந்து கண்டகம் என்ற தம் புரவி ஏறிச் சித்தார்த்தர் நள்ளிரவிலே அரண்மனையை விட்டு வெளியேறிவிட்டார். அவருடைய சாரதி மட்டும் கூட வந்தான்.

○

பொழுது புலர்ந்த பொழுது அநோம நதிக்கரையில் இருந்த ஒரு முனிவரின் ஆசிரமத்தை அடைந்தனர். அங்கே யாரும் இல்லை; ஆனால் துறவிக்கு வேண்டிய கமண்டலம், யோகக் கோல், திருவோடு முதலியன இருந்தன. இயற்கையாய் ஏற்பட்ட இந்தக் காட்சியின் குறிப்பால் சித்தார்த்தர் ஒரு முடிவுக்கு வந்தார். தம்முடைய ஆடம்பர ஆடை அணிகளையெல்லாம் துறந்தார்; எளிய துறவியின் கோலத்தோடு புறப்பட்டுவிட்டார். தம்மிடம் அளவிறந்த அன்பு கொண்ட குதிரையையும் சாரதியையும் கபிலவாஸ்துவுக்கு அனுப்பி விட்டு, முடிவற்ற புதிய பயணத்தைத் தொடங்கினார், சித்தார்த்தர்.

○

பெருந்தவ முனிவர்கள் பலரைக் கண்டு அளவளாவினார். உயிர்களின் துன்பத்தை நீக்கும் வழி என்ன என்று ஒவ்வொருவரையும் கேட்டார். அவர் மனத்துக்கு நிறைவு தரும் விடை எங்கும் கிடைக்கவில்லை. அராளராம முனிவர் என்பவரிடம் யோக நெறி பற்றிக் கேட்டுணர்ந்தார். இனி மற்றவர்களைக் கேட்பதில் பயன் இல்லை என்றும் தாமே தவ வலிமையால் வாய்மையை உணரவேண்டும் என்றும் முடிவு செய்தார். ஆழ்ந்த யோக நெறி எளிதிலே அவருக்குக் கைகூடிற்று.

○

உருவேல வனத்தில் தவம் மேற்கொண்டு உணவு முதலியனவும் துறந்தார். உடலை வாட்டுவதால் உள்ளொளி பெருகும் என்பது அப்போது அவர் கொண்டிருந்த நம்பிக்கை. ஆனால், நாளடைவில் அது தவறான கொள்கை என்று உணர்ந்தார். இன்பத்தின் கேளிக்கையில் ஆழ்ந்து கிடப்பது அவருடைய அரண்மனை அனுபவம்; துன்பத்தின் இலக்காய் உடலை வாட்டுவது உருவேல வனத்து வாழ்க்கை. இந்த இரண்டு துருவ வாழ்க்கைமுறை உண்மையை அறிவதற்கு ஏலாது என்று கண்டார். உண்ணாவிரதத்தை விடுத்தார். அவருடன் தவம் செய்திருந்த ஐந்து முனிவர்கள் ''இவர் பக்கத்தில் இருப்பதுகூடத் தவறு'' என்று வெறுத்து நீங்கினர். சித்தார்த்தர் அவர்களின் பிரிவுபற்றிக் கவலைப்படவில்லை. தமக்கெனத் தாமே வகுத்துக்கொண்ட முறையில் தவம் செய்து கொண்டே வந்தார். தீய நினைவுகளை உயிர்களின் மனத்திலே எழுப்புவதால் தீய நிகழ்ச்சிகளின் நெறியாளனாக உள்ள மாரன் என்னும் தேவன் தன்னுடைய முழு முயற்சியும் கொண்டு அவருடைய தவ முயற்சியில் தளர்ச்சி ஊட்டப் பார்த்தான். காமம், வெகுளி, மயக்கம் யாவும் சித்தார்த்தரைத் தாக்கின; வெல்ல முடியாமல் தலை கவிழ்ந்தன. மாரன் தோற்றான்.

○

நைரஞ்சரை என்னும் ஆற்றின் கரையில் ஒரு வெள்ளரசு மரத்தடியில் கடுங்

தவம் பூண்டு அமர்ந்தார் சித்தார்த்தர். பல நாள் கடுந்தவத்தால் உடல் தளர்ந்தது; எனினும் உள்ளத்து உறுதி குலையவில்லை. அவ்வழியே வந்த சுஜாதை என்ற ஆயர் குலப் பெண் தவம் புரிந்துகொண் டிருந் தவரின் உடல் தளர்ச்சியைக் கண்டாள். எந்தவிதத் தொடர்பும் இல்லாத ஓர் உயிர் வாடுவதைத் காண அவளால் முடிய வில்லை. அருள் ஒழுகும் அவள் சிந்தை சித்தார்த்தருக்கு இரங்கிற்று. பாற்சோறு கொணர்ந்து அவருக்கு ஊட்டினாள். எண் ணிலாக் காலம் தேடித் திரிந்த உண்மை, சுஜாதையின் திருப்பணியால் தெளிவாகி விட்டது. அருள் என்ற தத்துவம் புலப் பட்டவுடன், சித்தார்த்தர் புத்தராகிவிட் டார். அருளின் அடிப்படையில் எல்லா உயிர்களும் இயங்குமாயின்— ஆசை நீக்கி அன்பும் அருளும் பூண்டு வாழின் — அற நெறி கைகூடும்; துன்பம் மாய்ந்தொழியும். இது போதி மரத்தடியில் புத்தர் கண்ட பேருண்மை; பௌத்த மதத்தின் வித்து. புத்தரை உலகுக்குக் கொடுத்த சுஜாதை யின் திருநாமம் வாழ்க!

○

தாம் அறிந்த உண்மையை உலகோருக் கும் கூற நினைத்தார். ஒரு கணம் தயங்கி னார். ''ஆம், நாம் இந்தப் பற்றறும் நெறி யைக் கூறினால் பந்த பாசங்களால் சிக் குண்டு அதுவே இன்பமெனத் தோய்ந் திருக்கும் உலகியல் வாதிகளாகிய மக்கள் ஏற்பார்களா? பெரிதும் துன்பமான முயற்சி யில் நாம் ஈடுபட்டாலும் இந்த உண்மை யின் சிறப்பை அவர்களால் புரிந்து கொள்ள முடியுமா? அரும்பாடுபட்டு நாம் அடைந்த இந்தப் புத்த நிலை அவர்களுக்கு எளிதிலே கைகூடுமா? அவர்களால் இதைப் பாராட்டவாவது முடியுமா?''என்றெல்லாம் நினைத்தார். இந்த நினைப்பை அவர் மனத் தில் உண்டாக்கினவன் மாரன். இது அவனுடைய கடைசி முயற்சி. ''தம் அனு பவம் உண்டு, தாம் உண்டு'' என்று தனியொரு புத்தராகச் சித்தார்த்தர் இருந்து விட்டால், உலகில் பழையபடியே தன் ஆதிக்கத்தைச் செலுத்தலாமே என்பது மாரனின் நினைப்பு. கடவுளர்கள் புத்தரின் தயக்கம் கண்டு நடுங்கினர். பிரம்ம சம் பாதி என்ற தேவன் புத்தர்முன் தோன்றி னான். ''எல்லோருக்கும் விளங்காவிடினும் சிலரேனும் ஞானத் தெளிவுடையவர்களாக இருப்பது உண்மை. அவர்களுக்காக வேனும் அறநெறி பரப்பும் திருப்பணியைத் தாங்கள் மேற்கொள்ள வேண்டும். அவர் கள் வாயிலாக அறத்தின் ஒளி மறையாமல் இருக்கட்டும்'' என்று முறையிட்டான். மாரன் நினைப்பில் இடி விழுந்தது. ''பிறவா நெறி இதோ, அறநெறி வாழ்மின், அருள் நெறி கொண்மின்'' என்று பௌத்தம் ஒலிக்கத் தொடங்கிவிட்டது.

○

வாரணாசி என்னும் காசிக்குச் சென்றார். முன்னே உருவேல வனத்தில் அவரை வெறுத்துச் சென்ற ஐந்து முனிவர்களும் இன்னும் பழைய நிலையிலேயே இருந்தனர். அவர்களுக்கு அறநெறி புத்தரால் துலக்கப் பட்டது. அவர்களே புத்தரின் முதல் சீடர்கள். அதிலிருந்து பௌத்த சங்கம் தொடங்கிவிட்டது.

○

ஊர் ஊராகச் சென்றார் புத்தர். அற நெறி தழைத்தது; சங்கம் வளர்ந்தது. கபிலவாஸ்துவுக்கும் சென்றார். தாம் வாழ்ந்த அரண்மனைக்கும் சென்றார். பற் றின் நிலைக்களமாக இருந்த அந்த மாளி கையினுள் பற்றற்ற துறவியாக நுழைந் தார். நாட்டு மக்களுக்கும் நாடாளும் மன் னனுக்கும் அந்தத் துறவுள்ளம் வேற்றுமை பாராட்டவில்லை. அறநெறி அங்கும் பர விற்று. அரச குலத்தவர் பலர் சங்கத்தில் சேர்ந்தனர். கௌதமரின் செவிலித் தாயும் சிற்றன்னையு மாகிய மகாப்பிரசா பதிக்கு ஒரே மகன் நந்தன். அவனே சுத் தோதனருக்குப் பின் அரசுரிமை ஏற் பதற்கு உரியவன். அவனுக்குத் திருமணம்

நடத்த ஏற்பாடாயிற்று. திருமண அரங்கிலே திடீரென்று தோன்றினுர் புத்தர். அவரை வணங்க எழுந்த நந்தன் கையில் திருவோட்டைக் கொடுத்துச் சிறிது நேரம் தமக்காக வைத்திருக்கச் சொன்னுர். சிறிது நேரம் கடந்தபின், திருவோட்டை வாங்கிக்கொள்ளாமலே புத்தர் புறபட்டு விட்டார். நந்தன் திருவோடு தாங்கி அவரைப் பின் தொடர்ந்தான். பௌத்தப் பள்ளி வந்த பின் புத்தர் திரும்பிப் பார்த்தார். மணக் கோலத்தோடு திருவோடு ஏந்தி நின்றுன் நந்தன். 'நந்தா, நீ துறவு மேற்கொண்டு என்னேடு வரப்போகிருயா' என்று கேட்டார். 'ஆம்' என்றுன் நந்தன்; சங்கத்தில் சேர்ந்து துறவியாஞன்.

○

அரண்மனைக்குப் புத்தர் வந்திருந்த போது ஆடவர் பெண்டிர் யாவரும் அவரிடம் சென்று அறநெறி கேட்டுப் பயனடைந்தனர். யசோதரைமட்டும் வரவில்லை. ''என்தலைவருக்கு நான் சீல முடையவள் என்ற நம்பிக்கையும் உறுதியும் இருக்குமாயின், அவர் நான் இருக்கும் இடத்திற்கு வந்து ஆட்கொள்வார்'' என்று சொல்லி விட்டாள் யசோதரை. அவள் விருப்பப் படியே புத்தர் அவள் இருக்கும் இடத்திற்குத் தாமே சென்று அறநெறியை உபதேசித்தார்.

○

புத்தர் சித்தார்த்தராக இருந்த பொழுது பொன்னும் பொருளும் நிரம்ப உடைய பொருட் செல்வராக இருந்தார். அந்தப் பொருளுக்கு உரியவன் இராகுலன். அவற்றைத் தந்தையாரிடம் கேட்டுப் பெற்று வருமாறு யசோதரை இராகுலனை அனுப்பினுள். அரண்மனை விருந்தினராகத் தங்கியிருந்த புத்தரை இராகுலன் அணுகினுன். அணுகி, ''எனக்குரிய தந்தைவழிச் செல்வத்தைப் பெறுவதற்காக வந்துள்ளேன்'' என்றுன். புத்தர் விடை ஏதும் சொல்லாமல் எழுந்து அரண்மனையை விட்டுப் புறப்பட்டுவிட்டார். இராகுலன் பின் தொடர்ந்தான். பௌத்தப் பள்ளியை அடைந்த புத்தர், 'பொருட்செல்வம் இன்று இருக்கும் நாளையே மறையும். நிலையற்ற பொருட் செல்வத்துக்கு இவன் வாரிசாவதைவிட அழிவற்றதாகிய அறச் செல்வத்தை இவன் அடைவது நலம். போதி மரத்தடியில் நான் பெற்ற செல்வத்தை இவனுக்குக் கொடுத்து அந்தமில் இன்பத்துக்கு உரியவனுக்குவேன்' என்று நினைத்து முடிவுக்கு வந்தார். தம்முடைய சீடர்களை அழைத்து இராகுலனைச் சங்கத்தில் சேர்த்துக்கொள்ளுமாறு சொல்லிவிட்டார்.

○

வேதியர்கள் உயிர்க்கொலை வேள்வியில் நம்பிக்கை உடையவர்கள்; பிறப்பால் சாதியில் உயர்வு தாழ்வு கொள்பவர்கள். இந்த இரண்டு நம்பிக்கைகளும் புத்தருக்கு உடன்பாடானவை யல்ல. அவருடைய செல்வாக்கு வளர வளர வேள்விக்காக உயிர்க்கொலை செய்வதும் பிறப்புவழிச் சாதி வேற்றுமை கொள்வதும் தவறு என்ற கருத்துப் பரவிற்று. வேதியரின் செல்வாக்கு அருகியது. இதனுல் வேதியர்கட்குப் புத்தர்மேல் வெறுப்பு ஏற்பட்டது. ஒரு நாள் குடதந்தன் என்ற வேதியன் எப்படியாவது புத்தரை அவமானப்படுத்தி அவருடைய செல்வாக்கைக் குறைத்து விட வேண்டும் என்ற உறுதியோடு வந்தான். ''ஓ துறவியே! நீர் ஒரு புத்தர் என்று சொல்லிக்கொள்கிறீர்; பேதைகள் அப்படியே நம்புகிருர்கள். ஆனுல், அழிவற்ற ஞானப் பெருஞ் செல்வத்தைப் பெற்றவன் இப்படி உம்மைப் போல் ஆண்டியாகவா வருவான்? அரசரிலும் பேரரசனுன அல்லவோ அழியா ஞானம் பெற்றவன வரவேண்டும்'' என்று கேட்டான் குடதந்தன். ''குடதந்தரே! உமக்குப் புறக்கண்ணும் தெளிவாகத் தெரியாதோ? தெரிந்திருந்தால் உண்மையின் உயர்வும் செல்வாக்கும் உம் கண்ணில் தட்டுப்பட்டிருக்குமே'' என்று விடையிறுத்தார் புத்தர். ''உண்மையா? அது இங்கே

எங்கே இருக்கிறது? காட்டும், நான் பார்க்கிறேன். பாவம், உம்மால் அதை எப்படிக் காட்டமுடியும்? உம்மிடத்தில் உண்மை இருந்தால்தானே காட்டமுடியும்? உம்முடைய உபதேசமெல்லாம் பொய். இன்னும் சிறிது காலம் கொஞ்சம் ஆரவாரம் ஆட்டமெல்லாம் காட்டிவிட்டு மறைந்து போகும். கெட்டிக்காரன் புளுகு என்றைக்குமே உண்மையாகிவிட முடியாது......" என்று எள்ளிப் பேசினுன் குடதந்தன். மேலும், "உண்மையை உபதேசிப்பதாகச் சொல்லிக்கொண்டு நீர் பொய்யைப் பரப்புகிறீர். கடவுளரின் திருமுன்னர் நீர் வேள்வி செய்வதில்லை. இதிலிருந்தே உம் போலித் தன்மை தெரியவில்லையா? வேள்வியை விட முதன்மையானது வேறு ஒன்றுமே கிடையாது என்பதை இனிமேலாவது தெரிந்துகொள்ளும்" என்று பழித்துப் பேசினுன் அந்த வேதியன். புத்தர் அமைதியாகப் பதில் சொன்னுர்: "ஆம் வேள்வியைவிடப் பெரியது ஒன்றுமில்லை என்பது உண்மைதான். ஆனுல் வேள்வி என்பது மற்ற எளிய உயிர்களைக் கொல்வதில் இல்லை. தன்னைத் தான் உணர்ந்து அக மாசுகளை அகற்றியவனுக்கு வாயில்லாப் பிராணிகளைக் கொன்று குவிக்கும் கொலைநெறி வேள்வி ஆகமுடியாது என்பது தெரியும். ஒருவன் எத்தனை உயிர்களை வேண்டுமாயினும் அழிக்க முடியும்; ஆனுல், எவனுலும் ஒற்றை உயிரைக்கூட ஆக்கவோ கொடுக்கவோ முடியாது. அருளின் அடிப்படையில் எழுகின்ற இந்த உண்மையைத் தெரிந்துகொண்டவன் உயிர்க்கொலை வேள்வி செய்யமாட்டான். தன்னைத் தான் பிறரிடம் கரைத்துக் கொள்பவனே உண்மையான வேள்வி செய்கிறுன்". இது புத்தரின் அறவுரை. இந்த ஞான ஒளியில் குடதந்தனுடைய அகவிருள் தொலைந்தது. என்றுலும் ஆணவம் அடியோடு மறையவில்லை. அது சற்றே முனைந்தெழுந்தது. "வேள்வி அப்படி இருக்கட்டும். வேதங்களைப்பற்றி நீர் என்ன நினைக்கிறீர்? அவற்றைத் தெரிந்துகொள்ள வேண்டாமா? நான் எல்லா வேதங்களையும் கற்றுக் கரை கண்டிருக்கிறேன்," என்று பெருமைப் பட்டுக்கொண்டான் குடதந்தன். "வேதியரே, படிப்பது நல்லதுதான்; எதையும் படிக்கலாம். ஆனுல், வெறும் ஏட்டுக் கல்வியிலா உண்மை இருக்கிறது! நெஞ்சின் ஈரத்தோடு உலகை எவனெருவன் நோக்குகிறுனே அவனே உண்மையை அறிபவன் ஆகிறுன். அப்படி உண்மை உணர்பவனுக்கு வேதம் என்ன, எந்த நூலுமே தேவையில்லை. அப்படி உண்மையை உணரமுடியாதவன் எத்தனை வேதத்தைக் கரைத்துக் குடித்தாலும் பயன் இல்லை" என்று புத்தர் சொன்னுர். குடதந்தனுடைய கல்விச் செருக்கும் அழிந்தது. தன்னுடைய தவறுகளுக்காக வருந்திப் புத்த பிரானின் அடியவனுய்ச் சங்கத்தில் சேர்ந்துவிட்டான்.

தாம் கண்ட உண்மையை உலகுளோர் யாவரும் அறிந்து இன்புறவேண்டும் என்ற அருளுணர்வால் புத்தபிரான் ஓயாது அறம் பரப்பும் பணியில் ஈடுபட்டார். அயலவரிடையேமட்டு மன்றி அவருடைய சீடர்களாகிய பிக்குகளிடையிலும் அடிக்கடி எதிர்ப்பும் புறக்கணிப்பும் ஏற்பட்டன. என்ருலும், தம் பெருமிதத்தாலும் அருளாலும் அவற்றையெல்லாம் சமாளித்து வென்று எண்பது வயது வரையிலும் அறநெறியைப் பரப்பினுர். 'நாத் தொலைவு இல்லையாயினும் தளர்ந்து மூத்தது' யாக்கை. மகா நிர்வாணம் என்னும் விடுதலை பெறுதற்குரிய காலம் நெருங்கியதை உணர்ந்த புத்தபிரான் குசிநாரா என்னும் இடத்தை அடைந்தார். அங்கே தம்முடைய இறுதிச் செய்தியைக்கூறி மாநில வாழ்வை நீத்தார். அவர் இறுதியில் கூறிய செய்தி இதுதான்: "பிக்குகளே, இதைத் தெரிந்துகொள்ளுங்கள். எதுவும் நிலையானது அன்று. எல்லாப் பொருள்களும் மாறும், மட்கும், மறையும். இது தவிர்க்கமுடியாதது. அருளொடு முயன்று விடுதலை பெறுக." ○

# இது செய்தி

ஏப்ரல், 16. ஆச்சாரியா விநோபா பாவே வின் நிலக்கொடை இயக்கத்துக்குப் பண உதவி அளிக்குமாறு கோரிப் பெட்ராண்ட் ரசல் உள்பட ஏழு ஆங்கில நாட்டுப் பெருமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஏப், 18. கம்யூனிச அகிலம் கலைக்கப் பட்டு விட்டது என்று சோஷலிச துணைத் தலைவர் அமைச்சர் திரு. மிகோபான் அறிவித்தார்.

சோவியத் முதலமைச்சர் புல்கானி னும், கம்யூனிஸ்ட் கட்சி முதல் அலுவ லாளர் நிகிடா குருஷேவும் லண்டன் போய்ச் சேர்ந்தனர். இங்கிலாந்தில் அவர்கள் நல்லெண்ணச் சுற்றுப் பிரயா ணம் மேற் கொண்டனர்.

ஏப், 19: அஜந்தாவில் புதுக்குகை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அது கி.மு. 2-ஆம் நூற்றுண்டின் 'விகாரா குகை' என்று கூறப்படுகின்றது.

ஏப், 20: கட்டிடங்களுக்கும் மற்றவற் றிற்கும் பயன்படும் தேக்கு போன்ற மரங்களை ஆற்ருேரங்களில் வளர்க்க அரசியாளர் ஒரு திட்டம் தீட்டியுள்ளனர்.

ஏப், 22: சொற்பொழிவுகளைக் கேட்டு அவற்றை வேண்டிய மொழியில் மொழி பெயர்த்துத் தரும் இயந்திரம் ஒன்று லண்டனில் கண்டுபிடிக்கப்படுகின்றது.

ஏப், 23: அமெரிக்காவில் உள்ள 48 மா நிலங்களில் ஓடும் எந்த நெய்யாவி வண்டியிலும் நிறவெறி பாராட்டக் கூடாதென அமெரிக்க உயர்நீதி மன்றம் ஆணையிட்டது.

ஏப், 29: அசோகச் சக்கரம் பொறிக்கப் படாத பண இதழ்கள் (கரன்சிநோட்டுக் கள்) இன்னும் ஆறு திங்கள் வரையே செல்லும்.

ஏப், 30. சிமெண்ட் இறக்குமதி, வழங் கல் ஆகியவற்றின் பொறுப்பை அரசி யலார் மேற்கொள்வர்.

மே, 1: அணு ஆற்றலுக்குப் பயன்படும் மோனசைட்டு மணல் சென்னைக் கடற் கரையில் ஏராளமாக இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

மே, 2: திரு. மகேந்திர வீரவிக்கிரமஷா தேவா நேபாள மன்னராக முடிசூட்டப் பட்டார்.

மே, 4: உயிருடன் உள்ள ஒரு மனை விக்கு மேற்பட்ட பல மனைவியர் உள்ள வர்க்கு அரசியலில் வேலை கிடையாது என்று திருவாங்கூர் - கொச்சி அரசிய லார் ஆணை பிறப்பித் துள்ளனர்.

மே, 7: இந்தியா முழுவதும் 24 மண் ஆராய்ச்சி நிலையங்கள் இந்திய அரசின ரால் ஏற்படுத்தப்படும்.

மே, 8: இந்து வாரிசு உரிமை இன்றிரவு மக்கள் சபையில் நிறைவேறியது. புது மக்கள் சபை முடிவுசெய்யும் நாளி லிருந்து அது இயங்கும்.

மே, 10: புது மாநிலங்கள் அக்டோபர் 15-ம் நாளன்று ஏற்படலாம்.

மே, 13: நிலக் கொடை இயக்கத் தலை வர் அருள்திரு. விநோபா பாவே தமிழ் நாட்டிற்கு வந்தார்.

சந்திர மண்டலத்திலும் அருகிலுள்ள மற்ற கோள்களிலும் இன்னும் 20 ஆண்டுகட்குள் மக்கள் குடியேற்றங் களை ஏற்படுத்த இயலுமென ஜெர்மன் டாக்டர் க்ரஸ்ட் எரிக் நம்புகிருர்.

மே, 14: இரண்டாம் ஐந்தாண்டுத் திட் டம் இறுதியாக உருவாகிக் கையெழுத் தாயிற்று.

மே, 15: தமிழ்நாட்டுப் பெண்டிரிடம் விளங்கும் கோலக் கலையை அருள்திரு விநோபா பாவே புகழ்ந்து பாராட்டினர்.

தந்தி: "கெங்கா—கோயமுத்தூர்" டெலிபோன்: 616.

# ஸ்ரீ கார்த்திகேயா ஸ்பின்னிங் & வீவிங் மில்ஸ் லிமிடெட்

தபால் பெட்டி நெ. 18,

சிங்காநல்லூர் போஸ்ட், கோயமுத்தூர்.

ரிங் கதிர்கள் : 17048

டபிளிங் : 760

கோனிங் : 120



*ரிஜிஸ்டர்டு டிரேட் மார்க்.*

உயர்ந்த ரக 40, 60, 80, ஒற்றை, இரட்டை,

முறுக்கு நூல்கள் தயார் செய்கிறோம்.

40s ஸ்டேப்பிள் நூல் கிடைக்கும்.

*விபரங்களுக்கு:*

**G. ராமசாமி நாயுடு.**

கவர்னிங் டைரக்டர்,

விலாசத்திற்கு எழுதவும்.

டெலிபோன்: நெ. 17.　　　　　　　　　　　　　　　　　　தந்தி: "ரங்க விலாஸ்"

# ஸ்ரீ ரங்க விலாஸ் ஜின்னிங், ஸ்பின்னிங்

அண்டு

# வீவிங் மில்ஸ் லிமிடெட்.

*

(ஸ்தாபிதம்: 1922-ல்)

**ரிஜிஸ்தர் ஆபீஸ்: பூளைமேடு, கோயமுத்தூர்.**

| | | |
|---|---|---|
| மூலதனம் | ... | ரூ. 16,00,000 |
| வெளியிடப்பட்டு வசூலான | | ரூ. 15,02,500 |
| வேலைசெய்யும் மொத்த கதிர்கள்: | | 30,000 |

---

**20 நெ. முதல் 100 நெ. வரை ஜவுளி நூல் திணுசுகள்.**
**பனியன் வகையருக்களுக்கு உபயோகப்படும்**
**கோன் நூல் திணுசுகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன**

---

இன்னும் அதிக யந்திரங்களை வைப்பதற்கு
கட்டிடங்கள் தயாராயிருக்கின்றன.

*

மானேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு பாங்கர்ஸ்:

**பி. எஸ். கோவிந்தசாமி நாயுடு அண்டு சன்ஸ்,**

பூளைமேடு,　　—::—　　கோயமுத்தூர்.

*


**இந்திய மூலதனம், இந்தியக் கைத்தொழிலாகிய இந்த**
**சுதேசித் தொழிலை ஆதரியுங்கள்.**

நல்ல விதைப் பருத்தி விதையும், மாட்டுத் தீவனத்திற்குப் பருத்தி விதையும், குடியானவர்களுக்கும், வியாபாரிகளுக்குப் நியாயமான விலைகளில் சப்ளை செய்கிறோம்.

உரத்திற்கும், மாட்டு உணவிற்கும் ஏற்ற எக்ஸ்பெல்லர் கடலைப் புண்ணுக்கு சரசமான விலைக்கு விவசாயிகளுக்கும் தாராளமாய்க் கொடுக்கப்படும்.

நவீன முறையில் தயார் செய்து சுத்தம் செய்யப்பட்ட திடமான கடலெண்ணெய் நம் தேசம் பூராவிற்கும் சப்ளை செய்வதுமல்லாமல், அயல் நாடுகளின் தேவைக்கும் கணிசமான முறையில் குறித்த காலத்தில் ஏற்றுமதி செய்கிறோம். இதர விபரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்

உணவு தானியம், கரும்பு. பருத்தி ஆகியவைகளின் உற்பத்திப் பெருக்கத்திற்கு மிக அத்யாவசியமாய் வேண்டப்படும் உரமாகிய எக்ஸ்பெல்லர் நிலக்கடலைப் புண்ணுக்கு தயார் செய்கிறோம். கணிசமான அளவில் எல்லோருக்கும் சப்ளை செய்ய ஏற்பாடு செய்கிறோம்.




# ஸ்ரீ ரங்கவிலாஸ் ஜின்னிங் & ஆயில் மில்ஸ்


போன் நெ. 51 தந்தி "ஆயில்மில்ஸ்"

பாப்பநாய்க்கன்பாளையம்

தபால் பெட்டி நெ. 151 கோயமுத்தூர்

SRI RAMAJAYAM

Telegrams: "PIONEER" Telephone No: 160

THE

# COIMBATORE PIONEER MILLS LTD.,

P. B. No. 4,

PEELAMEDU, COIMBATORE.

Started in 1935 with 12,320 Spindles. ★ At Present 23,738 Spindles.

**Founder Partners: Messrs. P. S. G. & SONS.**

Firm has been started with only object of Manufacturing Superior Quality Yarns.

*

**"B" Mills under construction at Perianaickenpalayam for Spinning Low and Medium Counts.**

*

*Manufacturing:*

**40s Carded Yarn—Single—Doubled—Hanks, Cone, Cheese.**
**60s Carded Yarn— ,, — ,, — ,, ,, ,,**
**100s Combed Yarn—Single—Hanks.**
**2/60s — 100% Staple Fibre—Hanks.**

*

**Authorised Capital ... ... Rs. 25,00,000**
**Issued, Subscribed and Paid-up Capital ... Rs. 21,00,000**

MANAGING AGENTS & SECRETARIES:

**Messrs. T. R. Narayanaswamy Naidu & Co.,**

PEELAMEDU, COIMBATORE.